Registered as a Newspaper

NEW MASTER
INSTITUTE
241, Navalar Road, Jaffna
89 A/L
ZOOLOGY
அகஞ்சுரக்கும் தொகுதி
Saturday – 11.30 a.m.

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 3-50

NEW MASTER
INSTITUTE
241, Navalar Road, Jaffna
89 A/L
ZOOLOGY
சிறுநீர்சனனித் தொகுதி
Sat, Sun – 8. 30 a.m.

மலே: 3 யாழ்ப்பாணம் விபவ ஷூ ஆவணி மீ 04 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ் பிறை 06 (20-08-1988) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 24

தமிழர் பிரச்சினைக்கு ஏதேனும் ஒரு வழியில்

# டிசம்பருக்கு முன் தீர்வுகாண இலங்கை அரசு வற்புறுத்து!

## தூதுவர் டிக்ஸிற் மூலம் இந்தியாவுக்கு அறிவிக்கப்பட்டதாம்

கொழும்பு, ஆகஸ்ட். 20

**ஈழத்தமிழர் பிரச்சினைக்கு எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்கு முன்னர் ஏதாவது ஒருவழியில் தீர்வு காணப்படவேண்டும். அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும்.**

**இப்படி இந்திய அரசை இலங்கை அரசு வற்புறுத்தி வருவதாக நம்பிக்கையான வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.**

எதிர்வரும் டிசம்பரில் இலங்கை ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தலை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆகவே அதற்குமுன்னர் ஈழத்தமிழர் பிரச்சினைக்கு ஏதேனும் ஒரு வழியில் ஓர் இறுதித் தீர்வைக் காண்பதற்கு இந்திய அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இலங்கை அரசு இப்படி வற்புறுத்தி வருகிறது.

இந்தியத் தூதுவர் அண்மையில் புதுடில்லி செல்வதற்கு முன்னர் இலங்கை ஜனாதிபதி திரு ஜே ஆர். ஜெயவர்த்தனவைச் சந்தித்தார். அப்போது இதுபற்றி இலங்கை ஜனாதிபதி பிரஸ்தாபித்ததாக அறிய வருகிறது.

ஈழத்தமிழர் பிரச்சினைக்கு இறுதித்தீர்வு ஒன்றை காண்பதற்கான வாய்ப்புகள்ஏற்பட்டால் தான் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற முடியும். ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற்றால் (4 ஆம் பக்கம் பார்க்க)

## அமைதிப்படையினர் 8 பேரைக் காணவில்லை!

### முல்லைத்தீவில் மோதல்

கொழும்பு, ஆக 20

முல்லைத்தீவில் இந்திய அமைதிப் படையைச் சேர்ந்த 8 பேரைக் காணவில்லை என்று அறிவிக்கப்படுகின்றது.

இவர்களில் ஒருவர் அதிகாரி; ஏனையோர் ஜவான்கள் ஆவர்.

இத்தகவலை இந்திய வானொலி நேற்று இரவு அறிவித்தது.

இதனிடையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் போராளிகளின் சில முகாம்களை அமைதிப் படையினர் கைப்பற்றியதாகவும் இம் மோதலில் குறைந்தது 11 (4 ஆம் பக்கம் பார்க்க)

வவுனியா சேமமடுவில்

## ஒன்பது கிராமங்கள் சுற்றிவளைப்பு

வவுனியா, ஆக 20

வவுனியா சேமமடு பகுதியைச் சேர்ந்த 9 கிராமங்கள் கடந்த திங்கட்கிழமை முதல் இந்தியப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டிருக்கின்றன.

இக்கிராமங்களுக்குள் எவரும் செல்லவோ அல்லது வெளியேறவோ அனுமதிக்கப்படவில்லை.

இக்கிராமங்களைச் சேர்ந்த ஆண்கள் அனைவரும் பொது இடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதனால் வீடுகளில் தனித்து விடப்பட்டிருக்கும் பெண்கள் பெரும் பதற்றத்துடனும் பீதியுடனும் வாழ்ந்து வருவ (4 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் 140 பேர் சேமமடுவில் கைது!

வவுனியா, ஆக 20

கடந்த திங்கட்கிழமை காலை சேமமடுப் பகுதியில் இருந்து வவுனியா நகருக்கு வான்களில் வந்த சுமார் 140 பேர் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு ஓமந்தை மகா வித்தியாலயத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை வரை அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை.

இவர்கள் பயணஞ் செய்த ஒரு மினிவான், நான்கு எல்ப் வான்கள் ஆகியவையும் ஓமந்தை மகா வித்தியாலயத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களில் அரசாங்க ஊழியர்கள், கிராம சேவகர் போன்றோரும் அடங்குவர்.

கடந்த புதன்கிழமையன்று இரவு பொது நிறுவனங்களின்பிரதிநிதிகள் மூலம் கைது செய்யப்பட்டவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. (உ-164)

## கைதான விடுதலைப்புலிகளை விடுவிக்க அனுமதி மறுப்பு

சென்னையில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகள் 31 பேரை விடுதலை செய்யும்படி கோரி தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தை சென்னை நீதிமன்றம் ஒன்று நிராகரித்து தீர்ப்பு வழங்கியது.

ஸ்ரீலங்கா இராணுவத்தின் தாக்குதலின்போது கை, கால்களில் ஊனம் அடைந்த விடுதலைப்புலிகளின் சார்பிலேயே இந்த விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது.

ஸியா பயணம் செய்த விமானம்:

## விபத்துக்குக்காரணம் றொக்கட் தாக்குதல்?

இஸ்லாமாபாத், ஆக. 20

பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா–உல்–ஹக் பயணம் செய்த விமானம், றொக்கட் தாக்குதலினால் சிதறியிருக்கலாம் எனத் தற்போது சந்தேகிக்கப்படுகிறது.

விபத்துக்குள்ளான விமானத்தில் இருந்த கறுப்புப்பெட்டி கண்டு எடுக்கப்பட்டிருக்கிறது.

அதில் இருந்து பெறப்பட்ட தகவல்களின்படி விமானம் நொருங்கியதற்கு இயந்திரக் கோளாறு காரணம் அல்ல என்பது தெரிய வந்திருக்கிறது.

விபத்துக்குள்ளான விமானம் புறப்பட்ட விமானத்தளத்தின் ஊழியர்கள் அனைவரும் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

அப்பகுதியில் இலக்கத் தகடு இல்லாமல் காணப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்றையும் பொலீஸார் கைப்பற்றினர். (எ)

### சுபநேரம்

20 – 08 – 88
ஆவணி – 04
சனிக்கிழமை

சுபநேரம்:
03.05முதல் 04.35வரை
ராகுகாலம்:
09.05முதல் 10.35வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
அட்டமி நவமி

## வடமராட்சி கிழக்கில் தொடர்ந்து தேடுதல்

தாளையடி, ஆக 20

வடமராட்சி கிழக்கில் சுற்றிவளைப்பும் தேடுதலும் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை தாளையடி தொடக்கம் வெற்றிலைக் கேணி வரை உள்ள பிரதேசத்தில் சுற்றி வளைப்பும் தேடுதலும் இடம் பெற்றன.

நேற்றுமுன் தினம்(வியாழக்கிழமை) கட்டைக்காடு, ஊரிக்காடு, நித்திய வெட்டை, கேவில், வண்ணாங்குளம் ஆகிய பகுதிகளில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பகுதிகளில் அவ்வேளையில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டிருந்தது

அப் பகுதிகளிலிருந்து உள்ளேயோ வெளியேயோ செல்வதற்கு யாரும் அனுமதிக்கப்படவில்லை. (உ-144)

## கிளிநொச்சியில் ஷெல் தாக்குதல்!

கிளிநொச்சி, ஆக. 20

கிளிநொச்சியிலிருந்து காட்டுப்பகுதிகளை நோக்கி நேற்று இரண்டாவது நாளாக ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

வியாழன் அதிகாலை ஆரம்பமான இந்தத் தாக்குதல் அன்று நண்பகல் வரை நீடித்தது. பின்னர் மாலை 7மணி முதல் ஒரு சில மணி நேரம் தாக்குதல் இடம் பெற்றது.

நேற்றுக் காலையும் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன.

ஷெல்கள் அனேகமாக காட்டுப்பகுதியில் விழுந்து வெடிப்பதாகவே தெரிவிக்கப்படுகிறது.

இதனால் வட்டக்கச்சி, கல்மடு, இராமநாதபுரம், சூரியபுரம், தேவிபுரம், சுதந்திரபுரம் ஆகிய பகுதி மக்கள் பெரிதும் பதற்றமடைந்திருக்கின்றனர். (உ-76-126)

## இளைஞர் ஒருவர் கைது!

வடமராட்சி, ஆக 20

வடமராட்சி திருவில் பகுதியில் அமைதிப் படையினர் நடத்திய சுற்றிவளைப்பின் போது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார். மற்றொருவர் தப்பி ஓடினார்.

இந்தச் சம்பவம் நடந்த புதன்கிழமை மாலை இடம் பெற்றது. (உ-160)

## ஊர்வலம் ஒத்திவைப்பு

புதுக்குடியிருப்பு, ஆக.20

புதுக்குடியிருப்பு அன்னையர் முன்னணியின் ஏற்பாட்டில் நடந்த புதன்கிழமை நடைபெற இருந்த ஊர்வலமும் மகஜர் கையளிப்பும் அப்பகுதியில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டதை அடுத்து ஒத்திவைக்கப் பட்டது. (உ-126)

## தபாலகம் வழமைபோல் செயற்படுகிறது

யாழ்ப்பாணம், ஆக.20

யாழ்ப்பாணம் பிரதம தபாலகம் வழமைபோல் செயற்பட்டு வருகின்றது.

தபாலகத்தில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருக்கும் இந்தியப் பொலீசாரின் எண்ணிக்கை அதிகரிக்கப் பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை யாழ். தபாலக வளவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பையடுத்தே இந்த ஏற்பாடு.

தபாலகத்துக்கு பொதிகள் கொண்டுவருபவர்கள் மட்டும் சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். (உ-10)

## சுட்டுக்கொலை!

வடமராட்சி, ஆக 20

சமூக விரோதச்செயல்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவர் கடந்த வியாழக்கிழமை மாலை தொண்டமானாறு வாசிகசாலைச் சந்தியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

களவு, வழிப்பறிக் கொள்ளை போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்டமைக்காக இவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது என தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (உ-160)

## போராளி கைது!

புதுக்குடியிருப்பு ஆக 20

புதுக்குடியிருப்புப் பகுதியில் இந்திய அமைதிப் படையினர் கடந்த புதன், வியாழன் ஆகிய இரு தினங்களிலும் நடத்திய தேடுதலின்போது, சயனைட் அருந்தி மயங்கிய நிலையில் காணப்பட்ட போராளி ஒருவரைக் கைது செய்தனர்.

இரணைப்பாலைக் கிராமத்தை நோக்கிச்சென்று கொண்டிருந்த படையினரே இந்த இளைஞரைக் கைது செய்ததாகக் கூறப்படுகிறது. (உ-126)

### செய்திச் சாரம்

## அதிகாரியின் திருவிளையாடல்

கொழும்பு. ஆக 20

கொழும்பு இராணுவப் பிரிவு ஒன்றின் அலுவலகத்தில் இருந்து களவுபோனதாகக்கூறப்படும் 15 லட்சம் ரூபா பணம் இராணுவ அதிகாரி ஒருவரின் வீட்டு வளவில் புதைத்து வைத்து இருக்கக் கைப்பற்றப்பட்டது.

பொலிதீன் பைகளில் இப்பணம் கட்டப்பட்டு நிலத்தில் புதைக்கப்பட்டிருந்தது. அந்த இராணுவ அதிகாரி கைது செய்யப்பட்டார். (உ-எ)

## பஸ்சேவை வழமைக்கு

யாழ்ப்பாணம், ஆ - 20

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியூர்களுக்கான பஸ்சேவைகள் இரண்டு நாட்களின் பின்னர்நேற்றுவழமைபோல நடைபெற்றன.

ஜே. வி. பியினரின் ஹர்த்தால் அழைப்பை அடுத்து கடந்த இரண்டு தினங்களாகத் தூர இடங்களுக்கான பஸ் சேவை நிறுத்தப்பட்டிருந்தது தெரிந்ததே. (உ-10)

## வவுனியாவில் ஸியாவுக்கு அனுதாபம்

வவுனியா, ஆக. 20

பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா – உல் – ஹக்கின் மறைவையொட்டி – வவுனியா முஸ்லிம் பள்ளிவாசல் சபையினரின் வேண்டுகோளின் பேரில்- வவுனியா நகரக் கடைகளில் வியாழனன்று வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

மத்தியானத்தின் பின் அதிகமான கடைகள் மூடப்பட்டன. (உ-164)

## யாழ். முஸ்லிம் மஜ்லிஸ் அனுதாபச் செய்தி

யாழ்ப்பாணம் ஆக 20

பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஸியா உல் ஹக்கின் அகால மரணம் குறித்து யாழ். முஸ்லிம் கலாசார மஜ்லிஸ் அதிர்ச்சியும் கவலையும் தெரிவித்துள்ளது.

ஸியாவின் மறைவு குறித்து மஜ்லிஸ் தனது ஆழ்ந்த அனுதாபத்தையும, கவலையையும் தெரிவித்துக் கொள்வதாகவும் அது வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டது.

நேற்று வெள்ளிக்கிழமை ஜும்மாத் தொழுகைக்குப் பின்னர் ஜனஸா தொழுகையும் விசேட துவாப் பிரார்த்தனையும் சகல ஜும்மாப்பள்ளியிலும் நடைபெற்றன. (அ)

## நியமனம் ஊர்ஜிதம்

யாழ்ப்பாணம், ஆ - 20

யாழ் பல்கலைக் கழக துணைவேந்தராக பேராசிரியர் அ. துரைராஜா நியமிக்கப்பட்டுள்ளதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை யாழ் பல்கலைக் கழக வட்டாரங்கள் உதயன் செய்தியாளரிடம் தெரிவித்தன.

## இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், ஆ - 20

படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் இணுவில் தபால்நிலையத்துக்கு அருகில் நேற்று இடம் பெற்றது.

செல்லையா பரமநாதன் (வயது 22)என்ற இளைஞரே காயமடைந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-9)

## லெப்டினன்ட்பலி!

கொழும்பு, ஆக 20

மூதூர், நீலாப்பளை என்னுமிடத்தில் வியாழனன்று நடத்தப்பட்ட தாக்குதலில் இலங்கை இராணுவ லெப்டினன்ட் ஒருவர் கொல்லப்பட்டார்.

## இன்ஸ்பெக்டர் கோபம்

புதுடில்லி, ஆக 20

பாட்டியாலாவில் தற்காலிக வேலை நீக்கஞ் செய்யப்பட்ட பொலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் நேற்றுப் பிற்பகல் சிரேஷ்ட பொலீஸ் அதிபர் சித்தன் தாஸ், பொலீஸ் அதிபர் பல்தேவ் சிங்பிரார் ஆகியோரைச் சுட்டுக் கொன்றார்.

பின்னர் அவர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலையும் செய்து கொண்டார். (உ-எ)

## புதிய தலைவர்

ரங்கூன் ஆக, 20

பர்மாவின் ஆளும் சோஷலிச புரோகிராம் கட்சியின் புதிய தலைவராக திரு. மொங் மொங் தெரிவு செய்யப்பட் (4ஆம் பக்கம் பார்க்க)

## ஹமீத் பங்கு பற்றுவார்

கொழும்பு, ஆக 20

அதிபர் ஸியாவின் மரணச் சடங்கில் இலங்கையின் சார்பில் வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீது கலந்து கொள்வார் என்று அறிவிக்கப் பட்டது. (உ-எ)

## பிடிபட்டனர்

ஒட்டுசுட்டான் ஆக,20

முத்தையன் கட்டுப் பகுதியில் முகாமிட்டிருக்கும் இந்தியப்படையினர் 3 ஆம் கண்டப்பகுதியில் தேடுதல் நடத்திய போது கஞ்சா விறபனையில் ஈடுபட்டிருந்த இருவர் வகையாக மாட்டிக் கொண்டனர்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றது.

கஞ்சா விற்றவரும் அதனை வாங்கியவரும் தற்போது இந்தியப் படையினரின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர். (உ-113)

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Goldi Sausages, Beef, Chicken, Fish, Mutton, Pork, Beef Hot Dogs, Frank furters, Lingus, Powkies, Chicken, Meet balls, Beef Meet Balls, Streaky Bacon, Back Bacon, Special Bacon, Ham. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு கழிவு தரப்படும். தொடர்பு:- Nallur Farm Centre, C/o, நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (C/6062)

Prima Lohmann வெள்ளை சிவப்புப்பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவல் குஞ்சுகள், Golden Comet சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், HY-Line கறுப்பு வெள்ளைப் பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன் கூட்டியே பதிவு செய்யவும். தொடர்பு: Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (சி/6066)

### வீடியோ - கமெரா விற்பனை

Nordmende, Sony National வீடியோ கமெராக்கள், National (180/100), Orient (Portable Deck) ஆகிய வீடியோ கமெரா டெக்குகளும் (நல்ல நிலையில் உள்ளவை) இத்துடன் புத்தம் புதிய Minolta - 7000. கமெரா with Programme Flash (Min-Price - 30,000) உடன விற்பனைக்குண்டு. தொடர்பு விலாசம்:- Seger Recording Bar- நெல்லியடி (Town) (5699)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும், (விசேஷ கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C6107)

### புத்தகம்

A/L 89,90 ''காவியும் அதன் பிரயோகங்களும்'' பிரயோக கணிதம் - படிமுறைப் பயிற்சிநூல் ஆசிரியர்:- சி. துரையப்பா. பல புதிய வினுக்களுட்பட 125 வினுக்களைக் கொண்ட பூரண பயிற்சி நூல். யாழ். கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு நகர புத்தக விற்பனை நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம். (5687)

### மைசூர் No. 1 அரிசி விற்பனை

மிகவும் கைதேர்ந்த தொழிலாளர்களால் சுகாதார முறைப்படி அதிநவீன இயந்திரங்கள் மூலம் தயாரிக்கப்பட்டு விற்பனையாகிறது. No 1 அரிசி. சகலதேவைகளுக்கும் கல் இல்லாத சுத்தம், சுவை, தரம், நிறைந்த மைசூர் No. 1 அரிசியையே உங்கள் அருகாமையிலுள்ள கடைகளில் வாங்கிப் பாவியுங்கள். தயாரிப்பாளர்: மைசூர் அரிசி ஆலை, சுதுமலை, மானிப்பாய். (5807)

## விற்பனைக்கு

### இறைச்சிக் கோழிகள்

Broiler இறைச்சிக் கோழிகள்எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:- Nallur Farm Centre, C/o, நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். [C/6063]

### Dolly Tea டொலி தேயிலை

அதிக சுவை, கூடிய சாயம், நறுமணம்; இலவச ஸ்ரிக்கர் இத்தனைக்கும் உடனே நாடுங்கள்:- டொலி தேயிலை. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். விலாசம்:- டொலி, கல்வயல் வீதி, நுணுவில் கிழக்கு, சாவகச்சேரி. (5660)

### காணி விற்பனைக்கு

வேலணை கிழக்கு பெருங்குளத்திற்கும்வடக்குப் புறமாக புங்குடுதீவு ரோட்டிற்கு அண்மையில் தோட்டமும் வயலுமாக 45 பரப்புக் காணி ஒன்று விற்பனைக்கு உண்டு. உடனே தொடர்பு கொள்க. இல. 330C/o உதயன் யாழ்ப்பாணம். (5904)

## தேவை

மன்னார் சிலாவத்துறையில் பேக்கரி ஒன்றுக்கு அனுபவம் வாய்ந்த பாண் தயாரிப்பவர் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். தங்குமிடவசதிசெய்துகொடுக்கப்படும். இம்மாதம் 31ந் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளவும், சாந்தி பேக் ஹவுஸ். பிரதான வீதி, சிலாவத்துறை. (5818)

### காசாளர் தேவை

புளியங்குளத்தில் உள்ள தேநீர்க்கடைக்கு காசாளர் தேவை. பிணைப்பணமாக ரூபா 1000/- கட்டவேண்டும் வயது எல்லையில்லை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். அத்துடன் சமையலும் தேவை. வி. க. விசைத்தம்பி J. P. தேநீர்க்கடை, முல்லைத் தீவு சந்தி, புளியங்குளம். (5906)

### மணமகன் தேவை

யாழ் இந்து வேளாள குல படித்த 29 வயதுள்ள மகளுக்கு அரச வங்கி கூட்டுஸ்தாபன சுய தொழில் வாய்ப்புள்ளமணமகனைப் பெற்ருேர் எதிர்பார்க்கின்றார்கள் சீதனமாக காசு நகை வீடுவளவு வழங்கப்படும் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். C/o 328, உதயன், யாழ்ப்பாணம். (5857)

### மணமகள் தேவை

யாழ், சைவ வேளாள தாவர போசன செவ்வாய் குற்றமற்ற அரசாங்க Technical officer ற்கு 25 வயதை அணுகும் பெண் தேவை பட்டதாரிகள்/ஆசிரியைகட்கு கவனம் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும் இல 329, C/o உதயன் Jaffna. (5901)

### மணமகள் தேவை

யாழ்/உயர் இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த(வயது33)விவாகரத்து முற்றுப் பெற்ற சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு (TA) சிவந்த அழகுள்ள நற்குணமுள்ள மணமகள் தேவை. ஆசிரியை விரும்பத்தக்கது. கிரகபாவம் 28, தொடர்பு 327, C/o உதயன், யாழ்ப்பாணம். (5698)

## தேவை

### Garments- Vacancy

கொக்குவிலில் இயங்கிக் கொண்டிருக்கும் Garments Centre க்கு சகலவிதமான கட்டிங் தெரிந்த பெண்களும், தைப்பதில் அனுபவம் உள்ள பெண்களும் உடன் தேவை. நேரில் வரவும். தொடர்பு:- Vertex Travels கொக்குவில் சந்தி, கொக்குவில். (5697)

### அச்சக வேலையாட்கள் தேவை

அனுபவம்மிக்க அச்சக எழுத்துக் கோர்ப்பாளர், மெஷின் மைன்டர் தேவை. தகுதிக்கு ஏற்ற சம்பளம் வழங்கப்படும். மேலும் விபரங்கட்கு: ஸ்ரீ மகள் பதிப்பகம் அளவெட்டி (5903)

### மணமகள் தேவை

வெளிநாட்டில் போதிய வருமானத்துடன் தொழில் புரியும் உத்தரட்டாதி நட்சத்திரமுடைய இந்துவேளாள மணமகனுக்கு 38 வயதிற்கு உட்பட்ட மணமகள் தேவை. சாதகக் குறிப்பு உட்பட முழு விபரங்களுடன் கடிதத் தொடர்பு கொள்ளவும். 331 C/o உதயன், யாழ்ப்பாணம். (5907)

## கல்வி

### WIN INN LADIES ACADEMY

மங்கையர்க்கு ஓர் வரப்பிரசாகம், விஞ்ஞான ரீதியிலான மனையியல் வகுப்புகளும் கீழைத்தேய மேலைத்தேய இசை வகுப்புகளாகிய வயலின், வீணை, கிற்றார், ஓகன், வாய்ப்பாட்டு, பரதநாட்டியம் முதலியனவும் தரமான ஆசிரியர்களால் சிறப்பாக கற்பிக்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் காலை9-12 மணி61/1,பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. (5827)

### A/L 89/90

வர்த்தகமும் நிதியும் விசேட வகுப்புகள் நடைபெறுகின்றன. Shamrock Academy, C undikuli, Com.— திரு. ஜெயராமன் Sat/Sun 89—3-00 p m. 90 — 4 00 p m கிழமை நாட்களில் மேலதிக வகுப்புகளும் நடைபெறுகிறது. (5829)

### செயல் நூல் வெளியீடு

தமிழ்-ஆண்டு2 (10/-) கணிதம்-ஆண்டு1 (10/-) கணிதம்-ஆண்டு2 (13/-) சிறுவர்களுக்கான சிறந்த பயிற்சி நூல் பெற்றுக் கொள்ள, திருமதி P. தம்பிராசா ''காணுன்'' நவாலி கிழக்கு மானிப்பாய். (5908)

### தவறிவிட்டது

அடையாள அட்டை இலக்கம் 270471749V பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் பிரயாணம் செய்யும்பொழுது காணமற் போய்விட்டது. உரிமையாளர் பெயர் சுப்பிரமணியம் ஏரம்பமூர்த்தி. பிறந்த தேதி 16-2-1927. பிறப்பிடம்: பருத்தித்துறை. வதிவிடம்: சின்ன உப்போடை, மட்டக்களப்பு. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (5695)

### முகாமில் தங்கியிருந்தவர் கொல்லப்பட்டார்

மட்டக்களப்பு, ஆக. 20

இந்திய அமைதி காக்கும் படை முகாமில் வசித்து வந்த ஆரையம்பதி இளைஞர் ஒருவர் முகாம் சுற்றுடலில் இனந் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். (இ-94)

# வளைகுடா யுத்த நிறுத்தம் இன்று ஆரம்பம்

ஐ. நா, ஆக 19

வளைகுடா யுத்த நிறுத்தத்தை அமுல் நடத்த முதற்கட்டமாக 3 கோடி 60 லட்சம் டாலர் பணம் தேவைப்படுவதாக ஐ.நா. பொதுச் செயலாளர் பெரெஸ் டி குயிலர் அறிவித்திருக்கிறார்.

இதற்கான அனுமதியை ஐ. நா. பொதுச் சபையிடம் அவர் கோரியிருக்கிறார்.

யுத்த நிறுத்தம் இன்று சனிக்கிழமை முதல் அமுலுக்கு வர உள்ளது.

மேற்பார்வை செய்யும் அதிகாரிகளில் ஒரு பிரிவினர் ஏற்கனவே ஈராணுக்கும் ஈராக்குக்கும் சென்றுவிட்டனர்.

24 நாடுகளைச் சேர்ந்த 350 பேர் யுத்த நிறுத்த மேற்பார்வையாளர்களாக பணி புரிய உள்ளனர். (எ)

## ஆக. 28 இல் புதிய செயலாளர் தெரிவு

மதுரை ஆக- 19

ஜெயலலிதாவுக்குப் பதிலாக புதிய பொதுச் செயலாளரைத் தெரிவு செய்ய அ. தி. மு. க அரசியல் பொதுக்குழு இம் மாதம் 28 ஆம் திகதி கூடவுள்ளது.

முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு இதனைத் தெரிவித்திருக்கிறார்.

அ. தி. மு. க (ஜெ) அணி இரண்டாக உடைந்த பின்னர் ஒரு பிரிவுக்கு ஜெயலலிதா இருக்கிறார்.

மற்றப் பிரிவில் ஜெயலலிதாவினால் வெளியேற்றப்பட்ட பண்ருட்டி இராமச்சந்திரன், நாவலர் நெடுஞ்செழியன், திருநாவுக்கரசு அரங்கநாயகம் ஆகியோர் உள்ளனர்.

நால்வர் உள்ள அணியே புதிய பொதுச்செயலாளரை 28-ஆம் திகதி தெரிவு செய்ய உள்ளது. [அ-எ)

## மண்டேலா உயிருக்கு ஆபத்தா?

ஜோஹன்னஸ்பேர்க் ஆக. 19

கறுப்பு இனத் தலைவர் நெல்ஸன் மண்டேலாவின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதா?

இதற்கு இப்போது பதிலளிக்க முடியாது என்று மண்டேலாவின் வழக்கறிஞர் இஸ்மாயில் அயுப் செய்தியாளர்களிடம் தெரிவித்தார் என்று ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

காசநோயினால் பீடிக்கப்பட்டுள்ள மண்டேலா இருமும் போது இரத்தம் வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

திடீரென்று அவருக்கு வயதுபோனவரான தோற்றம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

சிறையில் வைத்து அவரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் தென் ஆபிரிக்காவில் வன்செயல்கள் கட்டுப்படுத்த முடியாத அளவு வெடிக்கும் என்று ராயட்டர் அறிவித்தது (எ)

## பாகிஸ்தானில் அவசரகால சட்டம்

இஸ்லாமபாத், ஆக 19

பாகிஸ்தான் முழுவதும் அவசர காலச் சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை நாட்டை நிர்வகிப்பதற்கு அவசர காலச் சபை ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இச் சபையில் இராணுவ அதிகாரிகளும் சிவில் அதிகாரிகளும் அங்கம் வகிப்பர் என்றும் பதில் ஜனாதிபதி குலாம் இஷாக்கான் தெரிவித்தார். (ஓ)

### தற்கொலை

சாவகச்சேரி, ஆக 20

சாவகச்சேரியைச் சேர்ந்த ஆசிரியை ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

குடும்பத் தகராறே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது [இ-31]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# A/L 89, 90

''காவியும் அதன் பிரயோகங்களும்''

A/L நான்கு வினுக்களிற்கு பயிற்சியளிக்கும் படிமுறைப் பயிற்சி நூல் விற்பனையாகின்றது.

ஆசிரியர்:

சி. துரையப்பா

89, 90 தூய பிரயோக கணித வகுப்புகள் ஆரம்பமாகின்றது.

கொட்டடிச் சந்தி, யாழ்நகர். (5865)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## விஞ்ஞானபீடப் பரீட்சைகள்-1988

1988 ஆம் ஆண்டுக்குரிய முதலாவது அரையாண்டுப் பரீட்சை 12-09-1988 முதல் ஆரம்பமாகவுள்ளது. பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகள் 1988 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்பாக சிரேஷ்ட உதவிப் பதிவாளர், யாழ். பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். மேலதிக விபரங்களை சிரேஷ்ட உதவிப்பதிவாளரிடமிருந்து நேரடியாகவோ அல்லது சுய விலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான 23 செமீ X 10 செமீ அளவுடைய கடித உறையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

- பதிவாளர்

[C 6277]

J. M. J.

# எஸ். பி. அன்ரன்

மகிழ்ச்சியுடன் அறியத்தரும்

## வெளிநாட்டுப் பயண ஒழுங்குகள்

1. சவூதி அரேபியா

சவூதி அரேபியாவின் முக்கிய தலைநகரில் பராமரிப்புக் கம்பனியில் பணியாற்றுவதற்கு 120 வேலைவாய்ப்புக்கள் உண்டு.

2. மாலைதீவு

மாலைதீவு துறைமுகப் பணியாட்கள் வேலை வாய்ப்பு உண்டு இருவாரங்களுக்குள் பயணம் நிச்சயம்

3. சிங்கப்பூர்

கப்பல் வேலை வாய்ப்புக்கள்

4. குவைத்

ஆண் - பெண் தையற்காரர்கள் உடனே தேவை

சம்பளம் ரூபா, 5500/- மற்றும் உணவு, இருப்பிடம்

5. சிங்கப்பூர், கிறீஸ், கனடா, ஓமான்

முதலிய நாடுகளுக்கு வீட்டுப் பணிப் பெண்கள் உடனே தேவை.

மற்றும் சகல விபரங்களுக்கும் உடனே தொடர்பு கொள்ளவும்.

உங்கள் பயண அமைப்பாளர்:

**S. P. ANTON**

இல. 114, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C-6279)

# தபால் மூலம் எண் சோதிட பலன்

வெளிநாடு, கல்வி, தொழில்வாய்ப்பு, விவாகம் போன்ற பலன்களை அறிய தங்கள் முழுப்பெயர், ஜாதகப்பிரதி, காசுக்கட்டளை ரூபா இருபத்தைந்து அனுப்பி ஒரு கிழமைக்குள் பலனை அறிந்து கொள்ளவும்.

ஜாதகக்குறிப்பும் திறமையாகக் கணித்துக் கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**N. K. தீசன்**

மே/ பா. விளானை கல்வி நிலையம் விளானை, காரைநகர். (5866)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



கா. துரைஐயா (சிதம்பரநாதன்) (மயிலிட்டி)

பாரில்: 6- 7- 1928 பரனடியில்: 21- 7- 1988

''தாவி வரும் மழலையைத்
தானணைத்து மகிழ்ந்து
தாயாகி வளர்த்த தந்தை
தனியாக ஓடியதேன்?
கூவியழவிட்டு அன்னை விண் செல்ல
அவளில்லாக் குறை தீர்த்துக்காத்த தெய்வம்
கூறுமல் ஓடியதேன்?
காவடிகள் ஆடிவரும் சந்நிதிபான ஆற்றோரம்
கானம் இசைத்த குயில்
கந்தன் காலடியை நாடியதோ?
தேவி கண்ணகியாள் திருக்கோயில் வாசலிலே
பாடி மகிழ்ந்த குயில்அம்மன்
பாதாரம் தேடியதோ?

'செல்வகம்' வீரமாணிக்கதேவன் துறை மயிலிட்டி.

மக்கள், மருமக்கள், குடும்பத்தினர், உறவினர். (5795)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் செல்லத்துரை சேனாதிராசா (உப முகாமையாளர் இலங்கைவங்கி யாழ்ப்பாணம்)

மலர்வு 1-12-1941 உதிர்வு 31-8-1987

திதி: 20-8-88

குடும்பத்தின் குலவிளக்காய், பாசத்தின் உறைவிடமாய், அறிவின் சுடரொளியாய், நன் நடத்தையின் இலக்கணமாய் வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் ஓராண்டு பிரிந்தீர்கள் என்று நாம் நம்பவில்லை என்றாலும் தங்களது ஆத்மசாந்திக்காக என்றும் பிரார்த்திப்போம்.

மனைவி, பிள்ளைகள்.

கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம். [5822]

# அதிபர் ஸியாவின் திடீர் மறைவு

## பாகிஸ்தானுக்கு லாபமா? நட்டமா?

### ஒரு கண்ணோட்டம்

பாகிஸ்தானில் இருந்து கிழக்கு பாகிஸ்தான் பிரிந்து பங்களாதேஷ் பிறந்தது.

அதன் பின்னர் சுல்பிகார் அலி பூட்டோ பாகிஸ்தானின் பிரதமரானார்.

அவர் தனக்கு நம்பிக்கைக்கு உரிய ஒருவரை இராணுவத் தளபதியாக்க விரும்பினார்.

பாகிஸ்தானின் இராணுவ அதிகாரிகள் வரிசையில் பதினொராவது இடத்தில் இருந்த ஸியா-உல்-ஹக் பூட்டோவின் கண்களில் பட்டார். தனக்கு நம்பிக்கைக்குரியவராக ஸியா இருப்பார் என்று நம்பிய பூட்டோ, ஸியாவை இராணுவத் தளபதியாக்கினார்.

தளபதியான ஸியா 1977இல் இரத்தம் சிந்தாத இராணுவப் புரட்சியின் மூலம் பிரதமர் பதவியில் இருந்து பூட்டோவைத் தூக்கி எறிந்து விட்டு ஆட்சியைக் கைப்பற்றினார்.

'ஆட்சியைப் பிடித்தவுடன் 90 தினங்களில் பொதுத் தேர்தல் நடத்தி மக்களாட்சியை நிலை நாட்டுவேன். எனக்கு ஆட்சியை நடத்த விருப்பமில்லை'— இப்படி ஆரம்பத்தில் சொன்னவர் ஸியா தொண்ணூறு நாள் காலக்கெடு நெருங்க, ஆட்சிப் பொறுப்பைத் தானே வைத்து இருக்க வேண்டும் என்று ஸியா ஆசைப்பட்டார்.

அதன் விளைவு, இராணுவ சர்வாதிகாரியாக ஸியா மாறினார்.

தன்னைத் தானே ஜனாதிபதியாக நியமித்துக் கொண்டார். அது மட்டுமல்ல.

பதவியைப் பறிகொடுத்த பூட்டோ மீது கொலைக் குற்றஞ் சாட்டினார். தன் எதிரியைக் கொலை செய்ய சதி செய்தது என்று பூட்டோ மீது குற்றஞ் சாட்டப்பட்டது.

உலக எதிர்ப்புக்களுக்கு மத்தியில் பூட்டோவை ஸியா அரசு தூக்கிலிட்டது.

இந்த நடவடிக்கை மூலம் இரத்தப்பசி கொண்ட சர்வாதிகாரி என்று உலகம் ஸியாவைக் கணிக்கத் தொடங்கியது.

இஸ்லாமிய, தண்டனை முறையை நாட்டில் அறிமுகப்படுத்தினார் ஸியா.

இந்த நடவடிக்கைகளினால் மேற்கு நாடுகள் மத்தியில் ஸியாவுக்கு நல்லெண்ணம் ஏற்படவில்லை.

இக்கட்டத்தில் ஆப்கனுக்குள் சோவியத் துருப்புக்கள் பிரவேசித்தன.

லட்சக்கணக்கான ஆப்கனியர்கள் அகதிகளாக பாகிஸ்தானுக்குள் நுழைந்தனர்.

சோவியத் துருப்புக்களுக்கு எதிராகப் போராட்டத்தைத் தொடக்கிய ஆப்கன் கிளர்ச்சிக்காரர்களுக்கு புகலிடமும் பயிற்சியும் ஆயுதங்களும் அளிக்க முன் வந்தார் ஸியா.



ஸியா-உல் ஹக்

இதைத் தொடர்ந்தே மேற்கு நாடுகள் ஸியாவை அரவணைக்க ஆரம்பித்தன. ஸியாவின் முன்னைய நடவடிக்கைகளை மேற்கு நாடுகள் மறந்தன; மன்னித்தன.

சர்வசன வாக்கெடுப்பு, கட்சிகள் பங்கு பற்ற முடியாத பொதுத் தேர்தல் ஆகியவற்றை நடத்தி, நாடாளுமன்றத்தைத் தனது கைப்பொம்மையாக்கி வைத்தார்.

முழு அளவிலான இஸ்லாமிய நாடாக பாகிஸ்தானை மாற்றுவதற்கு தனது கடைசிக் காலத்தில் ஸியா திட்டம் இட்டு செயல் பட்டுவந்தார்.

தனது எண்ணத்துக்கு ஏற்ப செயல்படாத காரணத்துக்காக பிரதமர் முகமட்கான் ஜுனஜோவை, பதவியில் இருந்து டிஸ்மிஸ் செய்தார்.

அதன் பின்னரும் 90 தினங்களில் பொதுத் தேர்தல் நடத்துவேன் என்று ஸியா அறிவித்தார். நவம்பர் 16 என்று தேர்தல் திகதியையும் அவர் நிர்ணயித்தார்.

11 ஆண்டுகள் ஆட்சி நடத்திய ஸியா, இறுதி வரை இராணுவ அதிகாரி என்ற மனோபாவத்தைக் கைவிடவில்லை.

தனிப்பட்ட முறையில் பழகுவதற்கு இனியவரான ஸியா, தனது குடும்பத்தின் மீது அளவற்ற பாசத்தை வைத்திருந்தார். விமான விபத்தில் ஸியா மரணம் அடைந்த செய்தி பற்றி, பூட்டோவின் மகள் "எம்மைச் சூழ்ந்திருந்த சாவின் நிழல் அகன்று விட்டது. அவர் மரணம் குறித்து நான் வருத்தப்படவில்லை'' — என்று தெளிவாக மனந்திறந்து கூறியிருக்கிறார்.

இந்த நிலையில் ......

ஸியா மறைவினால் யாருக்கு லாபம்? யாருக்கு நட்டம்? என்பது பற்றி ஆராய்ச்சி நடக்கின்றது.

அமெரிக்காவுக்கு நட்டமா?

ஆப்கன் கிளர்ச்சிக்காரர்களுக்கு நட்டமா?

ஆனால் யாருக்கு லாபம், நட்டம் என்பதை பாகிஸ்தான் மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும். ★

## இப்படியும் சந்தேகம்

இஸ்லாமபாத், ஆக 19

அந்நிய சக்திகள் அதிபர் ஸியாவின் மரணத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்ற சந்தேகம் பாகிஸ்தான் அரசு உயர் மட்டத்துக்கு ஏற்பட்டிருக்கிறது என்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன. (ஒ-எ)





உஷா ஸ்டான்டர்ட்
விலை: ரூபா 1500 முதல் 1575/-வரை

● 36'', 42'', 48'', 56'' அளவுகளில்
● ஒரு அடி நீளமான கீழ்த்தண்டு, இணைப்பு வசதிகள் இரப்பர் புல்லி 2 கவசங்கள், 5 வேக ரெகுலேட்டர் என்பவற்றுடன் பூர்த்தியானது
● மேலதிகமாக ரூ 75/- செலுத்தி மின்குமிழ் ஒன்றை இணைத்துக் கொள்ளலாம்.

அண்மையிலுள்ள உஷா விற்பனையாளரிடம் இன்றே விரையுங்கள் !

தொகையாகக் கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவு

உஷா அலங்கார விசிறிகள்
பென் வண்ணத்திலும் அலங்கார இணைப்புகளுடனும்
விலை ரூ 1750/- முதல் 1975/- வரை

● தேவைக்கேற்ப கண்கவர் மண் நிறத்திலும் வெள்ளை நிறத்திலும்
● கோள்வடிவ மின்குமிழ்

தயாரித்து விநியோகிப்போர்:
உஷா இன்டஸ்ரீஸ் லிமிடெட்
68, அத்திடிய ரோட், ரத்மலானை.
தொலைபேசி: 71-6922, 71-7914, 71-7189

Mar. Ads. 9356


## ஜெயலலிதா இன்றி அ. தி. மு. க; அரங்கநாயகம் அறிவிப்பு

சென்னை, ஆக. 19

"ஜெயலலிதாவுக்கும் மூத்த தலைவர்களுக்கும் இடையே ஒற்றுமை ஏற்படுத்த நடந்த சமரச முயற்சிகள் முடிவடைந்தது. கதவுகள் அடைக்கப்பட்டு விட்டன. இன்னும் ஒரு வாரத்தில் புதிய முடிவு ஏற்படும். அந்த முடிவு ஜெயலலிதாவை புறக்கணித்து விட்டு கட்சியை நடத்துவதாக இருக்கும்'' என்று கட்சியின் தலைமை நிலையச் செயலாளர் அரங்கநாயகம் அறிவித்தார்.

அரங்கநாயகத்தை அவருடைய வீட்டில் நிருபர்கள் பேட்டி கண்டனர்.

கே: ஜெயலலிதாவைப் புறக்கணித்து விட்டு கட்சி என்று நெடுஞ்செழியன் கூறியிருக்கிறாரே? அப்படி என்றால் புதிய கட்சியா?

ப: நாங்கள், கட்சியில் தான் இருக்கிறோம். கட்சியை விட்டுப்போக மாட்டோம்.

கே: ஜெயலலிதாவை மட்டும் எப்படி புறக்கணிப்பீர்கள்?

ப: அவரை (பொதுச் செயலாளராக) எப்படி கட்சியில் கொண்டு வந்தோமோ, அப்படித் தான். (மாவட்டச் செயலாளர்களால்) முன்மொழியப்பட்டு பின்னர் பொதுச் குழுவால் ஏற்கப்பட்டு ஜெயலலிதா பொதுச் செயலாளராக ஆக்கப்பட்டார்.

### கோட்டை செல்ல குதிரை

கே: கோட்டைக்குச் செல்வதற்கு என்னை (ஜெயலலிதாவை) குதிரையாகப் பயன்படுத்தி கொண்டு கோட்டைக்குச் சென்றதும் நொண்டிக் குதிரை தள்ளிவிடப் பார்த்தனர்' என்று ஜெயலலிதா கூறியிருக்கிறாரே?

ப: கோட்டைக்குள் செல்ல எங்களை குதிரையாகப் பயன்படுத்திக் கொள்ள ஜெயலலிதா பார்த்தார். நாங்கள் அதை முன் கூட்டியே தெரிந்து கொண்டு தப்பி விட்டோம் அவருடைய சர்வாதிகாரப் போக்கை புரிந்து கொண்டு விட்டோம். கட்சியில் பிரச்சனைக்கு காரணம் ஜெயலலிதா தான் பிரச்சனையை ஆரம்பித்து வைத்தவரும் அவரே தான். நீண்ட கால திராவிடர் இயக்கத் தலைவர்களை வைத்து கட்சியை ஜெயலலிதாவினால் நடத்திச் செல்ல முடியாது என்பது தெரிந்துவிட்டது. நெடுஞ்செழியன் போன்றவர்கள் கட்சியில் இல்லை என்ற நிலை வரும்போது அந்த கட்சி திராவிடர் இயக்கம் என்ற அடையாளத்தையே இழந்துவிடும். இந்த கட்சியை சில பேர் எம். எல் ஏக்கள் ஆகவும் அமைச்சர்கள் ஆகவும், பயன்படுத்திக் கொள்ளும் ஒரு அமைப்பாகக் கருதுகின்றனர்

### பொலீஸ் விசாரணை

கேள்வி: ஜெயலலிதா விரைவில் உடல்நலம் பெற்று கட்சிப் பணி ஆற்ற வருவார் என்று ஹண்டே கூறியிருக்கிறாரே?

பதில்: அதே ஹண்டேயிடம், ஜெயலலிதா எங்கே இருக்கிறார்? என்ன நோய் என்று நிருபர்கள் கேட்ட போது தெரியவில்லை என்று தான் பதில் கூறியிருக்கிறார். கட்சியில் பெரிய பொறுப்பில் இருக்கும் ஹண்டேக்கே ஜெயலலிதா பற்றிய விபரம் தெரியவில்லை. இரண்டு மாதம் ஓய்வு எடுக்கப் போவதாக ஜெயலலிதா அனுப்பிய கடிதத்தில் அவருடைய கையெழுத்து இல்லை அந்த அறிக்கையே ஜெயலலிதா அனுப்பியது தானா என்று தெரியவில்லை. ஜெயலலிதாவைப் பற்றி நடராஜன் —சசிகலா — திவாகரன் கூட்டத்தாருக்கு மட்டுமே தகவல் தெரியும். அவர்களின் நடுவில் தான் ஜெயலலிதா இருக்கிறார். உண்மையில் ஜெயலலிதாவுக்கு என்ன நிலைமை என்பதை பொலீசாராவது விசாரித்து மக்களுக்குத் தெரிவிகக வேண்டும்.

கேள்வி: எப்படிப்பட்ட சமரசத் திட்டத்தை ஜெயலலிதா ஏற்றுக் கொண்டால் சமரசம் ஏற்படும் என்று கருதுகிறீர்கள்?

பதில்: கட்சித்தலைமை பொறுப்பை கைவிட்டால் சமரசம் ஏற்படும்.

கேள்வி: அப்படிப்பட்ட நிலை இல்லாவிட்டால் அடுத்த நடவடிக்கை எப்பொழுது?

பதில்: இந்த பிரச்சனையில் இன்னும் ஒரு வாரத்திற்குள் முடிவு எடுக்கப்படும். அந்த முடிவு ஜெயலலிதாவை புறக்கணித்து விட்டு கட்சியை நடத்துவதாக இருக்கும்.

கேள்வி: மாவட்டச் செயலாளர்களின் ஆதரவு எப்படி இருக்கிறது?

பதில்: படித்தவர்கள், அரசியல் விவரம் புரிந்தவர்கள் பிரச்சினையை ஒப்புக் கொள்கின்றனர். நாங்கள் எந்தவிதமான நடவடிக்கையிலும் இறங்காமல் இருப்பதால் அவர்களும் வெறுமனே இருந்து வருகின்றனர். நாங்கள் ஒரு முடிவு எடுத்து வழி காட்டும் போது அவர்களும் தெளிவடைவார்கள்.

இவ்வாறு அரங்கநாயகம் கூறினார்.

(எ-4)


A/L 89, 90 மாணவர்களுக்கு ஓர் நற்செய்தி!

வட மாகாணத்தில் மீண்டும்...

விலங்கியல்
தங்கராஜா B.Sc (Hons) (Zoology Special)

வகுப்புகள் நடைபெறவுள்ள இடங்கள்:

இருபாலை, யாழ்ப்பாணம், நெல்லியடி, தெல்லிப்பழை, சாவகச்சேரி.

முழு விவரங்களுக்குமான தொடர்பு:

ESTD:-1973 REGD:- No J/7993
The Express Institute
IRUPALAI - KOPAY

(C/6269)



கையிலே கமரா ஏந்தி
காரிகை இவள் கண் சிமிட்டுவது ஏன்...?



கமராவைக் கையில் பிடித்து எவரும் படம் எடுக்கலாம்...

.... ஆனால் கலையம்சத்துடன் தரமான படம் பிடிப்பது என்பது ஒரு கலை. எல்லோராலும் அது முடியாது.

அது போலவே...

படச்சுருள்களைக் கழுவுதல், பிரதி செய்தல் என்பனவற்றையும் எல்லோராலும் நுட்பமாகவும், நுணுக்கமாகவும், தரமாகவும் செய்து தர முடியாது.

✶ உயர்ந்த தொழில் நுட்பத்துடனும், நுணுக்கத்துடனும் படச்சுருள்களை நவீன கம்பியூட்டர் மூலம், நேரில் பார்ப்பது போன்று மின்னும் தெளிவான கலர் போட்டோ பிரதிகளைப் பெறுவதற்கும்

✶ படச்சுருள்களை முற்றிலும் இலவசமாகக் கழுவுவதற்கும்

✶ ஒரு பிரதிக்கு ரூபா 4-75 மட்டுமே செலுத்தி -

✶ மூன்று முதல் ஐந்து நாட்களில் நம்பிக்கையாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரே இடம்.

ஷப்ரு 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

எல்லா நாட்களிலும் படச்சுருள்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வச் சந்நிதி முருகன் ஆலய
தேர்த் திருவிழாவில் ( 26-08-1988 )
மில்க்வைற் சகாயம்
மில்க்வைற் தயாரிப்புக்கள்
இருபது ரூபாவுக்கு வாங்குவோருக்குப்
பொலித்தீன் பையில் கவர்ச்சிகரமான
பரிசுகள் வழங்கப்படும்.
இன்னும் மேலுறைகளுக்கும்
விசேட பரிசுகள் உண்டு.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

சஞ்சீவி

20- 08 - 1988 சனிக்கிழமை

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலய
தேர்த் திருவிழாவில் (25-8-88)
மில்க்வைற் சகாயம்
மில்க்வைற் தயாரிப்புகள்
இருபது ரூபாவுக்கு வாங்குவோருக்குப்
பொலித்தீன் பையில் கவர்ச்சிகரமான
பரிசுகள் வழங்கப்படும்.
இன்னும் மேலுறைகளுக்கும்
விசேட பரிசுகள் உண்டு.
நாளும் நற்பணி செய்திட
தங்கள் ஆதரவை நாடும்
"மில்க்வைற்"

## 3 ஆவது பிறந்த நாள் வாழ்த்து



### ✶ செல்வி பிரியா ✶

நல்லூர் சங்கிலி வீதியைச் சேர்ந்த திரு. தம்பிஐயா தம்பதியினரின் தவப் புதல்வி பிரியா தனது மூன்றாவது பிறந்த தினத்தை நேற்று அதி விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அம்மா, அப்பா, அப்பம்மா, அப்பப்பா, மாமாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர்கள் பல்கலைகளும் பெற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றார்கள்.

(C/6278)

சிவா
மெக்கானிக்கல் வேக்
✶ குளிர்சாதனப்பெட்டி
✶ மின் விசிறி
✶ மோட்டர்
✶ அயன், மின் அடுப்பு
மற்றும் மின்சாரப் பொருட்கள் உத்தரவாதத்துடன் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.
பிரதான வீதி,
அச்சுவேலி.
[5870]

BECON
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
பகல் நேர வகுப்பு
G. C. E. O/L - 88
2 - ஆவது பிரிவு
ஆரம்பம்: 22-08-88
திங்கள் 7-30 .a .m
கேத்திரகணிதம் - அளவையியல்
தயாபரன்
விஞ்ஞானம் - உயிரியல் பகுதி
[இயைவாக்கமும் சமநிலையும்]
சுகாதாரம்
ரவி
தமிழ்
சமயம் — தாஸ்
சமூகக்கல்வி
வர்த்தகம் — மகேஸ்
ஆங்கிலம் — ஜெயக்குமார்
(C6266)

## இன்று விளையாட்டுப் போட்டி

போவளம் இளைஞர் மன்றத்தினரின் எட்டாவது இல்ல விளையாட்டுப் போட்டி இன்று நண்பகல் 1.30 மணிக்கு நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ். டல் கலைக்கழக விரிவுரையாளர் திரு. கே. சிவகுருநாதன் கலந்துகொள்வார். (உ-73)

## ஒன்பது கிராம....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாகக் கூறப்படுகிறது.

நொச்சிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட ஆண்கள் கைது செய்யப்பட்டு டிராக்டர்கள் மூலம் புளியம் குளம் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். (உ-164)

## டிசம்பருக்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தான் இலங்கை-இந்திய ஒப்பந்தம் எதிர்காலத்தில் முழு அளவில் அமுல் செய்ய வழி ஏற்படும். ஆகவே எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்கு முன்னர் இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண வழி ஏற்பட்டால் மட்டுமே ஒப்பந்தம் அமுல் செய்யப்படுவது உறுதியாகும்- இப்படி இலங்கைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக தெரிய வருகிறது. (உ-21)

## பரீட்சை பின்போடப் பட்டது

யாழ்ப்பாணம், ஆ 20

நாளை நடைபெறவிருந்த கமூன்று நூதரமருத்துவமாதுகளுக்கான வினைத் திறமைகாண் தடைப் பரீட்சை செப்டம்பர் 18 ஆம் திகதிக்குப் பின் போடப்பட்டுள்ளது. (உ-9)

## இன்று பரீட்சை

யாழ்ப்பாணம் -ஆக 20

யாழ் தொழில் நுட்பக் கல்லூரியின் சமூக ஆண்டு வருடாந்தப் பரீட்சைகள் திட்டமிட்டவாறு இன்று நடைபெறும் என கல்லூரி அதிபர் திரு. எஸ். ராஜேந்திரா தெரிவித்தார். (உ-10)

## புதிய..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டார்.

பதினெட்டு தினங்கள் மட்டுமே கட்சித் தலைவராகவும் அரசுத் தலைவராகவும் இருந்து பதவி விலகிய திரு. ஸின்லுவினின் இடத்துக்கே திரு. மொங் தெரிவு செய்யப்பட்டார். (உ.எ)

## அமைதிப்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போராளிகள் உயிரிழந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

இச்சம்பவங்களின் போது ஆறு ஜவான்கள் காயமடைந்தனர். அவர்களில் ஒருவர் பின்னர் இறந்தார். (உ-எ)

பிரபல மின்தறி நிலையத்திற்கு
பெண் நெசவாளர்கள் தேவை
முன் அனுபவம் உள்ளவர்கட்கு தகுதி அடிப்படையில் கூடிய சம்பளம் வழங்கப்படும். புதிதாகப் பயிற்சி பெற்று வேலை செய்ய விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம். தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும். உடனடியாக வேலைகள் வழங்கப்படும். தொடர்பு கொள்ளவும்: No.332 C/O உதயன், யாழ்ப்பாணம்.
(5872)

"ஷப்ரு" கிண்ணம்
அரை இறுதிப் போட்டிகள்
'ஷப்ரு' கிண்ணத்திற்காக
யாழ் ஜொலி ஸ்ரார்ஸ்
விளையாட்டுக் கழகம் நடத்தும்
மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட்
போட்டியின்
அரை இறுதி ஆட்டங்கள்
இன்று சனிக்கிழமை
யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில்
நடைபெறும்.
காலை 8 30 மணி:
யாழ் சென்றலைட்ஸ் வி. க
எதிர்
கொக்குவில் மத்திய சனசமூக
நிலைய வி. க
மாலை 1-00 மணி:
யாழ் ஷப்ரு அணி
எதிர்
யாழ் ஜொனியன்ஸ் வி. க
கிரிக்கெட் ரசிகர்களுக்கு மைதானத்தில்
புதிர்ப்போட்டி ஒன்றும்
காத்திருக்கிறது.
அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

## பாதுகாப்பு அதிகாரம் மாகாண முதல்வர்களுக்கு

கொழும்பு, ஆக. 20

மாகாணங்களின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக மாகாண முதலமைச்சர்களே இனி இருப்பர்.

இதற்கான அதிகாரங்களை முதலமைச்சர்களுக்கு கடந்த வாரம் ஜனாதிபதி வழங்கிவிட்டார் என்று அதிகாரபூர்வ அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



திருமதி வாடாமலர் நடராஜா

மலர்வு: 15-03-1928 — உதிர்வு: 02-08-1987

பாசமுடன் பார்க்கவில்லையம்மா - உங்கள்
பாதத்தை எம் விழிநீரும் நனைக்கவில்லை
காலனவன் கவர்ந்து சென்று
ஓராண்டு ஆனதம்மா
ஆற்றுவாரின்றி அழுகின்றோம்
அன்னிய தேசத்திலே
ஆறுதல் தரவே நாடிவந்த செய்திகளும்
ஆற்றுவாரின்றி அழுத கதை சொன்னதம்மா
உன் கடமை முடிந்ததென்று - அன்று
நீ சண் மறைந்தாய்
எம் கடமையை முடிக்கவில்லையே - என்று
இன்றும் நாம் கண் கலங்குகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தி
அடையப்பிரார்த்திக்கும்
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரங்கள்,

3, பலாலி வீதி,
யாழ்ப்பாணம். (5875)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருவாட்டி
அருளம்பலம் பவளரத்தினம்

மலர்வு:- 2- 6- 1930 — உதிர்வு:- 21- 7- 1988

அன்னையுமாய் அத்தனுமாய்
அமர்ந்ததே அன்பால்
அமுதூட்டி அறிவூட்டி
உயர்வை யூட்டிப்
பன்னரிய பாசத்தின் உருவாய் நின்ற
அன்புத் தெய்வமே!
அன்புடன் அரவணைத்து வளர்த்து
உயர்வளித்த அன்பு அம்மா
திடீரென இறைவனடி சேர்ந்துவிட்டீர்.
தங்களின் ஆத்மா இறையன்போடு
சாந்தியுற நாம் பிரார்த்தனை வழி
இறைவனை வேண்டுகிறோம்.

அன்னாரது அந்தியேட்டிக்கிரியை (21. 8. 1988) ஞாயிறு அன்று நடைபெற உள்ளது. அத்தருணம் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அனுதாபம் தெரிவித்து எமக்கு ஆதரவு தந்த அனைவருக்கும் அன்புடன் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வண்ணம்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சிவபுர வீதி,
வல்வெட்டித்துறை. (5874)

சங்கானை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ.)
வெற்றுச் சாக்குக் கேள்வி விண்ணப்பம்
சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தரம் பிரிக்கப்பட்ட 3000 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்குண்டு. வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்தி விண்ணப்பப் பத்திரத்தை சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
விண்ணப்பப் பத்திரத்தைப் பூர்த்தி செய்து தபால் உறையின் இடது பக்க மூலையில் வெற்றுச் சாக்குக் கேள்வி என எழுதப்பட்டு "பொது முகாமையாளர் சங்கானை ப. நோ. கூ. சங்கம், சங்கானை" என்ற முகவரிக்கு 25-08-88 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
பொது முகாமையாளர்
சங்கானை ப. நோ. கூ. சங்கம்
19-08-88 (C/6282)

## மரண அறிவித்தல்கள்

### அந்தோனிப்பிள்ளை புறூனே கிறிஸ்ரி

அந்தோனிப்பிள்ளை புறூனே கிறிஸ்ரி (பொறியியலாளர்) அகால மரணமானார்.

இவர் திரு. அந்தோனிபிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர் சம்பத்திரிசியார் கல்லூரி) காலம் சென்ற திருமதி மரியராணி அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் அருமைப் புதல்வனும், யூலியன், பிறிற்ரோ, யோசவ், றூபன், அன்ரனெற், மேபல், யூடி ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருமதி ஞானப்பிரகாசத்தின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 20-8-88 சனிக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக பரி. கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
M. அந்தோனிப்பிள்ளை:
195, கடற்கரை வீதி, பாஷையூர்.
(5834)

### திருமதி குஞ்சிப்பிள்ளை வேலுப்பிள்ளை

அல்வாய் வடக்கைச் சேர்ந்த திருமதி குஞ்சிப்பிள்ளை வேலுப்பிள்ளை சிவபதமடைந்து விட்டார். இவர் காலஞ்சென்ற குருசாமி வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் R.N. குணநாயகம் (Retired Valuvation Officer திவ்வியமணிஈஸ்வரநாதன் (Canada) மகாதேவன் (Pyramids Travels Ltd Co.) ஆகியோரின் அன்புத் தாயாரும் தேவநாயகி, விஜயராணி (Canada), குமுதினி ஆகியோரின் மாமியாரும் சிவமோகன் (Canada) குகமோகன் (Hyleys Ltd Co) இராஜேந்திரம், இராஜேஸ்வரி (Canada) சுரேந்திரன், குருபரன் (Canada) திவாகரன் (Canada) சுதாகரன், நிருபா ஆகியோரின் பேத்தியும் கார்த்தீபன் (Canada) கார்த்திகா (Canada) ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 19-8-88 அல்வாய் வடக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
அல்வாய் வடக்கு,
அல்வாய்.
திவ்வியமணி
கனகநாதன்
(5830)

### திரு. சின்னத்தம்பி சிவகுரு பசுபதிப்பிள்ளை

திரு. சின்னத்தம்பி சிவகுரு பசுபதிப்பிள்ளை அகால மரணம் அடைந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும், கனகேஸ்வரி, சொர்ணகாந்தரூபி (யோகம்), கோகிலாம்பாள், காலஞ்சென்ற மனோரஞ்சிதம் (றதி) பாலசுந்தரம், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், பாலகிருஷ்ணன் (ஆராய்ச்சி நிலையம் கிளிநொச்சி) பாலகோபாலன் (சுவிஸ்லாந்து) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ப. நாகரெத்தினம் (ஓய்வுபெற்ற உத்தியோகஸ்தர்) Dr. K. தியாகராசா, S. பூபாலசிங்கம், V. சோமசுந்தரம், சாந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயக்குமார் (கனடா), சிவகுமார், விஜயமாலினி, சுரேஸ்குமார், சூரியகுமார், சந்திரகுமார், நந்தகுமார், சதீஸ்குமார், விஜயகுமார், ரஞ்ஜினி, வாசுகி, பிரபாகரன், கிருபாகரன், ஜெகதீஸ்வரன், ஆனந்தகௌரி, ஜெகதீஸ்வரன், பிரதீஸ்வரன், மனோகௌரி, சுபாஜினி ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கொக்குவிலில் 20-8-88 சனிக்கிழமை இன்று பகல் 10 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள்
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(5877)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 20-08-1988 இல் Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் - கொழும்பு
விமான சேவை விசேட போக்குவரத்து வசதியுடன் தினசரி நடைபெறுகிறது.
முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.
TELEX MESSAGES, கடிதங்கள், சிறு பொதிகள் விமான மூலம் அனுப்பப்படும்.
MACK TRAVELS
1st - Lane, Pt - Pedro Road, Jaffna.

சஞ்சீவி சஞ்சிகை
20-08-1988 சனிக்கிழமை

★ குறைந்த கட்டணத்தில் விமான டிக்கற் CONFIRMATION, RECONFIRMATION and CANCELLATION
★ பாஸ்போட் பொண்டிங் இந்தியன் விசா,
ஆகியவைக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.
MACK TRAVELS
Jaffna.

கருத்துக் கலசம் — கலூரா

## கிராம அபிவிருத்தி

கிராமங்கள்தான் ஒரு நாட்டின் அடித்தளமானவை. அந்த நாட்டின் சிறப்பு, செழிப்பு, வளர்ச்சி, வளம், கலை, பண்பாடு, கலாசாரம், வாழ்க்கை முறை, பொருளாதாரம் ஆகிய பலவற்றையும் பிரதிபலிப்பவையும் கிராமங்களே. நாட்டின் மகத்துவத்தைப் பிரதிபலிக்கும் நிலைக்கண்ணுடியும் கிராமங்கள் தான்!

நாகரிக வளர்ச்சியில் நாடுகள்தோறும் நகரங்களை மனிதர்கள் நிர்மாணித்தார்கள். மாடமாளிகைகள், கூட கோபுரங்கள், கோட்டை கொத்தளங்கள், வானுயர் கட்டடங்கள், ஆலைகள், வர்த்தக நிலையங்கள், நிர்வாக அலுவலகங்கள் என்று நகரங்கள் பொலிவுடன் விளங்குவது உண்மைதான். அரசும், ஆட்சி அலுவலகங்களும் நகரங்களில், தலை நகரங்களில் அமைவதால் நாட்டின் எல்லாப் பகுதி மக்களும் நகரங்களுக்குச் செல்லவேண்டிய தேவையும் ஏற்படுகிறது. அதனாலும் நகரங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன.

காலத்தேவைகளை ஒட்டி அரசுகளும் நகரங்களை அபிவிருத்தி செய்வதிலேயே அதிக கவனம் செலுத்தின; செலுத்துகின்றன.

கிராமங்களை அபிவிருத்தி செய்யவும், அங்கு வாழும் மக்களின் வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றவும் அரசுகள் பின்னிற்பது கண்கூடு.

கிராமங்கள் வனப்பு மிக்கவை. வளம்கொழிப்பவை. இயற்கைத்தன்மை மிகுந்தவை. கிராமங்களின் இயற்கைத் தன்மையைக் கெடுக்காமல், அவற்றின் வளங்களை இனங்கண்டு அவற்றை அபிவிருத்தி செய்வது அவசியம். கிராமப் பொருளாதாரத்தை வளர்ப்பது பிரதானம்.

கிராமங்களை அபிவிருத்தி செய்தல் என்பது அவற்றை அழித்து நகரங்களாக்குதல் அல்ல. கிராமங்களின் தனித் தன்மையும், வனப்பும் எழிலும் பாதிக்கப்படாத விதத்தில் அவை அபிவிருத்தி செய்யப்படவேண்டும். கிராமங்களின் சுற்றுப்புறச் சூழல் மாசுபடாது காப்பதும், அவற்றின் இயற்கைத் தன்மை பேணப்படுவதும் முக்கியம்.

கிராம அபிவிருத்தி கிராமியத்தைப் பாதுகாக்கும் முறையில் அமைய வேண்டும். கிராமங்களே நாடுகளின் ஆணிவேர் என்பதை மறந்து நாடு நகரத் திட்டங்கள் வகுத்துவிடலாகாது.

இயற்கை எழில் கொஞ்சும் கிராமங்கள், பல்வளம் கொழிக்கும் கிராமங்கள் நாட்டின் முதற் செல்வம். அதனை வளர்ப்பதில் மட்டுமல்லாது பேணுவதிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

நகரங்கள் — செயற்கை; கிராமங்கள் — இயற்கை. இயற்கையில் இருந்துதான் செயற்கை பிறக்கின்றது. இயற்கையே நிரந்தரமானதும் ஆகும். எனவே கிராம அபிவிருத்தி, திட்டமிட்டுக் கவனமாக, கண்ணும் கருத்துமாகச் செய்யப்பட வேண்டிய ஒன்று. ★

# மனிதப் பண்புடையவனே உண்மை மனிதன் மற்றோர் மனித உடம்பு எடுத்த விலங்குகளே

மனிதன் என்ற சொல்லுக்கு நினைப்பவன் என்பது பொருள்.

நினைக்கும் கருவி மனம், மனத்தையுடையவன் மனிதன்.

தமிழில் மனிதன்.

வடமொழியில் மனுஜா.

ஆங்கிலத்தில் மான்.

இவை எல்லாம் 'மன்' என்ற பகுதி அடியாகவே பிறந்தவை. மன் தனாகப் பிறந்தவர் எல்லோரும் உண்மையில் மனிதனாகிவிட முடியாது.

உணவைப்பற்றியோ, உறக்கத்தைப்பற்றியோ, வேறு மற்ற உலகப் பொருள்களைப் பற்றியோ நினைப்பன் மனிதன் ஆகமாட்டான்.

உண்பது, உறங்குவது, மக்களைப் பெறுவது, உலாவுவது முதலிய யாவும் விலங்குகளுக்கும் நமக்கும் பொது.

விலங்குகளும் நிரம்ப உண்கின்றன; நாமும் உண்கிறோம். விலங்குகளும் மக்களைப் பெறுகின்றன; நாமும் பெறுகின்றோம். ஆகவே மனிதர்களாகிய நாம் எந்த வகையில் விலங்குகளை விட மேலானவர்கள் என்ற கேள்வி எழுகின்றது.

நான் யார்?

நான் எங்கிருந்து வந்தேன்?

எதற்காகப் பிறந்தேன்?

இந்த உடம்பு தானே வந்ததா? தந்தவன் தன் பொருட்டுத் தந்தானா?

நான் எங்கே போகவேண்டும்?

இந்த உடம்பைத் தந்த ஒருவன் தன்மை யாது?

அவனை அடையும் வழி யாது? அடைந்தவர்கள் யார்?

இவ் வினாக்களை உள்ளுக்குள் கேட்டுக்கொண்டு, அவை பற்றி ஆழமாக நினைத்துத், தகுந்த விடைகளை அறிந்து அறவொழுக்கத்தில் நிற்பவன் தான் உண்மை மனிதன்.

இல்லையேல் அவன் மனித உடம்பு எடுத்த விலங்குதான்.

ஒரு மாவட்டத்திற்கும் மற்றொரு மாவட்டத்திற்கும் என்னவேற்றுமை? நடுவில் ஒரு எல்லைக்கல் இருந்து இரண்டு மாவட்டங்களையும் பிரிக்கின்றது.

அதுபோல் மனிதனுக்கும் விலங்குக்கும் இடையில் இட்ட எல்லைக்கல் கடவுள் நினைவு.

கடவுள் உணர்வு இல்லையானால் அவன் எத்துணை அறிஞனாயினும் விலங்கே.

அருள்மொழியரசு திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களுக்கு நாளை 83ஆவது பிறந்ததினம்.

சமயச்சொற்பொழிவு என்றால் ஆயிரக்கணக்கில் மக்களை வரும்படிசெய்து மணிக்கணக்கில் அவர்களைக் கேட்கச்செய்யும் ஒருவர் இருக்கிறார் என்றால் அது அற்புதத்திலும் அற்புதம். அந்த அற்புதத்தைச் சாதித்தவர் வாரியார் அவர்கள்.

மிச்சிறந்த முருகபக்தரான அவர் ஆலயத் திருப்பணியிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டிருக்கிறார்.

இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து சமயத்துக்கும் தமிழுக்கும் அவர் தொண்டு செய்யவேண்டுமென்று சைவத் தமிழுலகம் வாழ்த்துகிறது.

'கண்ணுவா ரேனுமுனைக் கைதொழாராயின் அந்த மண்ணுவார் நட்பை மதியேன் பராபரமே' — என்கிறார் தாயுமானார்.

திருவொற்றியூரிலே நெல்லிக்காய்ப் பண்டாரத் தெருவில் ஒரு மகான் இருந்தார்.

மாலையிலே ஒற்றித் தியாகப் பெருமானை வணங்கும் பொருட்டு மக்கள் போகும் போது அம்மகான், 'குதிரை போகின்றது', 'எருமை போகின்றது', 'நாய் போகின்றது', 'ஆடு போகின்றது', 'புலி போகின்றது', 'நரி



திருமுருக கிருபானந்தவாரியார்

போகின்றது', 'பூனை போகின்றது', பெருச்சாளி போகின்றது' என்று கூறுவாராம்.

'இராமலிங்க அடிகளார் போனால் மட்டும் 'மனிதன் போகின்றான்' என உரைப்பாராம்.

ஆகவே மனிதப் பண்புடையவனே மனிதன்.

மேலை நாட்டில் ஒரு பெரியவர் பகலில் விளக்கையேந்திக் கொண்டு உற்று உற்றுப் பார்த்துத் திரிந்தாராம்.

வீதியில் போகின்றவர்கள் 'இவருக்கென்ன பைத்தியமா? பட்டப்பகலில் விளக்கை ஏந்திக்கொண்டு போகின்றவனையும் வருகின்றவனையும் உற்று உற்றுப் பார்க்கின்றாரே? இதன் கருத்து என்ன?' என்று கூறிப் பரிகசித்தனர்; சிலர் சிரித்தனர். சிலர் இகழ்ந்தனர். சிலர் 'ஓய், இது என்ன வேலை?' என்று வினவினார்கள்.

''ஐயா! வேறு ஒன்றுமில்லை, மனிதர் யாராவது இருக்கின்றாரா என்று ஆராய்ந்து பார்க்கின்றேன்'' என்றார். ஆகவே எல்லோரையும் மனிதராக அவர் கருதவில்லை என்று தெரிகிறது.

அப்பரடிகளும் உலகத்தை நோக்கி,

''மனிதர் காளிங்கே வம்மொன்று சொல்லுகேன் கன்னித் தந்தாற் கனவுண்ணவும் வல்லாரே புனிதன் பொற்கழல் ஈசனெனுங்கனி இனிது 'சாலவு மேசற் றவர்சட்கே'' என்று பாடி மனிதர்களை அழைக்கிறார்.

ஆகவே, நாம் மனிதர்களாக ஆகவேண்டும், பொன்னையும், பொருளையும், ஆட்டையும், மாட்டையும், நிலபுலன்களையும், பதவியையுமே நினைந்து நெஞ்சு புண்ணாகி மடிந்துவிடக் கூடாது.

முதலில், குறிப்பிட்ட நேரங்களில் இறைவனை நினைக்க வேண்டும். பின்னர் நாள் செல்லச் செல்ல நல்ல சாதனையால் இடையறாது இறைவனை நினைக்கவேண்டும்.

''இறைவனே! உன்னை மறந்தால் இறந்து போவேன்'' — என்கிறார் அப்பர்.

இறைவன் நினைப்பவர்களுடைய உள்ளத்தைக் கோயிலாகக் கொண்டு எழுந்தருளுவான்.

ஒரு மந்திரி, அல்லது கலெக்டர் நம்முடைய வீட்டிற்கு வந்து சில நிமிஷம் இருந்து சென்றால் அதனைப் பெருமையாக நினைக்கிறோம்.

இறைவன் நமது உள்ளத்தைக் கோயிலாகக் கொண்டு உறைவானாயின் அதைவிடப் பெருமை வேறு ஒன்று இருக்க முடியுமா? நன்கு சிந்தியுங்கள். ★

# ஆத்மஞான வழிகாட்டி

## ஞானபண்டிதன் ஆறுமுகன்

சுப்பிரமணியர் என்ற சொல்லுக்கு ஆத்ம ஞானத்தைத் தேடுபவர்களுக்கு உதவுபவர் என்று பொருள்.

பரம்பொருளான சிவனை அடைவதற்கு சுப்பிரமணியர் உதவுகிறார்.

சுப்பிரமணியரை அறிவது சிவனை - பரம்பொருளை அடைவதற்குச் சமம்.

தன்னை அறிந்தால் தலைவனை அறியலாம்.

ஆகவே, சுப்பிரமணியரைத் தியானிப்பது ஒருவர் தன்னுள் அடங்கியிருக்கும் சக்தியை அறிவதற்கு ஒப்பாகும்.

சுப்பிரமணிய அவதாரத்தில் எத்தனையோ தத்துவங்கள் அடங்கியுள்ளன.

தீப்பொறிகள் குழந்தைகளாக உருமாறின என்பது, உயிரற்ற ஒன்று உயிருள்ளதாகப் பரிணமமாகும் விஷயத்தைத் தெளிவுபடுத்துகிறது.

சுப்ரமணியருக்கு ஆறு முகங்கள் இருப்பதில் தத்துவம் உள்ளது. மனிதனுடைய பஞ்சேந்திரியங்களும், மனமும் சேர்ந்து ஒத்துழைத்தால் தான் அவன் பந்தபாசங்களில் இருந்து விடுபட்டு ஆத்மஞானம் பெறுகிறான் என்பதைக் குறிக்கின்றன அவருடைய ஆறுமுகங்கள்.

ஆத்மஞானத்தை அடைய யோகசாஸ்திரத்தில் ஆறுநிலைகள் சொல்லப்பட்டுள்ளன

மனித உடம்பின் ஆறு நிலைகளில் படிப்படியாக ஏறி ஆத்மஞானத்தை அடைய வேண்டும்.

சுப்பிரமணியரின் கையில் இருக்கும் ஆயுதங்களில் முக்கியமானது வேல். சக்திவேல் என்பார்கள். சூரனைக் கொல்வதற்கு அம்பிகையே தன் மகனுக்குக் கொடுத்த ஆயுதம் அது. 'அச்சம் அகற்றும் அயில்வேல்' என்பார் குமரகுருபர சுவாமிகள்.

சுப்ரமணியரின் வாகனம் மயில். தன் தோகையைக் குறித்துத் தற்பெருமை கொண்டாடும் பறவை மயில். இது சுப்பிரமணியரின் வாகனமாக எப்படிப் பொருந்தும்? அதற்கும் அழகான விளக்கம் இருக்கிறது.

ஆத்மஞானம் தேடுபவன் தன் ஆத்மாவைப் பற்றித் தற்பெருமை கொள்ளவேண்டும். பரமாத்மாவின் ஓர் அம்சமான ஜீவாத்மா தான் என்பதில் பெருமை வேண்டும் என்பதைத் தெரிவிக்கத் தன் தற்பெருமை கொள்ளும் மயிலை வாகனமாகக் கொண்டாராம் சுப்ரமணியர்.

மயிலின் கால் இடுக்கில் சிக்கித் தவிக்கும் பாம்பு மனிதனின் சாதாரண இச்சைகளையும், தான் என்ற அகங்காரத்தையும் குறிக்கின்றது.

ஆத்மஞானத்தைத் தேட சுப்பிரமணியனின் அருள்வேண்டும். அதற்கு, 'தான்' என்ற அகந்தை அழிய வேண்டும்.

முருகன் என்ற சொல்லுக்கு அழகான விளக்கம் தருகிறார் நக்கீரர். 'மணங் கமழ் தெய்வத்து இளநலம் காட்டி' என்றார். முருகன் என்ற சொல்லுக்குப் பொருள் மணம், தெய்வத்தன்மை, இளமை, அழகு இவைதாம்.

சுப்ரமணியன், கந்தன், முருகன், ஞானபண்டிதன் எந்தப் பெயரால் அழைத்தாலும் பலன் ஒன்றுதான். நமக்கு ஆத்மஞானத்தை அளிக்கிற பரம் பொருள் அது. ★

# இருபத்தோராம் நூற்றாண்டில் தமிழ் இப்படி இருக்கும்!

தமிழ் எழுத்துக்கள் காலந்தோறும் மாறிமாறிவந்துள்ளன என்பதற்குக் கல்வெட்டுகளும், செப்பேடுகளும் சான்றுகள்.

எழுதுகோல், எழுதும் பொருள் ஆகியவற்றுக்கு இணங்க எழுத்துக்கள் மாற்றமடைந்தன.

அச்சுக்கலை வந்தபிறகு எழுத்துக்கள் இன்றைய உருவத்தைப்பெற்றன.

தட்டச்சு, தொலையெழுதி, கணணி ஆகியவற்றுக்கு ஏற்ப எழுத்துக்களைச் சீரமைப்பது எ தமிழ்மக்களின் அறிவியல் முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும் என்று கருதப்படுகின்றது.

இத்திட்டத்தின்கீழ் அண்ணா பல்கலைக்கழகமும் ஹிந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனமும் ஒருங்கிணைந்து அமைத்த, கம்பியூட்டரால் இயங்கும் இருமொழித்தொலையெழுதி (Bi-lingual Teleprinter) பயன்படுத்தும் தமிழ் வரி வடிவங்கள் கீழே தரப்படுகின்றன.

21ஆம் நூற்றாண்டில் தமிழ் எழுத்துக்கள் இப்படித்தான் அமையவிருக்கின்றன.

அறாவாயல், தொழால் நாட்பம், மற்றாம் கல்வாயறாவாத் தாறைகளால் நூல்களை உராவாக்காவதென்பதா தமாழால் ஒரா பாதாய இலக்காயத் தாறையைப் படைப்பதற்கா ஒப்பாகாம். எனவே அதற்கென ஒரா நடை, ஒரா பாரம்பாரயம் உராவாக வேண்டாம். பல நூல்கள், பலவல்லாநர்களால் எழதப்பட்ட பான்னர்தான் ஒரா தாறையால், இலக்காயம் உராப்பெறாகாறதா. அறாவாயல் தமாழ் ஆக்கம் ஒரா நெடாய பயணம்! இதால் நாம் காடாம் தாண்ட வேண்டாயாராக்காம்! கடலாம் தாண்ட வேண்டாயாராக்காம்! கால்நடைப் பயணமாம் தேவை! கப்பலாம் தேவை. வழாக்கேற்ற வாகனத்தை நாம் ஏற்க, உராவாக்க நமதா மொழாக்கொள்கை இடந்தா வேண்டாம்.

**தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஆங்கிலம் - தமிழ் இணைந்த புதிய டெலிபிரிண்டரில் வரும்போது பின்வருமாறு அமைகிறது.**

அறாவாயல், தொழால் நாட்பம், மற்றாம் கல்வாயறாவாத் தாறைகளால் நூல்களை உராவாக்காவதென்பதா தமாழால் ஒரா பாதாய இலக்காயத் தாறையைப் படைப்பதற்கா ஒப்பாகாம். எனவே அதற்கென ஒரா நடை, ஒரா பாரம்பாரயம் உராவாக வேண்டாம். பல நூல்கள், பலவல்லாநர்களால் எழதப்பட்ட பான்னர்தான் ஒரா தாறையால், இலக்காயம் உராப்பெறாகாறதா. அறாவாயல் தமாழ் ஆக்கம் ஒரா நெடாய பயணம்! இதால் நாம் காடாம் தாண்ட வேண்டாயாராக்காம்! கடலாம் தாண்ட வேண்டாயாராக்காம்! கால்நடைப் பயணமாம் தேவை! கப்பலாம் தேவை. வழாக்கேற்ற வாகனத்தை நாம் ஏற்க, உராவாக்க நமதா மொழாக்கொள்கை இடந்தா வேண்டாம்.

டெலிபிரிண்டர் வாசகம் இப்போதைய தமிழில் பின்வருமாறு அமையும்;

''அறிவியல், தொழில்நுட்பம், மற்றும் கல்வியறிவுத் துறைகளில் நூல்களை உருவாக்குவதென்பது தமிழில் ஒரு புதிய இலக்கியத் துறையைப் படைப்பதற்கு ஒப்பாகும். எனவே அதற்கென ஒரு நடை, ஒரு பாரம்பரியம் உருவாக வேண்டும். பல நூல்கள், பல வல்லுனர்களால் எழுதப்பட்ட பின்னர்தான் ஒரு துறையில், இலக்கியம் உருப்பெறுகிறது. அறிவியல் தமிழ் ஆக்கம் ஒரு நெடிய பயணம். இதில் நாம் காடும் தாண்ட வேண்டியிருக்கும்; கடலும் தாண்ட வேண்டியிருக்கும்; கால்நடைப் பயணமும் தேவை. கப்பலும் தேவை. வழிக்கேற்ற வாகனத்தை நாம் ஏற்க, உருவாக்க நமது மொழிக் கொள்கை இடம்தர வேண்டும்''— (எ-4)



## ஆடல் புரிவது தெரியாதோ

தூவி மயில்கடல் போல, அதன் மிசை
ஞாயி றெனநிமிர் வடிவாலும்
தோளில் அசைகடம் பாலும் அடியவர்
தூவு பிறமலர் வகையாலும்
ஆவி உனதடி மேவி சிறிதும்வி
டாது சுழலுவ தறியாயோ?
ஆகம் உனதரு ளான கடலிடை
ஆடல் புரிவது தெரியாதோ!
தேவர் படுதுயர் யாவும் பொடிபட
சேனை யொடுகளம் புகுநாளில்
தீய அவுணர்கள் மாய நெடுமரம்
சாய விடும்ஒரு வடிவேலா!
கோவில் களில்தலை யாய எழில்திகழ்
கோலம் அமைநல்லை அமர்வோனே!
கூடும் அடியவர் பாடும் இசைமழை
ஊடு நனைகிற பெருமாளே!

— சோ. பத்மநாதன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலூட்டி வளர்த்த கிளி

சஞ்சீவி சிறுகதை

கார்க்கதவு 'படீர்' என்று சாத்தும் சத்தம்கேட்டு சமையலறையில் இருந்து முன் ஹோலுக்கு வந்தாள் பவானி. நேரத்தைப் பார்த்தாள். மணி பன்னிரெண்டு.

காரில் இருந்து இறங்கிய அவள் கணவன் இராமநாதன் முகத்தில் வீசிய கோபக்கனலைக்கண்டு மலைத்துப்போனாள். இந்த இருபத்தைந்து வருட மணவாழ்க்கையில் இப்படியான கோபத்தை அவர் முகத்தில் அவள் கண்டதில்லை.

'என்னங்க, ஒரு மாதிரியாயிருக்கிறீங்க. என்ன நடந்தது?' என்று கேட்டாள்.

'இனி என்ன நடக்க வேணும். நம்ம பெண் எங்க தலையில மண்ணைப் போட்டிட்டாளே' என்றார். சொல்லும் போதே கோபத்தால் அவர் குரல் நடுங்கியது.

பதறிப்போனாள் பவானி. 'வத்சலாவுக்கு என்னங்க நடந்தது?' பயத்தால் நிற்க முடியாது அருகில் இருந்த சோபாவில் அமர்ந்து கணவன் முகத்தைப் பார்த்தாள்.

'யாரோ ஒரு பரதேசிப் பயலைக் கல்யாணம் செய்யப் போகிறாளாம்.'

மகளின் உயிருக்கோ, உடம்பிற்கோ எவ்வித ஆபத்தும் இல்லையென அறிந்த பவானி சற்று மனம் ஆறுதலடைந்தாள்.

'யாரோ சொன்னதைக் கேட்டு வீண் கோபம் அடையாதீங்க. குழந்தை அப்படியெல்லாம் செய்யமாட்டாள்' என்றாள்.

'யாரும் சொல்லவில்லை. நானே நேரில் பார்த்தேன். என் காதாலேயே கேட்டேன். சிலநாட்களுக்கு முன் டிரைவர் சொன்னான். நான் நம்பவில்லை. இன்றைக்குக் காரில் அவளைத் தொடர்ந்து ஹோட்டலுக்குச் சென்று பக்கத்து அறையில் இருந்தேன். வத்சலாவின் குரல் தெளிவாகக் கேட்டது. 'எப்பவேணுமானாலும் உங்களுடன் வரத்தயார்' என்று சொன்னாள். 'இதுக்கு மேல் வேறென்ன புறாவ் வேணும்'

பவானியால் தன் காதுகளையே நம்பமுடியவில்லை. தன் குழந்தை வத்சலாவா இப்படியெல்லாம் சொன்னாள் என்று திகைத்துப் போனாள். 'யார் பையன் என்று தெரியுமா?' என்று கேட்டாள்.

'என் கொம்பனியில் வேலை செய்தவன். சகல கெட்ட குணங்களும் கொண்டவன். போனமாதம் அவனை டிஸ்மிஸ் பண்ணிவிட்டேன். எனக்கெதிராக வழக்குப் போட்டிருக்கிறான். என்னை ஒழித்துக் கட்டப் போவதாகச் சொல்லித் திரிகிறான். அப்படிப் பட்டவனைத் தான் இவள் கல்யாணம் செய்யப் போகிறாள்'

கணவன் சொன்னதைக் கேட்டு மலைத்துப்போய்ச் சிலையாய் நின்றாள் பவானி. ஒரே பிள்ளையென்று மிகவும் செல்லமாக வளர்ந்தவள் வத்சலா. தந்தை மேல் உயிரையே வைத்திருந்தாள். இரவு படுக்கப் போகும் போது கூட, இந்த வயதிலும் தந்தைக்கு முத்தம் கொடுத்து விட்டு, 'குட்நைட்' சொல்லிவிட்டுத் தான் உறங்கப் போவாள். காலையில் தந்தையின் முகத்தில்தான் விழிக்க வேண்டும் என்பது அவள் விருப்பம். இராமநாதன் அவள் அறைக்குப் போய் எழுப்பும் மட்டும் எழுந்திருக்கமாட்டாள். அவளா இப்படிச் செய்வது?

பவானிக்குக் கணவனை நிமிர்ந்து பார்க்கவே அச்சமாய் இருந்தது. 'நீங்க எதுக்கும் பொறுமையாயிருங்க. வத்சலா வரட்டும். பேசிப் பார்க்கலாம்' என்றாள்.

'பேச என்ன இருக்கு? வத்சலா வரட்டும். இன்றைக்கே அவனோடு போய்விடு என்று வீட்டை விட்டு விரட்டி விடுறேன். இப்ப நான் மாடிக்குப் போறேன். யாரும் என்னை டிஸ்ரொப்பண்ணவேண்டாம். போன் வந்தா மேலே போடாதே' என்று சொல்லிவிட்டு மாடிப்படி ஏறினார்.

கணவனின் போக்கைப் பார்த்துத் திகைத்துப்போன பவானி 'உடுப்பை மாத்திட்டுச்சாப்பிட வாங்க' என்றாள்.

மாடிப்படிகளில் ஏறியவர் நிதானித்து நின்றார். மனைவியை ஊடுருவிப் பார்த்தார்; மகள் மேலுள்ள பாச உணர்வுகள் நெஞ்சில் அலைமோதின. 'சாப்பாடா? எனக்கா? என்னால் சாப்பிட முடியுமா? இனி எனக்கேன் சாப்பாடு, நான் உயிருக்குயிராக வளர்த்த என் குழந்தை என்னை விட்டு யாருடனோ ஓடிப் போகத் தயாராகிவிட்டாள். பவானி, அவளை என்னால் பிரிந்து இருக்க முடியாதே. அவளைப் பார்க்காமல் இருக்க முடியாதே' ஆத்திரத்தில் கத்திச் சத்தம் போட்டவர் இப்போ சிறு குழந்தை போல் கண்கலங்க நின்றார்.

கணவனின் கண்கள் கலங்குவதைக் கண்டு பதறிப் போனாள் பவானி. அவள் நெஞ்சே வெடித்து விடும் போல் இருந்தது. கணவன் முகத்தில் சிரிப்பைத்தவிர வேறெதையுமே பார்த்திராத பவானி கணவன் பிள்ளைப் பாசத்தால், மனம் வெந்து, உள்ளம் கலங்கி வேதனைப் படுவதைப் பார்த்து அவளுக்கும் அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. அதைக் கட்டுப்படுத்த சேலைத்தலைப்பால் கண்களைத் துடைத்தவாறே 'எல்லாம் நல்லபடி நடக்கும், முருகன் கைவிடமாட்டான். அவளோடு கோபப்படாம, இதமாகப் பேசி வழிக்குக் கொண்டு வரலாம்' என்றாள்.

பவானியின் கனிவான பேச்சு அவருக்கு ஆறுதல் அளித்தது. மாடிக்குப்போய் உடைகளைக் களைந்து விட்டுக் கட்டிலில் சாய்ந்தார்.

அவர் மனம் தீவிரமாகச் சிந்தித்தது. இந்தப் பிரச்சினையை எப்படி அணுகுவது? இதற்குச் சரியான அணுகுமுறை என்ன? வீட்டை விட்டுத் துரத்தினால் மட்டும் பிரச்சினை தீருமா? பவானி சொல்வதுதான் சரி. ஆத்திரப்படக்கூடாது, அவசரப்படக்கூடாது, நிதானத்தை இழக்கக்கூடாது. பொறுமையாய்ப் பேசி மகளை வழிக்குக் கொண்டு வர வேண்டும். இப்படியான ஒரு நிலைப்பாட்டிற்கு அவர் வந்ததும் அவர் மனப்பாரம் பெரிதும் குறைந்தது. கட்டிலில் சாய்ந்து படுத்திருந்தவர் பார்வை கபினெட்டில் இருந்த விஸ்கிப் போத்தலின் மேல்பட்டது, நண்பர்களை உபசரிப்பதற்காக வாங்கி வைத்திருந்தார். சாதாரணமாக அவர் பாவிப்பதில்லை.

மெதுவாக எழுந்து ஒரு டம்ளரில் அரைவாசிக்கு விஸ்கியை ஊற்றினார். பின்பு சோடாப் போத்தலை திறந்து அதற்குள் ஊற்றி நிரப்பினார். டம்ளரைக் கையில் எடுத்து, முகத்துக்கு நேரே பிடித்து ஒரு கணம் உற்றுப் பார்த்தார். கடைசியாக எப்போது குடித்தோம் என்று யோசித்துப்பார்த்தார். அவருக்கு ஞாபகம் வரவில்லை.

டம்ளரை வாயருகில் கொண்டுபோய்ப் பருக முனையும் போது அவர் சிந்தனையில் பொறி தட்டியது. நிதானத்துடனும், பொறுமையுடனும் குழந்தையுடன் பேச வல்லவா நான் காத்திருக்கிறேன். எப்படி ஆரம்பிப்பது? என்ன பேசுவது? என்றல்லவா யோசித்துக் கொண்டிருக்கிறேன். விஸ்கி நிதானத்தை இழக்கவல்லவா செய்யும். ஒரு முடிவுக்கு வந்தவராக அதை வாஷ்பேசினில் ஊற்றினார்.

அந்த நேரத்தில் அறைக் கதவு திறந்தது. பவானி கையில் டம்ளருடன் உள்ளே வந்தாள். ''சாப்பிடாம இருக்கிறீங்க! ஹோர்லிக்ஸ் கலந்து கொண்டு வந்திருக்கிறேன். இதையாவது குடியுங்க'' என்று சொல்லி நீட்டினாள்.



இராமநாதன் மனைவியை ஒருகணம் கனிவுடன் பார்த்தார். எனது மனம் அறிந்து, குறிப்பறிந்து நீ செய்யும் கடமைகளுக்கு என்ன கைமாறு செய்யப் போகிறேனோ தெரியவில்லை என்றார். அவர் குரலில் பாசமும், கனிவும் இருந்தன.

'பெரிய வார்த்தையெல்லாம் சொல்றீங்களே உங்களுக்குப் பணிவிடை செய்வதைத்தவிர வேற வேலை எனக்கு என்ன இருக்கு? மனம் குழம்பாமல் இருங்க. வத்சலா நாங்க சொல்கிறபடி கேட்பாள்' என்றாள்.

பவானியின் வார்த்தைகள் அவருக்குப் பெரும் நிம்மதியை ஏற்படுத்தின; ஹோர்லிக்ஸைக் குடித்தவாறே யன்னலூடாக வெளியே பார்த்தார்! வத்சலா வருவது தெரிந்தது. 'குழந்தை வாறாள் நீ கீழே போ' என்று பவானியை அனுப்பினார்.

வீட்டுக்கு வந்த வத்சலா நேரே மாடிக்குப் போனாள். அப்பா ஏற்கனவே வந்துவிட்டார் என்பதைத் தெரிந்து இருந்த வத்சலா நேரே அவர் அறைக்குப் போனாள்.

கட்டிலில் படுத்திருந்து யோசித்துக் கொண்டிருந்த தகப்பனைக் கண்டதும் 'ஏனப்பா ஒரு மாதிரியாக இருக்கிறீங்க. உடம்பு சரியில்லையா?' என்று கேட்டாள்,

'எனக்கு உடம்பு சரியம்மா. மனசு தான் சரியில்லை' என்ற தகப்பனின் முகத்தைக் கவலையோடு பார்த்தாள். பின்பு 'மிரட்டல் கடிதம் ஏதாவது வந்ததா' என்று கேட்டாள்.

இராமநாதன் திகைப்புடன் நிமிர்ந்து உட்கார்ந்தார். 'இதைப் பற்றியெல்லாம் யார் சொன்னது?' என்று கேட்டார்.

'எனக்கு எல்லாம் தெரியுமப்பா. சொல்லுங்க'

'இல்லையம்மா அப்படியொன்றும் இப்போ வாறதில்லை. உனக்கு நல்ல சம்பந்தம் வந்திருக்கு கனடாவில் டாக்டராக இருக்கிறார். உனக்குக் கல்யாணம் செய்யணும் நீ சம்மதிப்பாயோன்னு தான் யோசனை'

சம்பந்தமா? கனடாவில் மாப்பிளையா, என்னப்பா திடீரென்று கல்யாணப் பேச்சு; என்னை உங்களிடம் இருந்து பிரிச்சுடறதிலே ஏன் தீவிரம் காட்டுறீங்க. உங்களால் என்னைப் பிரிந்து இருக்க முடியுமா? என்னாலே முடியாதேப்பா' அவள் குரல் நடுங்கியது.

மகளின் வார்த்தைகளால் உணர்ச்சி வசப்பட்டுப்போன இராமநாதன் 'வருத்தப்படாதேம்மா. வெளியூர் மாப்பிளை வேண்டாம் என்றால் இங்கேயே நல்ல மாப்பிளை பார்க்கிறேனே' என்றார்.

'சரியப்பா உங்க இஷ்டம். ஆனால் இப்போ கல்யாணத்திற்கு என்ன அவசரம்?

'உண்மையைச் சொல்லம்மா. மனசிலை யாரையாவது நினைத்து வைத்திருக்கிறாயா'?

'ஏனப்பா அப்படிக் கேக்கிறீங்க'?

'யாரோ சொன்னார்கள். நீ அந்தக் கயவன் பாஸ்கரோடு சிநேகமாமே' என்று கேட்டார்.

இந்தக் கேள்வி வத்சலாவை உலுக்கி விட்டது! அவள் யோசனையில் ஆழ்ந்தாள். யன்னலுக்குவெளியே மரங்களுக்கு அப்பால் திரண்டுவரும் முகில் கூட்டங்களில் அவள் பார்வை சென்றது. பின்பு சிரிப்பை வரவழைத்தபடி 'மனம் சரியில்லை என்பதன் காரணம் இப்போ புரியுதப்பா. கல்யாணப் பேச்செல்லாம் வெறும் சினிமா வசனம் என்பதும் புரிகிறது' என்றாள்.

'அப்பா நீங்கள் டிஸ்மிஸ் செய்த பாஸ்கரன் கெட்டவன். கொலை செய்யவும் அஞ்சாதவன். உங்களுக்கு மிரட்டல் கடிதம் போட்டதும், உங்களை ஒழித்துக்கட்டுவேன் என்று சொல்லித் திரிந்ததும் எனக்குத் தெரியும், அவனை எப்படியும் மடக்கவேண்டும் என்று திட்டம்போட்டேன். அந்த நோக்குடன் அவனுடன் நட்புப்பூண்டேன். அவனைப் பற்றி அவனுடைய நடவடிக்கைகள்பற்றிச் சகலதும் அறிந்தேன். அவன் பெரிய கடத்தல்காரன். அதுமட்டுமன்றி பல வங்கிக்கொள்ளைகளுக்கும் பின்னணியில் இருந்திருக்கிறான். அவன் வாயாலேயே எல்லாத் தகவல்களையும் பெற்று, அவனுக்குத் தெரியாமல் 'டேப்' பண்ணினேன். இப்போதுதான் பொலீஸிடம் கொடுத்தேன். பொலீஸ் இந்நேரம் அவனை அரெஸ்ட் பண்ணியிருக்கும். குறைந்தது பத்துவருடச் சிறைத்தண்டனையாவது கிடைக்கும்' மூச்சுவிடாமல் வத்சலா சொல்லிக்கொண்டிருக்கையில் கதவுமறைவில் நின்று எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த பவானி ஓடிவந்து 'நான் பாலூட்டி வளர்த்த கிளி எங்களை விட்டுப்பறந்து போகாது' என்று சொல்லி மகளை அணைத்துக்கொண்டாள்.

மனம்பூரித்துப்போன இராமநாதன் 'எனக்குப் பசி எடுக்கிறது, குழந்தைவாம்மாசாப்பிடலாம், பவானி சாப்பாட்டை ரெடிபண்ணு' என்று சொல்லியபடி கட்டிலை விட்டு எழுந்தார் ★

- வில்வம் பசுபதி -


## யாழ். நகர வாசிகளே!

காலையில் எழுந்ததும் உதயன் வாங்குவதற்காகக் கடைக்குச் செல்கிறீர்களா?

உங்களுக்கு ஏன் அந்தச் சிரமம்?

**உடனடியாக உதயசேவையில் சேர்ந்துவிடுங்கள்!**

விடியும் வேளை உதயன் உங்கள் வீடு தேடி ஓடி வருவான்!!



**உதயசேவை**

இலவசம்! இலவசம்!!

யாழ். மாநகர பிரதேசத்திற்குள் வதியும் வாசகர்களுக்கு

**விநியோகக் கட்டணம் எதுவுமில்லை.**

தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்:

விநியோக முகாமையாளர்,
உதயன் / சஞ்சீவி
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


# "யாதும் ஊரே"....பாடிய புலவர் கணியன் கூட

## மண்பற்றை விடாததாலேயே 'பூங்குன்றன்' ஆனார்!

'இலக்கு' இல்லாதது இலக்கியம் ஆகாது.

தமிழர்களின் இலக்கியம் எழுதப்பட்ட காலத்தில், அதை எழுதிய புலவர்கள், எதிர்காலத்தில் தமிழர்களின் பண்பாட்டை, கலாசாரத்தை உணர்ந்து கொள்ள வேண்டும் என்ற 'இலக்'கோடு, படைத்திருக்கிறார்கள்.

> சென்னை மருத்துவக் கல்லூரி இலக்கிய விழா அண்மையில் நடைபெற்றது. சிறப்புப் பேச்சாளராகக் கலந்துகொண்டு தி. மு. க. தலைவர் கலைஞர் கருணாநிதி நிகழ்த்திய பேச்சின் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

தமிழர்களுக்கு என்று தனியாக வரலாறு எழுதப்படவில்லை.

இந்திய வரலாறு எப்படி எழுதப்பட வேண்டும் என்ற கேள்வி எழுந்தபோது, காவிரிக்கரையில் இருந்து வரலாறு தொடங்க வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா சொன்னார்.

### இலக்கிய விழாவில் கலைஞர் பேச்சு

ஏனென்றால் 'இந்தியாவிலேயே மூத்த குடிமகன். மூத்தமொழி இங்குதான் உருவாகி உள்ளது.

காவிரிக் கரையில் இருந்து இந்திய வரலாறு எழுதப் படாததால் அது முழுமையான வரலாறாக அமைந்து இருக்க[illegible]

இந்தியாவிலே பண்பட்ட மனிதன். பண்பட்ட மொழி தமிழகத்தில்தான் உருவாகி வளர்ந்தன என்று வெளிநாட்டு ஆராய்ச்சியாளர் கூட கருத்து வெளியிட்டுள்ளனர்.

காவிரிக் கரையில் இருந்து வரலாறு எழுதப்படாததினால், அது இடையில் தடைப்பட்டு, முழுமையான வரலாற்றைப் பெற முடியவில்லை.



கருணாநிதி

பிரதமராக இருந்தபோது இந்திராகாந்தி ரஷ்யா சென்றார்.

உலகம் முழுவதும் உள்ள மக்கள் அனைவரும் நம்முடைய உறவினர்கள் என்ற கருத்துக்கேற்ப 'யாதும் ஊரே யாவரும் கேளிர்'— என்றார்.

இது தமிழ்ப்புலவர் கணியன் எழுதிய பாடல்.

இந்தக் கருத்தைத் தெரிவித்த இந்திரா காந்தி கூட, இந்திய - ரஷ்ய நாடுகளின் எல்லைகளை எடுத்துவிட்டு இரு நாடும் ஒன்றாகி விட்டது என்று கருதவில்லை.

எல்லைக்கோடு அப்படியே தான் இருந்தன. எல்லா மக்களும் ஒன்றுதான் என்ற கருத்தில் அவர் சொன்னார்.

யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்ற பாடலை எழுதிய கணியன் கூட, தன்னுடைய பெயருக்கு முன்னால் தன்னுடைய ஊரான 'பூங்குன்றம்' என்று சேர்த்துக் கொண்டார். எனவே மண்பற்றை எவரும் விட்டுவிட முடியாது.

ஒன்றுபட்டிருக்க வேண்டும் என்பது உண்மைதான். அதே நேரத்தில் எல்லா மொழி, கலாசாரமும் மதிக்கப்படாவிட்டால் 'ஒன்று' பட்டுப் போய்விடும். பட்டுப் போகாமல் இருக்க, பல்வேறு கலாசாரங்களும் மதிக்கப்பட வேண்டும்— ★

# தமிழுக்கு முருக என்று பெயருண்டு

கந்தசுவாமியாரின் திருவருளையுன்னி விழாவெடுத்த நகரத்தை முருகாற்றுப்படுத்த பெருநகராகக் கண்டனர். கந்தனுக்குரிய திருநாமங்களில் முருகு என்பதே முதன்மையானது. அதிக நறையுடையது. தமிழின் மெல்லினம், இடையினம், வல்லினம் ஆகிய மூவகை எழுத்தின் கூட்டு முருகு. முருகா என ஒரு தரம் ஓதும் அடியார்கள் முன் ஓடி வருபவன் அவன். மெய்மை குன்றா மொழிக்குத் துணை முருகா எனும் நாமங்கள்.

முருகப் பெருமானின் பதியிலக்கணங்கள் சிவபெருமானினின்றும் வேறானதவை. அருவமும், உருவமுமாய் அநாதியாய், ஒன்றாய், பலவாய், பரப்பிரமமாய் நின்ற பரஞ்சோதிப் பிழம்பே முருகக் கடவுளாக, முகமாறுடையவனாய் உலகுமுய்ய வந்துதித்தான். அநாதியாய் தங்கட்கெல்லாம் மூலமாய் இருந்த வள்ளல் மூவிரு முகங்கொண்டு நின்றான்.

'ஆறுகொலாம் அவர் தம்திரு மாமுகம்
ஆறுகொலாம் அவர் தோற்றிய ஓரிடம்
ஆறுகொலாம் அவர் தானமும் நூல்களும்
ஆறு கொலாம் அவர் மந்திரம் தானே'.

சரவணபவ என்றும், குமராய நம என்றும் தருபவை ஆறெழுத்தடங்கிய அருமறை. நமோ குமராய நம, எனக் கூறிக்கொள்ளலாம் என்பர். ஓங்கார மூலப்பொருளாய் உள்ள முருகனே சமஸ்டிப் பிரணவ முகத்தினராவர். ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அமெரிக்க அமைச்சரை ஏசிய பெண் நிருபர்

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸ் அண்மையில் பிலிப்பீன்ஸ் நாட்டுக்குப் போயிருந்தார்.

அங்குள்ள அமெரிக்கத் தளங்கள் தொடர்ந்து இருப்பது பற்றிப் பேச்சுக்கள் நடத்தவே அவர் அங்கு சென்றிருந்தார்.

பேச்சுக்களின் முடிவில் செய்தியாளர்களை அவர் சந்தித்தார்.

அமைச்சரை ஒரு பெண் செய்தியாளர் கேள்வி கேட்டார்.

அதற்கு பதில் அளிக்க அவர் மறுத்து விட்டார். ஆத்திரமடைந்த பெண் செய்தியாளர் அமைச்சரை 'மொட்டைத் தலையன்' என்று கூறி விட்டார்.

இச் செயல் பிலிப்பீன்ஸ் அதிபர் கொரஸோன் அக்யூனோவுக்குத் தர்மசங்கடத்தை ஏற்படுத்தி விட்டது.

அந்த பெண் செய்தியாளர் மீது என்ன நடவடிக்கை எடுப்பது பற்றி அக்யூனோ ஆலோசித்து வருகின்றார்.

# கொமேனியைத் துரத்த ஷா சகோதரி சபதம்

வளைகுடாவில் ஈரான், ஈராக் நாடுகளுக்கு இடையேயான எட்டு ஆண்டுகளாக நடைபெற்று வந்த யுத்தம் ஒருவாறாக தீரும் நிலை ஏற்பட்டுள்ள நிலையில்......

எங்கிருந்தோ ஒருகுரல் சபதம் எடுத்திருக்கிறது.

அக்குரலுக்குரியவர் வேறு யாரும் அல்லர்.

ஈரானில் இருந்து தற்போதைய ஆத்மீகத் தலைவர் ஆயதுல்லா கொமேனியால் துரத்தியடிக்கப்பட்ட மன்னர் ஷாவின் சகோதரி பஹலவியின் குரலே அது.

மன்னர் ஷாவும் இவரும் இரட்டையர்களாகப் பிறந்தவர்கள்.

நாட்டைவிட்டு ஓடிய ஷா அமெரிக்காவில் இறந்தார். அவரின் 8 ஆவது நினைவு தினத்தை ஒட்டி பஹலவி 'ஹெரால்ட் டிரிபியூன்' பத்திரிகைக்கு விளம்பரம் ஒன்றைக்கொடுத்தார்.

அதில், 'ஈரானை அதிபர் கொமேனி சூறையாடிவிட்டார். நாட்டை அவர் அழித்துவிட்டார். நமது பிள்ளைகளை அந்தப் பேய் விழுங்கி விட்டது. அதை ஒழிக்க சபதம் ஏற்போம்' —என்று பஹலவி கூறியிருந்தார். ★

# நாய், பூனை, ஆடு பாடல் கசட்! நாலரை லட்சம் விற்பனை

அமெரிக்காவில் சக்கை போடு போட்டுவரும் ஓர் இசைத்தட்டின் பெயர் 'ஜங்கிள் பெல்ஸ்' என்பது.

ஐந்து நாய்களும் ஒரு பூனையும் இரண்டு ஆடுகளும் சேர்ந்து குரல் கொடுத்துள்ள இந்த இசைத்தட்டில் மனிதக் குரலே கிடையாது.

இதுவரையில் சுமார் நாலரை லட்சம் 'ஜங்கிள் பெல்ஸ்' இசைத்தட்டுக்கள் படுவேகமாக விற்பனையாகி உள்ளன. ★

# கால்-கை பிடித்தல் காக்கா பிடித்தல்

செல்வந்தர்களிடமும் செல்வாக்குமிக்கவர்களிடமும் தாம் நினைத்ததை 'கால், கை' பிடித்தாவது சிலர் நிறைவேற்றிக்கொள்வர்.

இந்தக் 'கால், கை பிடித்தல்' என்னும் பழக்கமே 'காக்கை பிடித்தல்— காக்கா பிடித்தல்' என்றாகிவிட்டது.

இதேபோன்றே கால், கை வலிப்பும் 'காக்கா வலிப்பு' என்று ஆகிவிட்டது. ★

# கின்னஸ் சாதனை புரிந்த கண் வைத்திய நிபுணர்

கர்நாடகாவைச் சேர்ந்த கண்மருத்துவர் எம்.சி.மோடி.

ஒரே நாளில் 833 கட்ராக்ட் சத்திரசிகிச்சை செய்தார்.

இச்சாதனை கின்னஸ் உலக சாதனை புத்தகத்திலும் இடம் பெற்றுவிட்டது.

1943இல் இருந்து இதுவரை அவர்செய்த சத்திர சிகிச்சைகளின் எண்ணிக்கை 6 லட்சத்து 10 ஆயிரம்.

72வயதான டாக்டர் மோடி இதுவரை சோதனை செய்துள்ள கண் நோயாளிகளின் எண்ணிக்கை 55 லட்சம். ★

# பாம்புடன் ஆலோசனை

கென்யா நாட்டைச் சேர்ந்த ஒரு நாட்டு வைத்தியர், சிகிச்சை அளிக்க ஒரு ஆமையையும், பாம்பையும் பயன்படுத்தி வந்தார்.

இதற்கு எதிர்ப்புக் கிளம்பியது.

இதைத் தொடர்ந்து ஆமையையும் பாம்பையும் சிகிச்சைக்கு எப்படிப் பயன்படுத்துகிறது? என்பதை நிரூபிக்கும்படி நாட்டு வைத்தியருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதன்படி நாட்டு வைத்தியர் நிரூபித்துக் காட்டினார்.

ஆமை ஓட்டில் தண்ணீரை ஊற்றி வெந்நீராகச் சுடவைத்தார்.

பாம்புக்கடி, பல் வலி போன்ற வியாதிகளுக்குச் சிகிச்சை அளிக்க பாம்புடன் ஆலோசனை நடத்தினார்.

இதைப் பார்த்த நீதிபதி ஆமையையும், பாம்பையும் அந்த நாட்டு வைத்தியர் தன்னுடன் வைத்துக்கொள்ள அனுமதித்தார்.

## அமெரிக்காவில் விசில் அடிப்பதில் ஒரு புதுமை!

விசில் அடிப்பதில் ஒரு புதுமை நிகழ்த்தப்பட்டுள்ளது.

நம்நாட்டில் அல்ல; அமெரிக்காவில்தான் இச்சாதனை.

ஜோயல் பிராண்டன், விசில் அடிக்கும் கலையில் வித்தகர்.

விசில் சத்தத்தில் பல்வேறு இசைகளை எழுப்புகிறார்:

இனிய பாடல்களைத் தருகிறார்.

எல்லோரும் விசில் சத்தம் எழுப்ப காற்றை உள்ளே இருந்து வெளியே தள்ளுவார்கள்.

ஆனால் இவர் காற்றை உள்ளே இழுக்கிறார்.

## 'ரோபோ' மயமாகும் நவீன ஜப்பான்

ஜப்பானில் தற்போது எந்த வேலையை எடுத்துக்கொண்டாலும் இயந்திர மனிதர்கள் தான்(ரோபோ)பயன்படுத்தப்படுகிறார்கள்.

விருந்தினரை வரவேற்று உபசரிப்பது, தேநீர் கொடுப்பது, உணவு தயாரிப்பது, இசைக்கருவிகளை மீட்டுவது, பழுது பார்ப்பது, சைக்கிள் தயாரிப்பது, பெயின்ட் அடிப்பது போன்ற பணிகளை இயந்திர மனிதர்களே செய்கிறார்கள்.

தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் இயந்திர மனிதர்களில் மூன்றில் இருமடங்கு ஜப்பானில் தான் தயாரிக்கப்படுகிறது.

## அடேயப்பா!

நமது கையில், சதுர அங்குலத்துக்கு 1300 நரம்பு முனைகள் உள்ளன. ★

# மோனலிஸா ஏன் கறுப்பு உடையில் காணப்படுகிறார்?

ஓவிய மேதை லியனார்டோ டாவின்ஸியின் அழியாப் புகழ்பெற்ற ஓவியம் தான் 'மோனலிஸா.'

இந்த 'மோனலிஸா' ஈடு இணையற்ற அழகும், செல்வமும் ஒருங்கே அமையப்பெற்ற பெண். இப்பெண்ணின் உண்மைப்பெயர்'லிஸா எகார்டினி' இவர் கணவர் பெயர் மெஸ்ஸர் கியோகொண்டா. பிளாரன்ஸைச் சேர்ந்தவர்கள். தனது 21-வது வயதில் டாவின்ஸி படம் வரைவதற்காக லிஸா மாடலாக உட்கார்ந்தார். ஆனால் அதை டாவின்ஸி வரைந்து முடிப்பதற்குத் தேவைப்பட்ட வருடங்கள் 6.

மோனலிஸாவின் ஓவியத்தைப் பார்த்தால் அதில் அவர் கறுப்பு அங்கி அணிந்திருப்பதும், கையில் மோதிரங்கள் அணியாமல் இருப்பதும் தெரியும். அதற்குக் காரணம் என்ன?

அந்தப்படம் வரைய ஆரம்பிப்பதற்குச் சில தினங்களுக்கு முன்பு லிஸா எகார்டியின் குழந்தை இறந்துபோனது. அதற்குத் துக்கம் அனுஷ்டிக்கத்தான் அவர் அவ்வாறு கறுப்பு உடையில் காணப்படுகிறார். டாவின்ஸிக்கு அப்படம் வரைய 6 வருடங்கள் ஆனாலும் முதலில் இருந்த சூழ்நிலையையே அவர் வரைந்துள்ளார். ★

# காது கேட்க புதிய கருவி

காது கேளாதவருக்கு புதிய கருவி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

காதுக்குப் பின்புறம் உள்ள எலும்பில் சிறு தகடு பொருத்தப்பட்டு, அது காந்த கவர்ச்சி மூலம் அந்தக் கருவியுடன் இணைக்கப்படும்.

ஒலி சேராக்கும் சாதனம் ஒன்றும், சின்னஞ் சிறு ஒலி பெருக்கி ஒன்றும் அந்தக் கருவியில் இடம்பெற்றுள்ளன. அதன் மூலம் ஒலி அலைகள் செலுத்தப்பட்டு, உட்செவி நரம்பு தூண்டப்படுகிறது.

காது நன்றாகக்கேட்கும் இந்தக் கருவியை புளோரிடா மாநிலத்தில் உள்ள க்ஷோமட் இன்கார்பரேட் நிறுவனம் தயாரித்துள்ளது. ★

## பெனாஸிர் பெயரும் சிபார்சு

இந்த ஆண்டு நோபல் சமாதானப் பரிசுக்கு பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவி பெனாஸிர் பூட்டோவின் பெயர் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

பிலிப்பீன்ஸ் அமைதி நிறுவனம் ஒரு சர்வதேச அமைப்பும் சேர்ந்து அவரது பெயரைச் சிபார்சு செய்துள்ளன.

அதை நோபல் பரிசுக் கமிட்டி ஏற்றுள்ளது.

# ஸ்பெயினில் நடந்த நத்தை ஓட்டப் போட்டி

ஸ்பெயின் நாட்டில் நத்தைகள் ஓட்டப் போட்டி நடந்தது. 79 நத்தைகள் கலந்து கொண்டன.


தங்கள் முன் வைக்கப்பட்டு உள்ள சிறிய கல்லை இழுத்துக்கொண்டு வெற்றிச் சம்பத்தை நோக்கி ஓட வேண்டும் என்பதுதான் போட்டியின் விதி.

இதில் ஹெர்குலிஸ் என்ற நத்தை 240 கிராம் எடையுள்ள கல்லை இழுத்துக்கொண்டு 42.5 சென்டிமீட்டர் தூரத்தை 10 நிமிடங்களில் கடந்து முதல் பரிசைத் தட்டிச் சென்றது.

போட்டியில் கலந்து கொண்ட சில நத்தைகள் கூட்டைவிட்டே வெளியே வரவில்லை.

சில நத்தைகள் கல்லை இழுப்பதற்குப் பதில் அதன் மீது ஏறிச் சென்றன. இன்னும் சில நத்தைகள் வெற்றிச் சம்பத்துக்கு எதிர்த்திசையில் சென்றன. ★

# தாஜ்மஹாலுக்கு புதிய ஆபத்து!



தாஜ்மஹாலை வெடி குண்டு வைத்துத் தகர்க்கப் போவதாக சீக்கியத் தீவிரவாதிகள் மிரட்டி உள்ளனர்.

இதையொட்டித் தாஜ்மஹாலுக்கு வருகிறவர்கள் வெடி குண்டு வைத்து இருக்கிறார்களா என்பதைக் கண்டு பிடிக்க நுழைவு வாசலில் 'மெட்டல் டிடெக்டர்' கருவியைப் பொலீஸார் பாவிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்தக் கருவி முதலில் தற்காலிகமாக வைக்கப்படும்.

இதனால் சுற்றுலாப் பயணிகளுக்கு இடையூறு எதுவும் இல்லாவிட்டால் நிரந்தரமாக வைக்கப்படும்.

இதேவேளை–

தாஜ்மஹாலை பார்க்க தினமும் ஆயிரக்கணக்கான வெளிநாட்டுக்காரர்கள் செல்கிறார்கள்.

அவர்களுக்குப் புதிய வசதி ஒன்றைச் செய்து கொடுக்க இந்திய அரசு முன்வந்துள்ளது.

வெளிநாட்டுப் பயணிகள் தாஜ்மகால் வளாகத்தில் இருந்தே தங்கள் நாட்டுக்கு நேரடியாகத் தொலைபேசி மூலம் பேசிக் கொள்ளலாம்.

இதுவே அந்த வசதி! ★

# பஞ்சாமிர்தம் பலரசஅமிர்தம்

## அமெரிக்காவில் கிருஷ்ணபக்தி இயக்கம் சிறைச்சாலையை வாங்க முயற்சி

அமெரிக்காவின் மேற்கு வர்ஜீனியாவில் 120 ஆண்டுகளாகவுள்ள சிறைச்சாலை விலைக்கு வந்தால் அதைக் கிருஷ்ண பக்தி இயக்கத்தினர் வாங்கக்கூடும். 200 ஏக்கரில் அமைந்துள்ள அந்த இடத்தில் யானைகளை வளர்க்கவும் அச்சங்கத்தினர் திட்டமிட்டுள்ளனர். இத்தகவல்களைக் கிருஷ்ண பக்தி இயக்கத்தின் பத்திரிகைக் குறிப்பு தெரிவிக்கிறது.

சிறைச்சாலையின் நவீன சமையல் அறைப் பகுதி வீடற்றவர்களுக்கு உணவு வழங்கும் நிலையமாக மாற்றி அமைக்கப்படும் என்றும் அதன் மதில் சுவர்களில் உள்ள கருங்கற்களைத் தங்களது இதர கட்டடங்களைக் கட்டப் பயன்படுத்திக்கொள்ளப் போவதாகவும் அத்தகவல் கூறுகிறது.

இச்சிறைச்சாலையின் நிலைமையறிந்து அறிக்கை தர உச்சநீதிமன்றம் ஒருவரை நியமித்தது. அவர் இச்சிறைச்சாலையையே விற்றுவிட்டுப் புதிய சிறைச்சாலை ஒன்றைக் கட்டப் பரிந்துரை செய்துள்ளார். இப்பரிந்துரை அமுல்படுத்தப்படும் பட்சத்தில் அதைக் கிருஷ்ண பக்தி இயக்கம் வாங்கக் கூடுமெனத் தெரிகிறது.

ஏற்கனவே கிருஷ்ணபக்தி இயக்கத்தினர் இயங்கி வரும் 'பிருந்தாவனம்' என்று பெயரிடப்பட்ட இடத்தைச் சுற்றியுள்ளவர்கள் அந்த அமைப்பின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். தற்போது இந்தப் பழைய சிறைச்சாலையை இந்த இயக்கத்தினர் வாங்கித் தங்கள் நடவடிக்கைகளை விஸ்தரிக்க உள்ளதும் இதேபோல் எதிர்ப்புக்களை ஏற்படுத்தக் கூடும். ★

## ஒரே கல்லில் ஆஞ்சநேயர் சிலை!

சென்னை அருகே ஆஞ்சநேயருக்கு கோவில் கட்டப்பட்டு வருகிறது.

150 தொன் எடைகொண்ட ஒரே கல்லில் ஆஞ்சநேயரின் சிலை இதற்காகச் செதுக்கப்பட்டுவருகின்றது.

30 அடி உயரம், 7அடி அகலத்தில் இச்சிலை செதுக்கப்படவுள்ளது.

இதற்கான ஒரேகல் வந்தவாசி கிராமத்தில் பூமிக்கு அடியில் இருந்து தோண்டி எடுக்கப்பட்டது. 32 அடி நீளமும் 8 அடி அகலமும்கொண்ட 150 தொன் எடைகொண்ட அக்கல்லை வெட்டி எடுக்க 2½ ஆண்டுகள் பிடித்தது.

ராட்சத கிரேன்கள் மூலம் இக்கல் ட்ரக்வண்டியில் ஏற்றப்பட்டு சென்னைக்குக் கொண்டுவரப்பட்டது.

ஸ்ரீ மாருதி பக்த சமாஜம் இந்த ஆலயத்தை நங்கநல்லூரில் கட்டிவருகிறது. ★

# ராஜீவ்காந்தி கூறுவதை திமிங்கிலமும் விழுங்காது

அமெரிக்க அதிபர் றேகன், சோவியத் தலைவர் கோர்பச்சேவ், இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்தி மூவரும் தீவு ஒன்றில் சிக்கிக் கொண்டனர்.

தீவில் இருந்து தப்பி வர வேண்டும் என்றால் சுறாக்கள் நிறைந்த கடலைத் தாண்டியாக வேண்டும்.

கோர்பச்சேவ் முதலில் நீந்தத் தொடங்கினார். சுறா அவரை விழுங்கி விட்டது.

றேகன் அடுத்து நீந்த ஆரம்பித்தார். அவரையும் சுறா தின்று விட்டது.

மூன்றாவதாக ராஜீவ்காந்தி நீந்த ஆரம்பித்தார். சுறாக்களில் இருந்து தப்பிப் பாதுகாப்பாகக் கரை சேர்ந்தார். கரையில் அவரை வரவேற்கக் குழுமியிருந்த அவரின் அமைச்சர்கள் ''எப்படிச் சுறாக்களில் இருந்து தப்பினீர்கள்''– என்று கேட்டனர்.

ராஜீவ் சொன்னார்:

''போபர்ஸ் ஊழலுக்கும் எனக்கும் தொடர்பே இல்லை என்று சொல்லிக்கொண்ட வண்ணம் சுறாவின் முதுகில் ஏறியிருந்து கரை சேர்ந்தேன்''

அவர் சொன்னதைச் சுறா மட்டுமல்ல, திமிங்கிலம் கூட விழுங்காது–

போபர்ஸ் பேர ஊழல் சம்பந்தமாக உலகப்பத்திரிகைகளில் அடிபடும் நகைச்சுவைக் கதைதான் மேலே கூறப்பட்டது. ★



றேகன்



கோர்பச்சேவ்



ராஜீவ்காந்தி

# மாற்று இருதயத்துடன் நான்காயிரம் பேர்

அமெரிக்காவில் இதுவரை சுமார் 4 ஆயிரம் பேருக்கு வெற்றிகரமாக மாற்று இருதயம் பொருத்தப்பட்டுள்ளது.

ஆண்டு தோறும் சுமார் 1,800 பேர் மாற்று இருதயத்தைப் பெற்று வருகின்றனர்

அமெரிக்காவில் 1970 ஜனவரி 3 ஆம் திகதி மாற்று இருதயம் பெற்ற வில்லெம் வான் புர்ரென் (Wiljem Van Buuren) என்பவர் இன்னமும் உயிருடன் இருக்கிறார்.

அமெரிக்காவில் இவ்வித சத்திர சிகிச்சையின் பின்னர் மிக நீண்ட நாள் வாழ்பவர் அவரேயாவர்.

பிரான்ஸில் இம்மானுவல் விட்ரியா (Emmanuvel Vitria) என்பவர் மாற்று இருதய சத்திர சிகிச்சைக்குப் பிறகு 18½ ஆண்டுகள் வாழ்ந்தார். ★

# உங்களுக்குத் தெரியுமா?

நத்தை 16 கிலோ மீற்றர் தூரம் செல்ல 3 வாரங்கள் பிடிக்கும். அதே தூரத்தை ஆமை கடக்க நான்கு மணி நேரமாகும்.

★ அணில்கள் எப்போதும் இருவழிகள் வைத்து கூடு கட்டும். ஒருவழி சாதாரணமாகச் சென்று வர மற்றொரு வழி (Emergency Gate) அபாயத்தின்போது தப்பிக்க.

உலகிலேயே அதிக முட்டையிடும் மீன் இனம் மாலோ மோலா(Malo Molo) என்ற வகை ஒரே சமயத்தில் மூன்று கோடி முட்டைகள் இடும்.

★ ஆமை, மீன் அசையா நாக்குகள் கொண்டவை.

★ விஷப்பாம்புகளில் மிக நீளமானது ராஜநாகம். ஆனால் எடை மிக அதிகமுள்ள பாம்பு 'டைமன்டேக் ரொட்டில்' என்ற பாம்பு தான். இதன்எடை 15 கிலோவுக்கும் மேல் இருக்கும்.

★ மண்புழுக்களில் மட்டும் 1.300 இனங்கள் உள்ளன. இதில் 50 இனங்கள் உள்ளன. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனங்காணல் நெருக்கடியும் எமது மாணவ சமுதாயமும்

அடிப்படையில் மனிதன் ஒரு சமூகப்பிராணி. சமூக நிகழ்வுகள் மனிதனிலும், மனிதன் சமூக நிகழ்வுகளிலும் செலுத்தும் செல்வாக்கு பிரிக்கமுடியாதவாறு பின்னிப் பிணைந்துள்ள ஒரு இடைத் தாக்கம்.

மனிதவாழ்வின் வெவ்வேறு நிலைகளில் மனோவளர்ச்சி நிலை, தேவைகள்; இவற்றின் அடிப்படையில் மனிதன் சமூகத்துடன் வெவ்வேறு விதமாகத் தாக்கம்புரிகிறான். அதேவேளை சமூதாயமும் மனித வளர்ச்சியின் விளைவாக மொத்தத்தில் சிறியசிறிய மாற்றங்களுக்கு உள்ளாகிறது. வெவ்வேறு வளர்ச்சிப் படிகளில் மனிதன் சமூகத்துடன் புரியும் இடைத் தாக்கங்களையும் அதன் வாயிலாக அவனில் ஏற்படும் உளவியல் வாழ்முறை மாற்றங்களையும் உள சமூகவியல் வளர்ச்சிப்படிகளாக (Psycho-Social Developmental Stage) பிரிப்பதன்மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

இந்த அணுகுமுறையினை வகுத்த எரிக் எரிக்சன் ((Erik Erikson) என்ற உளவியலாளர் உளசமூகவியல் வளர்ச்சிப் படிகளில் ஏற்படும் மிகவும் முக்கியமான உளநெருக்கடியாக இனங்காணல் நெருக்கடியை (Identity Crisis) குறிப்பிடுகின்றார்.

### வாலிபப் பருவம்

இது வாலிபப்பருவத்தில் (Adolescent Stage) ஏற்படும் முக்கியமானதொரு உளவியல் நெருக்கடியாகும். இந்த நெருக்கடியின் விளைவினாலேயே நற்பிரசைகளும், குற்றவாளிகளும், முயற்சியுடையவர்களும், சோம்பேறிகளும் உருவாகிறார்கள்.

இனம் காணல் என்றால் என்ன? ஒருவன் தன்னை ஏற்றுக்கொள்ளல், ஒருவன் தான் செல்லும் பாதையை அறிந்து கொள்ளல், ஒருவன் தனக்கு முக்கியமானவர்களாகக் கருதப்படுபவர்களினால் ஏற்றுக் கொள்ளப்படல் இவை மூன்றும் ஒன்றிணைந்த ஒரு விளக்க நிலையே இனங்காணல் என எரிக் எரிக்சன் கருதுகிறார்.

எமது அடுத்த பிரச்சினை எந்தெந்த விடயங்களில் இனங்காணல் நெருக்கடி ஏற்படுகிறது என்பது முக்கியமாக தொழில் ரீதியானதாக இருக்கலாம். எந்தத்தொழிலைச் செய்வது? எந்தத்தொழிலுக்கு எனக்கு இயற்கையான நாட்டம் உண்டு? எந்தத் தொழில் அதிக பண வருவாயைத் தரும்? எந்தத் தொழில் சமூக அந்தஸ்தைத் தரும்? தொழிலைப் பொறுத்த மட்டில் இப்படி எத்தனையோ நெருக்கடிகள்.

அடுத்தது பால் இனங்காணல் தொடர்பானது. இது வாலிபப் பருவத்தின் ஆரம்பக் கட்டங்களில் ஏற்படுவது எமது சமூதாயத்தைப் பொறுத்தளவில் பண்பாட்டியல் கலாசார வரையறைகளினால் இன்னமும் பால் இனங்காணல் ஒரு பிரச்சினையாக எழவில்லை. ஆனால் தொழில் ரீதியான இனங்காணல் நிச்சயமான ஒருபிரச்சினை. இன்னமும் சொல்லப்போனால் மேலைத்தேயங்களில் உள்ளதைக் காட்டிலும் இங்கே இந்த இனங்காணல் நெருக்கடியின் பரிமாணம் அதிகம்.

### ஆறு குழுக்கள்

எமது சமூக அமைப்பில் வாலிபப் பருவத்தை மாணவப் பருவமாகக்கொள்ளலாம். அதாவது க. பொ. த. சாதாரண தரம், உயர்தரம், பல்கலைக்கழக மாணவர்களைக் கூட இந்த வரையறைக்குள் கொண்டுவரலாம். குறிப்பாகச் சொல்லப்போனால் பிள்ளைப்பருவத்தைத் தாண்டி (Childhood) சுயமாக உழைக்காமல் சார்ந்துவாழும் நிலையில் உள்ளவர்களைக் குறிக்கும் பருவம்.

இந்த மூன்று குழுக்களிலும் உள்ளவர்களது ஒரு பொதுவான பிரச்சினை எதிர்காலம். ஆம் ஒளிமயமான எதிர்காலம். இந்தஒளிமயமானஎதிர்காலத்தை ஆக்குவதில் நேர் மறையான அல்லது எதிர் மறையான செல்வாக்கைச் செலுத்தவல்ல அதே காரணிகள் இனங்காணல் நெருக்கடியிலும் ஏறக்குறைய அதேபரிமாணமுள்ள செல்வாக்கினைச் செலுத்தும். இக்காரணிகளை 6 குழுக்களாக வகைப்படுத்தலாம்.

1. சமுதாயத்தின் கணிப்பு.
2. பிறநாட்டு மோகம்.
3. மட்டுப்படுத்தப்பட்ட உயர்கல்வி வாய்ப்புகள்.
4. விஞ்ஞான, தொழில் நுட்பவியலின் சமமற்ற வளர்ச்சி.
5. சமகால நிகழ்வுகளும் அவை ஏற்படுத்தும் உளவியல் நெருக்கடிகளும்,
6. குடும்ப நிலைமைகள்.

### சமுதாயத்தின் கணிப்பு

தொழில்களைப் பொறுத்தளவில் எமது சமுதாயம் குறுகிய கண்ணோட்டமே வைத்துள்ளது. சில தொழில்களுக்கு அளவுக்கதிகமாக மதிப்பளிக்கிறது. அவர் ஒரு வைத்தியராகவோ, பொறியியலாளராகவோ, கணக்காளர் ஆகவோ இருந்தால் சமுதாயம் மதிக்கிறது, எதிர்பார்க்கிறது, வரவேற்கிறது. எமது மாணவ சமுதாயத்தில் இந்தக் கருத்து ஆழமாக வேரூன்றியுள்ளது. ஆனால் இத் துறைகளில் இருக்கும் கல்வி வசதி மிக மிக சொற்பம்.

இயற்கையாகவே வேறு துறைகளில் நாட்டம் உள்ளவர்கள், வேறு திறமைகள் படைத்தவர்கள் கூட சமுதாய உந்துதலால் இத்துறைகளுக்குள் பிரவேசிக்க பகிரதப் பிரயத்தனம் செய்கிறார்கள். இவற்றினால் ஒரு மாணவன் தனது இயற்கையான திறன்களை விடுத்து நாட்டங்களை மறந்து ஒரு தேடலில் இறங்குகிறான். ஒருவனது திறன்களை நாட்டங்களை இனங்காட்ட வேண்டிய கல்வியானது சமுதாய உந்துதலால் குறிப்பிட்ட சில துறைகளை நோக்கி மாணவர்களை இழுத்துச் செல்கிறது. ஆக கல்வியின் சிறப்பியல்பும் இங்கே சிதைவடைகிறது.

பெரும்பாலான மாணவர்களால் தாங்கள் செல்லும் பாதையை இனங்காணவே முடிவதில்லை. ஏனெனில் சமுதாய எதிர்பார்ப்பிற்கு ஏற்ப ஈடுகொடுக்க முடிவதில்லை. கல்வியில் அதனிலும் குறிப்பாக சில துறைகளில் ஒருவன் தன் திறமையைக் காட்டத் தவறின் அல்லது வேறு துறைகளில் ஈடுபாட்டைக் காட்டினால் அவன் மற்றவர்களிடம் இருந்து எதிர்பார்க்கும் அங்கீகாரத்தைப் பெறமுடியாது போகிறது. நம்மவர்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள் ''தம்பி படிச்சு யூனிவர்சிற்றிக்குப் போய்விட்டு உதுகளில இறங்கலாம் தானே'' அவன் இறங்கும் துறை கலையாக இருக்கலாம், விளையாட்டுத்துறையாக இருக்கலாம், ஏன் அரசியல் சித்தாந்தத் துறையாகக் கூட இருக்கலாம் அவன் காணப்போகும் பிரதிபலிப்பு ஒரே தன்மையுடையதே. இதனால் அவனுக்குத் தான் ஏற்றுக்கொண்ட அல்லது ஏற்றுக்கொள்ள நினைக்கும் பாதையைப் (பத்திரத்தை) இட்டு குழப்பம் ஏற்படுகிறது. (Role Confusion)

எமது அனுபவங்களே எமது சிறந்த ஆசான். அனுபவங்களினூடாக ஏற்படும் அறிவினை எமது சமுதாயம் ஏற்க மறுக்கிறது. குறிப்பாக இந்தப் பருவத்தில் மேலைத்தேயங்களில் வாலிபப்பருவத்தின் இறுதி நிலைகளில் (Late Adolescent Stage) ஒருவனது வாழ்க்கையை அவனே தீர்மானித்துக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறான். ஆரம்பத்தில் அவனுக்கு சார்ந்து வாழல்— சாராது வாழல் (Dependence-Independence) நிலையில் பெரும் உளவியல் நெருக்கடி ஏற்பட்டாலும், அவன் அனுபவங்களின் ஊடாகத் தன்னை நேர் மறையாக இனம் கண்டுகொள்ளக் கூடியதாயுள்ளது (Positive Identification) இதனால் அவன் தான் வாழும் சமூகத்தின் முன்னேற்றத்திற்கு தனது தொழில்துறையினூடா பெரும் பங்களிப்புச் செய்வதோடு தானும் முன்னேறுகிறான்.

அறிவுரைகள் தேவை வழிகாட்டல்கள் தேவை, ஆனால் அவையே ஒரு தனிமனிதனின் முன்னேற்றத்திற்குத் தடைக்கற்களாக அமைந்துவிடக் கூடாது.

எமது சமுதாய அமைப்பில் இருக்கும் இன்னுமொரு எதிர் மறையான காரணி சீதனம். இது குறிப்பாக ஆண்களினது இனங்காணல் நெருக்கடியை வலுவடையச் செய்யும் ஒரு காரணியாகக் கருதலாம், சீத

**கொ. றெ. கொண்சன்டைன்**

னக் கொடுக்கல் வாங்கல்கள் சமுதாயத்தின் தொழில் சார்ந்த கண்ணோட்டத்தைக் கூர்மையடையச் செய்யும் ஒரு முக்கிய காரணி.

இப்படிப்பட்ட ஒரு சமுதாய எதிர்பார்ப்பு இருப்பதனால் ஒரு மாணவன் சில குறிப்பிட்ட துறைகளுக்குள் புகுவதைத் தனது கடமையாகக் கருதவேண்டிய நிலையில் உள்ளான்.

### பிறநாட்டு மோகம்

உதாரணத்திற்கு ஒரு மாணவனை எடுத்துக் கொள்வோம். அவனது பெற்றோர், சகோதரர், நெருங்கிய உறவினர்கள் அப்படி இல்லாவிட்டால் அயல் வீட்டுக்காரனாவது நிச்சயமாக பிறநாட்டில் இருப்பான். இப்படியான ஒரு சூழலில் வாழும்போது பிறநாட்டு மோகம் இருப்பது ஒன்றும் ஆச்சரியத்திற்குரிய விடயமல்ல.

ஒரு மாணவன் தனது எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கிறான். அவனது மனத்தில் தோன்றக்கூடிய சிந்தனைகள் ஒன்று பட்டப்படிப்பிற்கான சீட் இங்கே கிடைத்தால் இங்கே படிப்பது. இரண்டாவதாக அப்படிக் கிடைக்காத பட்சத்தில் பிறநாட்டுக் கல்வி வாய்ப்பைத் தேடிச் செல்வது. மூன்றாவதாகப் பட்டப் பின் படிப்பிற்கு பிறநாடு செல்வது. ஆக அவனது எதிர்காலத்தை திட்டமிடுகையில் பிறநாட்டு மோகம் தனது செல்வாக்கைச் செலுத்துகிறது. இது அவனது இனங்காணல் நெருக்கடியில் நேர் மறையான அல்லது எதிர் மறையான தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

ஒரு படிமேல் சென்று பார்ப்போமாகில் சொந்த நாட்டில் ஒரு தொழில்துறையில் அல்லது ஒரு கற்கை நெறியில் தம்மைச் சீரிய முறையில் ஈடுபடுத்தியிருந்தவர்கள் சிலர் சகோதரர்கள் அல்லது உறவினர்களின் பிறநாட்டுப் பெயர்வால் தங்கள் பாதையில் (பாத்திரத்தில்) குழப்பமடைந்து (Role Confusion) பிறநாடுகளுக்குச் சென்று தங்களது தனித்துவத்தை இழந்து மீண்டும் மீண்டும் இனங்காணல் நெருக்கடிக்குள் தள்ளப்படுவதை நாம் பல இடங்களில் சந்தித்துள்ளோம்.

தமது தொழில் சார்ந்த ரீதியாக அல்லது கற்கைநெறியுடன் தொடர்புள்ள விதமாகத் தமது வாய்ப்புக்களைப் பெருக்கவென்று பிறநாடு செல்பவர்கள் அநேகமாக ஒரு நேர்மறையான தாக்கத்தினையே சந்திப்பார்கள். அத்துடன் இங்கே இருக்கும் சில கட்டுப்பாடுகள், தகைமை போதாமை என்பவற்றின் பாதிப்பால் தாம் நினைத்த கற்கைநெறியை பின்பற்ற முடியாது. அல்லது தாம் விரும்பிய தொழில்துறையில் புக முடியாது இனங்காணல் நெருக்கடியில் தவிப்பவர்களும் பிறநாடு சென்று தக்க வாய்ப்புகள் சந்திக்கையில் ஒரு நேர்மறையான தாக்கத்தைச் சந்திப்பார்கள்.

இவர்கள் தவிர பிறநாட்டு மோகத்தினால் அடிபட்டுச் செல்பவர்கள், ஏற்கனவே இனங்காணல் நெருக்கடியில் தவிப்பவர்கள் பிறநாடு செல்வதினால் தமது உளவியல் நெருக்கடிகளைப் பெரிதாக்கிக் கொள்கிறார்கள்.

புதிய கலாச்சாரம், அந்த மக்களின் இன முற்சார்பு மனப்பாங்கு (Prejudice), மேலதிகத் தகவல்கள் புலத் தூண்டல்களின் நெருக்கடி (Sensory and information overload), எனவே அங்கு வசித்து வரும் நம்மவரின் மனப்பாங்குத் தெரிவுக்கு மிஞ்சிய வாய்ப்புகள் (Decision Stress) இவை எல்லாம் அங்கு செல்பவர்களில் ஒரு கலாச்சாரத் தாக்கத்தை (Culture shock) ஏற்படுத்துகிறது. இது ஒரு சிக்கலான உளவியல் நெருக்கடி. ஏற்க இனங்காணல் நெருக்கடியில் இருப்பவர்களை இது பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த நிலைக்குத் தள்ளிவிடும்.

இந்த யதார்த்த சூழலில் இருந்து விடுபட அவர் என்ன செய்வார். எதிர்மறையான இனங்காணலில் ஈடுபடுகிறார். அது போதைவஸ்து பாவனையாக இருக்கலாம். சமூக விரோத நடத்தைகளாக இருக்கலாம். ஏன் தொலைக் காட்சியே தஞ்சம் எனவும் முடங்கிவிடலாம் (TV/Video induced stupor).

மொத்தத்தில் ஒருவர் தன்னை இனம்காணும் முயற்சியில் அந்தக் கட்டத்தில் இருக்கிறார் என்பதைப் பொறுத்தும் பிறநாட்டுக்கு அவர் செல்ல முற்படும் நோக்கத்தைப் பொறுத்தும் பிறநாட்டு மோகம் ஒரு தனயனின் இனங்காணல் நெருக்கடியில் தனது செல்வாக்கைச் செலுத்தும்.

(அடுத்தவாரம் முடியும்)

## உங்களுக்குத் தெரியுமா?

1. பிரமிட் கோபுரங்களில் மிகப் பெரிய பிரமிட் கோபுரத்தின் அடிப்பக்கம் 746 அடி நீளமுள்ள பக்கத்தையுடைய சதுர அமைப்பைக் கொண்டது. அதனுடைய உயரம் 450 அடி. அது உள்ளடக்கியுள்ள இடப்பரப்பு 13 ஏக்கர் அதாவது 5,66,280 சதுர அடி. ஒவ்வொன்றும் 2½ தொன் நிறையுள்ள 2,300,000 கற்களைக்கொண்டு அது கட்டப்பட்டது.

2. பொலிவியாவின் வர்த்தக தலைப்பட்டினமான La Paz (லா பாஷ்) உலகத்திலேயே மிக உயர்ந்த பீடபூமியில் அதாவது கடல் மட்டத்தில் இருந்து 11, 800 அடி உயரத்தில் அமைந்துள்ளது.

3. உலகிலேயே அதி உயர்ந்த மலை நேபாள திபெத்திய எல்லையில் இருக்கும் இமயமலையின் எவரெஸ்ட் சிகரம். இது கடல்மட்டத்தில் இருந்து 29,140 அடி உயரத்தில் உள்ளது. இதை உலகப் படத்தில் பதிப்பித்தவரும் திரிகோண கணித மூலம் இதன் உச்சியின் உயரத்தைக் கண்டுபிடித்தவரும் சேர். ஜோர்ஜ் எவரெஸ்ட் ஆவார்.

4. கிறிஸ்துவுக்கு முன் மூன்றாம் நூற்றாண்டில் சக்கரவர்த்தி ஷஹ் ஹுவாங் ரீ யால் மண்ணாலும் கல்லாலும் கட்டப்பட்ட சீனச் சுவர் 1400 மைல் நீளமுள்ளதும் 20'-35' அடி வரை உயரமுள்ளதும் 13 அடிவரை அகலமுமானது.

5. பீஸா சாய் கோபுரத்தைப் போல் சீனாவில் உள்ள வுங்கஸ் நகரத்தில் இருந்து 50 மைல் தொலைவுள்ள சூசௌ என்னும் இடத்தில் இடிந்துவிழும் தறுவாயில் ஒரு சாய் கோபுரம் உள்ளது.

6, நடுச்சாம சூரியன் என அழைக்கப்படும் இயற்கை அழகில் நடு இரவில் சூரிய ஒளியில் நிழல் தெரியும் நாடு நோர்வேயாகும். ஆனி, ஆடி மாதங்களில் சூரியன் அடிவானத்தில் மறையாமல் இருப்பதன் காரணமாக கிழமைக் கணக்கில் இரவற்ற பகல் ஒளி இருக்கின்றது.

7. (Eiffel) எயிபெல் டவர் 984 அடி உயரமுடையது. ஐக்கிய அமெரிக்காவில் உள்ள அதாவது நியூயோர்க்கில் உள்ள 102 மாடிகள் கொண்ட எம்பயர் ஸ்ரேன் கட்டிடம் நிர்மானிக்க முன்பு இதுவே உலகில் அதிஉயரமான கோபுரமாக இருந்தது. இகோபுரம் 1889 ஆம் ஆண்டு பரீஸ் நகரத்தில் நடைபெற்ற பொருட்காட்சிக்காக பொறியியலாளர் கஸ்டாப் எயிபெல் (Gustare Eiffef) என்பவரால் நிர்மாணிக்கப் பட்டது. இதன் உச்சியில் ஏறி நின்று பார்த்தால் 60 மைல் ஆரையளவு பிரதேசத்தைப் பார்க்க முடியும். ★

தொகுப்பு:-
எஸ்.ஆர்.பேரின்பநாயகம்




## ஆபிரகாம் லிங்கன் வாழ்வில் ஒரு நாள்

இளமைக் காலத்தில் படிக்க வசதியற்று ஏழையாக இருந்தார். பின் தன் விடா முயற்சியினால் கல்வி கற்று அமெரிக்காவின் ஜனாதிபதியாகத் திழ்ந்தார்.

அவர் புத்தகம் படிப்பதில் ஆர்வம் மிகுந்தவர். ஆனால் அவருடைய இளமைக்காலத்தில் புத்தகங்களை விலை கொடுத்து வாங்கிப் படிக்க அவருக்கு வசதி இல்லாது இருந்தது.

இதனால் நண்பர்களிடம் இரவல் வாங்கிப் படிப்பார். ஒரு நாள் வாஷிங்டனின் வரலாறு என்ற புத்தகத்தைத் தன்னுடைய பணக்கார நண்பனிடம் இரவல் கேட்டு வாங்கிச் சென்றார்.

பலமுறை அந்தப் புத்தகத்தைத் திரும்பத் திரும்பப் படித்தார். ஒரு நாள் இரவு அதைப் படித்து விட்டு சுவர் ஓரமாக வைத்து விட்டுப் படுத்து விட்டார்.

அன்று இரவு பெய்த மழை மதில் சுவரை நனைத்ததுடன் புத்தகத்தையும் நன்றாக நனைத்து விட்டது. லிங்கன் மனம் கலங்கினார்.

அதை அப்படியே திருப்பிக் கொடுக்க மனம் வரவில்லை. புதிதாக வாங்கிக் கொடுக்கலாம் என்றாலும் கையில் பணம் இல்லை. எனவே அதை இலேசாக அனலில் காட்டி உலர்த்தினார். காய்ந்ததும் அதை நண்பனிடம் கொடுக்கச் சென்றார்.

புத்தகம் இரவல் கொடுத்த நண்பனிடம் செல்வச் செருக்கும் முன்கோபமும் மிகுந்து இருந்தது.

''இரவல் புத்தம் காக்கும் முறை இதுதானோ'' லிங்கனைக் கடிந்துரைத்தார்'' எனக்கு வேறு புத்தகம் வேறும் இல்லையென்றால் இதற்கு ஈடாக ஏதேனும் தரவேணும்'' என மிரட்டினார். பாவம் லிங்கன். தம்முடைய ஒரே சொத்தான உழைப்பையே ஈடுதர முடிவு செய்தார்.

மூன்று நாட்கள் கூலி இல்லாமல் நண்பன் நிலத்தில் உழைக்க ஒப்புக் கொண்டார்.

பத்து நாட்களில் செய்யக் கூடிய வேலையை லிங்கன் மூன்று நாட்களில் செய்து முடித்தார்.

இதனை அறிந்த பலர் லிங்கனின் நேர்மையையும் [illegible] பார்வத்தையும் [illegible] னர். ★

பாரதி கண்ட 'புதுமைப் பெண்' என்றவுடனேயே அநேகருக்கு 'நிமிர்ந்த நன்னடை' என்ற கவிதை வரிகள்தாம் நினைவுக்கு வருகின்றன.

ஆனால் உண்மையில் பாரதி பெண்களுக்கு, பெண் விடுதலைக்கு, பெண்கள் உயர்வுக்கு அதிகம் சொல்லியிருப்பது, அவர் கவிதைகளைவிட கட்டுரைகளில்தாம்.

அவருடைய அந்தக் கருத்துக்களை ஏன் அதிகம், பாரதியில் இருந்து மேற்கோள் காட்டுபவர்கள் கூட உபயோகப்படுத்தவில்லை என்றுதான் புரியவில்லை.

பெண்களுக்கு விடுதலை கொடுத்தால் ஏழுலோகமும் கட்டாயம் இடிந்து பூமியின் மேல் விழும் என்றும், வால் நக்ஷத்திரம் வகையறுக்கள் எல்லாம் நடுவில் அப்பட்டுத் துவையலாய் விடும் என்றும் பலர் நடுங்குகிறார்கள்'- எனப் பாரதியே அவர் கட்டுரையில் ஓரிடத்தில் குறிப்பிட்டிருப்பது போல், பெண்கள் உயர்வுக்குத் தேவையான கருத்துக்களைப் பெண்களுக்குச் சொல்லிவிட்டால், எங்கே அவர்கள் உண்மையிலேயே அவர்கள் விடுதலைக்குக் குரல்கொடுக்க ஆரம்பித்து விடுவார்களோ என்ற பயமாக இருக்கலாம்.

இது குறித்தே பாரதியாரும், பெண்விடுதலைக்குத் தமிழ்ப் பெண்கள் செய்யத் தக்கது யாது' என்ற கட்டுரையில் பின்வருமாறு கூறுகிறார்.

—'நம்மைக் கண்டாலும் ஆண் மக்கள் நிஷ்காரணமாய்ச் சீறிவிழுகிறார்கள்; காறி உமிழ்கிறார்கள்; வைகிறார்கள்; அடிக்கிறார்கள்; நாம், நமதிஷ்டப்படி பிறருடன் பேசக்கூடாதென்று தடை செய்கிறார்கள். மிருகங்களை விற்பதுபோல் நம்மை விலைக்கு விற்கிறார்கள்.

நம்முடைய நூல்களிலும் சம்பாஷணைகளிலும் ஓயாமல் நம்மைத் தூற்றிக்கொண்டிருக்கிறார்கள். வழக்கத்தால் நாம் இத்தனைபாடுக்கும் ஒருவாறு [illegible] ஆம். இந்த நிலை மிக இழி[illegible] சீக்கிரத்தில் மாற்றித் தீர

## பெண் விடுதலைக்காக தர்மயுத்தம் தொடங்குக

வேண்டியதென்பதிலும் சந்தேகமில்லை. இதற்கு மருந்தென்ன?

'சகோதரிகளே' நாம் விடுதலைபெறுவதற்கு இதுவே உபாயம். நமக்கு அநீதிசெய்யும் ஆண் மக்களுடனே நாம் அன்புத் தளைகளாய்க் கட்டுண்டிருக்கிறோம். நமக்குஅவர்கள் அண்ணன், தம்பிகளாகவும், மாமன், மைத்துனராகவும், தந்தை, பாட்டனராகவும், கணவர், காதலரர்கவும்வாய்த்திருக்கின்றனர். இவர்களே நமக்குப் பகைவராகவும் மூண்டிருக்கையில் இவர்களைஎதிர்த்துப் போர்செய்யவேண்டும் என்பதை நினைக்கும்பொழுது என்னுடைய மனம் குருக்ஷேத்திரத்தில் போர்தொடங்கிய போது அர்ஜுனனுடைய மனது திகைத்ததுபோலத் திகைக்கிறது.

> பாரதியார் தனது கவிதைகளை விடக் கட்டுரைகளில்தான் பெண் விடுதலை பற்றி அதிகமாகக் கூறியிருக்கிறார். ஆனால் பெண்விடுதலைபற்றி மேற்கோள்காட்டுபவர்கள் அவரின் கவிதைகளைத்தான் காட்டுகிறார்கள்; கட்டுரைகளைப் பயன்படுத்துவது இல்லை என்று கூறும் கட்டுரையாளர், திருமதி. கண்ணம்மா பாரதிபார்எழுதிய கட்டுரையில் இருந்து சில பகுதிகளை இங்கு தருகின்றார்

ஆண்மக்களை நாம் ஆயுதங்களால் எதிர்த்தல் நினைக்கத்தகாத காரியம். அதுபற்றியே 'சாத்வீக எதிர்ப்பினால் இவர்களுக்கு நல்ல புத்திவரும்படிச் செய்யவேண்டுமென்று நான் சொல்கிறேன்.

'அடிமைப்பட்டு வாழமாட்டோம்; சமத்துவமாக நடத்தினாலன்றி உங்களுடன் சேர்ந்திருக்க விரும்போம்' என்று அவர்களிடம் வெளிப்படையாகவும், தெளிவாகவும் சொல்லி விட்டு அதினின்றும் அவர்கள் கோபத்தால் நமக்கு விதிக்கக்கூடிய தண்டனைகளையெல்லாம் தெய்வத்தை நம்பிப் பல்லைக் கடித்துக்கொண்டு பொறுப்பதே உபாயம்.

ஒரு ஸ்திரியானவள் இந்த சாத்வீக எதிர்ப்பு முறையை அனுசரிக்க விரும்பினால் தனது கணவனிடம் சொல்லத்தக்கது யாதெனில்:-

நான் எல்லா வகையிலும் உனக்குச் சமமாக வாழ்வதில் உனக்கும் சம்மதமுண்டானால் உன்னுடன் வாழ்வேன். இல்லாவிட்டால் இன்று ராத்திரி சமையல் செய்யமாட்டேன். எனக்கு வேண்டியதைப் பண்ணித் தின்றுகொண்டிருப்பேன். உனக்குச்சோறு போடமாட்டேன். நீ அடித்து வெளியே தள்ளினால் வீதியில் கிடந்து சாவேன். இந்த வீடு என்னுடையது. இதை விட்டு வெளியேறவும் மாட்டேன்'' என்று கண்டிப்பாகச் சொல்லி விடவும் வேண்டும்.

இங்ஙனம் கூறும் தீர்மான வார்த்தையை இந்திரிய இன்பங்களை விரும்பியேனும் நகை, துணி முதலிய வீண் ஆடம்பரங்களை இச்சித்தேனும், நிலையற்ற உயிர் வாழ்வைப் பெரிதாகப் பாராட்டியேனும் மாற்றக் கூடாது.

'சிறிது சிறிதாக, படிப்படியாக நியாயத்தை ஏற்படுத்திக் கொள்வோம்' என்னும் கோழை நிதானக் கட்சியாளரின் மூடத்தனத்தை நாம் கைக் கொள்ளக் கூடாது. நமக்கு நியாயம் வேண்டும். அதுவும் இந்த க்ஷணத்திலேயே வேண்டும்.

### பாரதியார் எழுதிய கட்டுரை

இங்ஙனம்பரிபூரண சமத்துவமில்லாத இடத்திலே ஆண் மக்களுடன் நாம் வாழமாட்டோம்' என்று சொல்வதனால் நமக்கு நம்முடைய புருஷர்களாலும் புருஷ சமூகத்தாராலும் ஏற்படக்கூடிய கொடுமைகள் எத்தனையேயாயினும் எத்தன்மையுடையனவாயினும், அவற்றால் நமக்கு மரணமே நேரிடினும், நாம் அஞ்சக் கூடாது.

சகோதரிகளே! ஆறிலும் சாவு; நூறிலும் சாவு. தர்மத்துக்காக மடிகிறவர்களும் மடியத்தான் செய்கிறார்கள். சாமான்ய ஜனங்களும் மடியத்தான் செய்கிறார்கள். ஆதலால் சகோதரிகளே, பெண் விடுதலைக்காக இந்த ஷணத்திலேயே தர்மயுத்தம் தொடங்குங்கள். நாம் வெற்றி பெறுவோம். நமக்கு மஹாசக்தி துணை செய்வாள். வந்தே மாதரம். இப்படிப்பாரதியார் தனது கட்டுரையில் கூறியிருக்கின்றார்; ★




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணின் வலிமைக்குப் பின்னால் பெண்!

# இந்திக்குச் சென்ற தமிழ் நடிகை ரேகா பேட்டி

? இத்தனை காலம் இருந்ததுபோல இனிமேல் இருக்கமாட்டேன் - என்று கடந்த ஆண்டு கூறினீர்கள். இப்போது உண்மையில் மாறித்தான் இருக்கிறீர்களா? இல்லை முன்புமாதிரித்தானா?

! அப்போது நான் அப்படிச் சொன்னது உண்மைதான்! ஆனால் நாம் விரும்புகிறமாதிரியான ஒருமாற்றம் வரவில்லை என்றால் எவ்வளவு போரடிக்கிறது தெரியுமா! நீங்கள் விரும்புகிறமாதிரி ஒரு வாழ்க்கை அமையவில்லை என்றால் அதற்காக நாம் ஒடிந்து போய்விடக்கூடாது. கிடைக்கும் வாழ்வை ஏற்றுக் கொள்ளப்பழகிக்கொள்ளவேண்டும். வாழ்வின் ஒவ்வொரு அசைவையும் அனுபவித்து அது உண்மையிலேயே மதிப்புமிக்கது என்ற ரீதியில் வாழக் கற்றுக்கொள்ளவேண்டும்.

? வாழ்க்கை அது இது என்று ஒரே தத்துவமாகக் கூறுகிறீர்கள் .... இப்போது என்னதான் சொல்லவருகிறீர்கள்?

! என்ன அதற்குள் நான் போரடித்து விட்டேனா? டோன்ட் மிஸ்டேக் மீ. நான் சொல்வது என்னவென்றால் நான் நானாக இருக்கிறேன். அதாவது எனது பர்சனலிட்டி எனக்குமட்டும்தான் உண்டு. இவர் ரேகாவைப்போன்று இருக்கிறார் என்று கூறும் அளவுக்கு வேறு யாரும் இருக்கமாட்டார்கள்.

யூ நோ! நான் இப்போதெல்லாம் வாழ்வில நிறைவேறாத என்ற கனவுகள் காண்பதை நிறுத்தி விட்டேன். 'நீ வாழும் காலத்தில்ஏதாவது சாதித்துவிட்டுச் செல். அது நீ இறந்தபிறகும் மக்கள் மனதில் நிற்கவேண்டும் என்று என் தாய் கூறுவார். அதை நான் நம்புகிறேன். ஆனால் அதற்காக ஒரு பூங்காவில் சிலையாக நிற்பதை விரும்பவில்லை. நடிப்பில் நான் செய்திருக்கும் சில சாதனைகளே போதும்.

? அப்படி என்ன சாதனை செய்துவிட்டீர்கள்? எல்லா நடிகைகளும் செய்வதைப் போல் நடிப்புத்தொழிலை (!)மட்டும்தான் செய்தீர்கள்!

! வெறும் நடிப்பு என்று சொல்லிவிடமுடியாது. நான் கற்பனை செய்துபார்க்கமுடியாத கேரக்டர்களில் நடிக்க எனக்கு சான்ஸ் கிடைத்தது. ஆண்களின் ஆதிக்கம் நிறைந்த இந்த சினிமா உலகில், ஹீரோயின்களால் எதுவும் செய்ய முடியாது என்ற நிலையில், இது ரேகா நடித்த படம். ரேகாவுக்காக இந்தப் படத்தைப் பத்து முறை பார்த்தேன் என்று ரசிகர்கள், ரசிகைகள் பேசும் அளவுக்கு நடித்து இருக்கிறேனே... அது சாதனை இல்லையா?

ஹீரோயின்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து எடுத்த படங்கள் பலவற்றில் நான் நடித்து இருக்கிறேன். கடந்த 19 ஆண்டுகளாக இந்தி சினிமாவில் இருக்கிறேன் என்றால் உங்களால் நம்ப முடிகிறதா?

? நம்பத்தான் முடியவில்லை. இப்போது வரும் இந்திப் படங்கள் பற்றி சொல்லுங்களேன்...

! வன்முறையைத் தூண்டும் படங்கள்தான் அதிகமாக வருகின்றன. ஆனாலும் சமீபகாலமாக இந்த டிரண்ட் மாறி இருக்கிறது. நல்ல கதையம்சமும், புதுமைப் பெண்களைப் பற்றிய படமும் வர ஆரம்பித்து இருக்கின்றன.

? 'புதுமைப் பெண்கள்' என்று யாரை குறிப்பிடுகிறீர்கள்? சுடிதார், மிடி, சல்வார் கமீஸ், ஜீன்ஸ்என்று மொர்டன் டிரஸ் அணிந்து எதற்கெடுத்தாலும் ஆண்களுடன் தர்க்கம் செய்கிறார்களே... அவர்களைச் சொல்கிறீர்களா?

! இல்லை...இல்லை... நீங்கள் ஏன் அப்படித் தவறாக நினைக்கிறீர்கள். நான் சொல்லும் பெண்கள் சுதந்திரமான சிந்தனை கொண்டவர்கள். தங்கள் விதியை நினைத்து நொந்து கொண்டு வரதட்சணை, மாமியார் கொடுமை என்று கஷ்டப்படும் ஜீவன்கள் அல்ல அவர்கள். எதையும் எதிர்த்து நின்று போராடும் குணம் மிக்கவர்கள்.

ஆண்கள் எத்தனை நூற்றாண்டுகள் ஆனாலும் மாறவே மாட்டார்கள். ஆனால் அதே நேரம் ஆண் துணை இல்லாமல் பெண்கள் வாழ்வதும் கஷ்டம். ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுத்து வாழ்வதுதான் வாழ்க்கை. ஓர் ஆண், உடல் அளவில் வலிமைமிக்கவனாக இருக்கலாம். வெளிப்பார்வைக்குத்தான் அந்த வலிமை பெரிதாகத் தெரிகிறது உண்மையில் அவனுடைய வீரம், வலிமைக்குப் பின்னால் ஒரு பெண் இருக்கிறாள். ஒரு ஆணுக்கு எதிலும் பெண்தான் பிடிப்பு. பெண்ணுக்கு ஆண் தான் வாழ்வு.

? முன்னுக்குப்பின் முரணாக கருத்து சொல்கிறீர்கள்... இந்த விஷயத்தில் நீங்கள் தான் அத்தாரிட்டி என்று நினைக்கிறீர்களா?

! அப்படி இல்லை. நான் எனது கருத்தை மட்டும்தான் சொன்னேன். சிலருக்கு இதில் உடன்பாடு இருக்காது. எனது அனுபவத்தில் இவ்வாறான கருத்து உருவாகி



ஜெமினிகணேசனின் மகளானரேகாவின் அழகுத் தோற்றம்

இருப்பதால் உங்கள் அனுபவத்தில் இந்தக் கருத்து வித்தியாசப்படக்கூடாது என்று இல்லையே...

? ஓ. கே. ரேகா... மீண்டும் சினிமாவுக்குப் போவோம். உலகியலைப் பிறகு பேசலாம்... ஒரு காலத்தில் நீங்கள் பிரபலமாக, நம்பர் ஒன் என்ற இடத்தில் இருந்தீர்கள். இப்போது அந்த இடத்தில் வேறு யாரோ இருக்கிறார்கள். அதாவது ஒரு ராணித்தேனீ போல இருந்த நீங்கள் இப்போது சாதாரண தேனீயாக கீழே இறங்கு விட்டீர்கள் என்று கூறப்படுகிறதே?

நான் ராணித்தேனீயாகவும் இல்லை. இப்போது கீழே விழுந்து விடவும் இல்லை. இருப்பதில் பெஸ்ட் என்ற நிலையில் தான் எப்போதும் இருக்கிறேன். வேறு சில நடிகைகள் என்னைப்பற்றி மோசமாகப் பேசலாம். அவர்களின் வாய்ப்புகளைத் தட்டிப்

[illegible]

பறித்து விடுவேனோ என்ற பயம்தான் அவர்களை இப்படி பேசச் செய்கிறது. இன்று என் கையில் பத்துப் படங்கள் இருக்கின்றன. நீண்டகாலமாக இரட்டை வேடங்களில் நடிக்கும் நடிகை நான் ஒருத்தியாகத்தான் இருக்க முடியும்.

ஆரம்ப காலத்தில் எனக்கு ஏற்பட்ட அவமானங்கள், கஷ்டங்கள்தான் இப்போது என்னைப் பொறுமையானவளாக மாற்றி இருக்கிறது. படப்பிடிப்பு தளங்களில் 'ஏன் அவர் இன்னும் போன் செய்யவில்லையா' என்று எத்தனை பேர் கேட்டு இருக்கிறார்கள் தெரியுமா? அந்த 'அவர்' யார் என்பது அந்தக் காலகட்டத்தில் என்னைப்பற்றி வரும் கிசுகிசுக்களில் மாட்டிக்கொண்டவராக இருக்கும்...

என்னுடன் நடிக்கும் நடிகைகள் நன்றாக நடித்தால் அதை பாராட்டத் தயங்கியது இல்லை. அந்த வார்த்தைகளை போட்டு, ரேகாவால் 'பாராட்டு பெற்றவர்' என்று எத்தனை பேர் சான்ஸ் பெற்றனர் என்பது எனக்குத்தான் தெரியும். அவர்களில் சிலரே பின்னால் என்னைத் தூற்றியதும் தெரியும்.

? மீராநாயரின் 'சூல பம்பாய் சூல்' என்ற படத்தில் 'விலைமாது' கேரக்டர்களில் நடிக்க உங்களைக் கூப்பிட்டதற்கு மறுத்து விட்டீர்களாமே? பிறகு அனிதா கன்வர் நடித்து அந்தப் படம் கேன்னஸ் திரைப்பட விழாவில் விருது பெற்றதே: அதனால் உங்களுக்கு வருத்தம் தானே?

! இல்லை! அந்தப் படத்தில் நடிக்காதது குறித்து நான் மகிழ்ச்சிஅடைகிறேன். கேன்ஸ் என்ன, ஆஸ்கர் விருது கிடைத்து இருந்தால் கூட அதனால் நான் கவலைப்படமாட்டேன். அந்தப் படத்தின் ஸ்கிரிப்டை என்னிடம் கொடுத்து, நடிக்க சம்மதமா என்று கேட்டனர். முடியாது என்று சொல்லி விட்டேன். காரணம் அதில் என் கேரக்டர்படி படம் முழுவதும் வெறும் 'பிரா' மட்டும் அணிந்து நடிக்க வேண்டும் என்று கேரக்டர் சித்தரிக்கப்பட்டு இருந்ததுதான். அதில் நான் நடிக்க ஆட்சேபனை இல்லை என்று சொல்லியிருந்தால், ஏற்கனவே 'சத்தியம் சிவம் சுந்தரம்' படத்தில் நடித்து இருந்திருப்பேன்.

? கவர்ச்சியாக நடித்தாலும் கூட, அது ஒரு எல்லைக்குள் இருக்க வேண்டும் என்ற உங்கள் உணர்வுக்குப் பாராட்டுக்கள் ரேகா... நீங்கள் கஷ்டப்பட்டு நடித்த ஒரு படமோ அல்லது தொடர்ந்து பல படங்களோ தோல்வி அடைந்தால் உங்கள் மனநிலை எப்படி இருக்கும்? பயம் ஏற்படுமா?

! பயம் எல்லாம் கிடையாது. ரொம்பக் கஷ்டப்பட்டு நடித்த படம் வெற்றி பெறவில்லை என்றால் வருத்தமாக இருக்கும். நான் நடிக்கும் சில படங்கள் குறிப்பிட்ட ஷெட்யூலில் முடியாது. ரிலீஸ் ஆக பல மாதங்கள் ஆகும். நீண்ட காலம் தயாரிப்பில் இருந்து ரிலீஸ் ஆ... கள் எதிர்பார்த்த அளவு வெற்றி பெற... உண்டு. அப்போது எல்லாம் ரேகா, ஒழிந்தாள்... இனி அவள் தலை தூக்க முடியாது என்று பலர் கூறினர். அதைப்பற்றி நான் கவலைப்பட்டது இல்லை. காரணம் இப்படி எல்லாம் பேச்சு வரும் என்று எதிர்பார்த்ததுதான். ஏற்ற இறக்கம் என்பது சகஜமானது.

நம்பர் வன் நடிகை என்பதை எதை வைத்து முடிவு செய்கிறீர்கள். எவ்வளவு பணம் வாங்குகிறார் என்பதை வைத்துத் தானே. நான் கேட்கும் தொகை கிடைக்கிறது அது போதும்.

? தரமான படம் ஒன்றில் பணம் வாங்காமல் நடிக்கச் சம்மதிப்பீர்களா?

! நிச்சயம்! ஆனால் அது போன்ற படங்களை இங்கு யார் தயாரிக்கின்றனர். யாரும் முன்வருவது இல்லை. ஒரு டசின் படங்களுக்கு மேல் நான் பணம் வாங்காமல் நடித்துக் கொடுத்து இருக்கிறேன். இப்போதுகூட நான் பணம் வாங்கக் காரணம். நகையோ, வைரமோ வாங்க அல்ல. மூளை வளர்ச்சி அடையாத குழந்தைகளுக்காக ஒரு இல்லம் ஆரம்பிக்க வேண்டும் என்பதால் தான் இன்னும் நடிக்கிறேன், சம்பாதிக்கிறேன். இப்போது நான் வாழ்க்கையைப் பற்றி ஓரளவு அறிந்திருக்கிறேன்.

? என்ன ரேகா! நீங்கள் ஆரம்பத்தில் இருந்தே வாழ்க்கை... வாழ்க்கை... என்று திரும்பத் திரும்ப அதே வார்த்தையை பேசிக் கொண்டு இருக்கிறீர்கள்...?

! வாழ்க்கையைப் பற்றி திரும்ப திரும்ப நான் பேசுவதற்குக் காரணம் அதனுடன் நான் சண்டை போடுவது தான். எனக்குக் கிடைத்துள்ள வாழ்க்கையை நான் விரும்பும் விதத்தில் அமைத்துக் கொள்வதே எனது லட்சியம். நீங்கள் ஏன் திருமணம் செய்து கொள்ளவில்லை? குழந்தைகள் பெற்றுக்கொள்ளவில்லை? குடும்பம் வேண்டாமா? என்று சிலர் கேட்கின்றனர். இதற்கு நான் என்ன சொல்வது? இப்போதைய நிலையில் எனது தொடுவானில் யாரும் இல்லை.

? அமிதாப் பக்கத்தில் இருந்து எந்தவித பதிலும் வரவில்லையா?

! அமிதாப்பா? நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள் என்று தெரியவில்லை. இந்தப் பெயருக்கும் எனக்கும் தொடர்பு கிடையாது (?) மக்கள் எங்கள் உறவு பற்றி தெரிந்து கொள்ள மிகவும் ஆர்வமாக இருந்தால், அது ஒரு மாயை என்று எடுத்துக் கொள்ளட்டும்.

? நேரடியாகப் பதில் கூறாமல் குழப்புகிறீர்கள். உண்மையா? இல்லையா?

! நீங்கள் அப்படி நினைக்கலாம். ஆனால் நான் நேரடியாகத்தான் பதில் கூறுகிறேன். இதன் அர்த்தம் புரிந்து கொள்ள முடியாத அளவில் இல்லை.

? சரி அது போகட்டும். மீண்டும் சினிமாவை விட்டு விலகி ஒரு கேள்வி. கோபப்படாமல் பதில் சொல்லுங்கள்? உங்கள் வாழ்வில் இது வரை எத்தனை முறை காதலித்து இருக்கிறீர்கள்?

! காதல் வயப்படுவதும், காதல் பார்வையில் மயங்குவதும் மிகவும் கடினமான ஒரு செயல். காதல் என்றால் பீச், பாக், ஓட்டல் என்று சுற்றுவது மட்டும் அல்ல. ஒரே மாதிரியான சிந்தனை, ஆழமான நட்பு, ஒருவரை ஒருவர் மதித்தல், சுக துக்கங்களில் பங்கேற்றல், உள்ளத்து ஆசைகளை பகிர்ந்து கொள்ளுதல் என்று காதலுக்கு விளக்கம் சொல்லிக்கொண்டே போகலாம்.

சின்னச் சின்னவிஷயங்களுக்காகச் சண்டை போட்டுக் கொள்வது பின்னர் சமாதானமாகிசந்தோஷப்படுவது, கடிதம் எழுதிவிட்டுப் பதிலுக்காகக் காத்திருப்பது, அதில் சுகம் காணுவது என்று காதலில் உள்ள சந்தோஷங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

என் வாழ்வில் ஒரே ஒரு முறை காதலித்து இருக்கிறேன்.

? உங்கள் வாழ்வில் மிகவும் மகிழ்ச்சியாக இருந்த நேரம் எது?

! ஒரு முறை என் 'அவர்' கூறும்போது "'ரேகா நீதான் எனது உண்மையானநண்பன் என்னில் பாதி நீ; நாம் பிரிந்தாலும் கூட நினைவுகள் பிரியாது'' என்றார். எனது குறைகளை எடுத்துச் சொல்லும் முழு உரிமையை அவரிடம் கொடுத்து இருந்தேன். எல்லா எல்லைகளையும் தாண்டி எங்கள் உறவு இருந்தது.★

## துணுக்கு

காயமடைந்தவர்களை இசையாலே குணப்படுத்தும் சிகிச்சைமுறை மேலை நாடுகளில் பரவிவருகிறது.

இந்த முறையைப் பிரபலப் படுத்த நிதிதிரட்டும் இசைக் கச்சேரிகள், களியாட்டவிழாக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

அப்படி ஒருவிழா அண்மையில் லண்டனில் நடத்தப்பட்டது.

அதில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ள அமெரிக்காவின் பிரபல நடிகை ஜோன் கொலின்ஸ் விமானத்தில் லண்டன் வந்தார்.

இசைச் சிகிச்சைமுறையில் ஜோன் கொலின்ஸுக்கு அக்கறை உண்டு.

காரணம், விபத்தில் காயமடைந்த அவரின் மகள் இசைச் சிகிச்சை முறையினால் தான் குணப்படுத்தப்பட்டார். ★

வெள்ளித் திரையில்




அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
முகத்தின் அழகு படத்தில் தெரியும்
அழகுக்கு அழகூட்டும் தரமான
கலர்ப்படப் பிரதிகளை
யாழ்ப்பாணத்திலேயே
அதிகுறை கட்டணத்தில்
மிகக் குறுகிய காலத்தில் பெற
"ஷப்ரு"வை நாடுங்கள்!
கலர் படச் சுருள் கழுவுதல்-
முற்றிலும் இலவசம்!!

- 3 முதல் 5 நாட்களுக்குள் விநியோகம்
- நவீன கம்பியூட்டர் இயந்திரத்தில் பிரதி செய்யப்படுதல்
- ஸ்ருடியோக்கள், 'ஷப்ரு' வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகை!!!
- கலர்ப் பிரதி Glossy / Matt தாள்களில் பிரதி செய்து கொடுக்கப்படும்

எல்லா நாட்களிலும் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்

நீங்கள் நாடவேண்டிய இடம்:

ஷப்ரு
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T. Phone No: 22073


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

லண்டன் அனுபவம்

# ஆங்கிலேயர் தேடிவந்து பேசுகிருர்கள்; தமிழரோ காணுதவர்போல் நடிக்கின்றனர்!

- நா. மாணிக்க இடைக்காடர் -

கடந்த ஐம்பது ஆண்டுகளாக இடையிடையே நான் லண்டன் செல்வது வழக்கம். ஆரம்பத்தில் கல்விக்கும், கருமத்திற்கும் சென்றேன். பிற்காலத்தில் வைத்தியத்திற்கும் பிள்ளைகளைச் சந்திப்பதற்கும் செல்கிறேன். ஒவ்வொரு முறையும் அவ்விடம் சென்ருல் எனது அறிவைப்பெருக்க ஏதாவதை அவதானிக்கக் கூடியதாயிருக்கிறது.

இம்முறை வழக்கம் போல் நான் கல்வி கற்க கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகம் சென்றிருந்தேன். அவசரமாக கல்வித் தாபனங்களைப் பார்வையிட முடியாது. ஆனையினுல் ஓர் இரவாவது அங்கே தங்கியிருந்தேன். மனைவியும் என்னுடன் வந்திருந்தார். அங்கே நிரந்தரமாக வசிக்கும் இலங்கை தமிழர் ஒருவருடன் மூன்று மணி நேரம் உரையாட சந்தர்ப்பம் கிடைத்தது. அவர் எனது பழைய நண்பனின் மகன். அவரும் எனக்கு ஒரு நண்பனே. நாங்கள் பேசிக்கொண்டிருக்கும் பொழுது மேற்கு ஐரோப்பாவில் வசிக்கும் தமிழ் அகதிகளைப் பற்றி பேச நேரிட்டது. நான் அந்த நண்பரை எமது நாட்டில் அமைதி திரும்பி வரும் வேளையில் அகதிகளில் எவ்வளவு பேர் நாடு திரும்புவார்கள் என்று கேட்டேன்.

இதற்கு அவர் ஒரு பிரசங்கத்தையே செய்து விட்டார். அகதிகள் அநேகமானேர் இளைஞர்கள். தங்கள் உயிரை காப்பதற்காகவே முக்கியமாக நாட்டை விட்டு வந்தவர்கள். இதர காரணமும் உண்டு அதாவது இலங்கையில் வசதியாய் தொழில் செய்ய வாய்ப்பில்லாததும் என்ருர். ஜேர்மனி போன்ற நாடுகளுக்கு வந்த இளைஞர் ஏதாவது ஒரு தொழிலைக்கற்றுக்கொண்டார்கள். வசதியாகப் பலர் வாழ்கிருர்கள். இந்த சூழ்நிலையில் அவர்களில் பலர் அவர்களின் விருப்பத்தை கேட்டால் தாய் நாடு திரும்ப விருப்பமில்லை என்று கூறுவார்கள் என்ருர். நாட்டுப் பற்று அந்த இளைஞருக்கு உண்டு. பண உதவியும் வேறு உதவியும் செய்வார்கள். ஆனல் நிரந்தரமாகத் தாய் நாடு திரும்ப விரும்ப மாட்டார்கள் எனத்திடமாகக் கூறினர்.

உடனே எனக்கு ஒரு ஏமாற்றம் வந்தது. அநேகமானேர் திரும்புவார்கள் என நான் நம்பியிருந்தேன். எனது நண்பன் கூறியதைக் கேட்டதும் அவர் கூறியதில் எவ்வளவோ உண்மை இருக்கிறதென்று தெரிந்தது. ஏதாவது ஒரு எதிர்காலத்தை நாம் இந் நாட்டில் திட்டமிடும்பொழுது இந்த இளைஞர்களில் அநேகமானேர் திரும்பிவர மாட்டார்கள் என்பதை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இம் முறை லண்டனில் ஒரு புதிய அனுபவத்தை நானும் மனைவியும் பெற்றேம். ஒரு இலங்கைத் தமிழரின் மகளின் திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தோம். இத் தமிழ் மகனின் மனைவி ஆங்கிலேயப் பெண். சுமார் இரு நூறு விருந்தாளிகள் வந்திருந்தார்கள். இருபது தமிழ் மக்கள் இதில் அடங்கும் ஆங்கிலேயர் எங்களுடன் உரையாடினர்கள். ஆனல் தமிழர்கள் மனைவியையும் என்னையும் காணுதவர்கள்போல நடித்தார்கள். எங்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை. வரவேற்பு முடிவதற்கு சில நிமிடத்திற்கு முன் ஒரு தமிழ்ப்பெண் எனது மனைவியை பார்த்து எப்படி லண்டனில் சமாளிக்கிறீர்கள் என வினவினர். மனைவி, ''நாங்கள் ஒரு வீடு (FLAT) வாடகைக்கு எடுத்து சீவிக்கிறேம்''— என்று கூறினர் இதை அந்தப் பெண் மற்றவர்களுக்குக் கூற பல தமிழர் எங்களிடம் வந்து உரையாடினர்கள். நாங்கள் அகதிகள் என்று நினைத்துத்தான் எங்களுடன் உரையாடத் தயங்கினர்கள் என்று பின்பு அறிந்தோம். அகதிகளாயிருந்து விட்டால் ஏதாவது உதவி கேட்டு விடுவோமென்று எங்களைத் தவிர்த்து நடந்தார்கள் என பின்னர் அறியக் கூடியதாயிருந்தது. இப்படிப்பட்ட தமிழரும் லண்டனில் இருக்கிருர்கள். 'நாம் கெட்டிக்காரர்கள் தப்பிவிட்டோம்' இப்படி நினைத்துத் தங்கள் முதுகைத் தாங்களே தட்டிக்கொண்டு ஊரில் யாரும் எக்கேடு கெட்டால் என்ன என்பவர்களும் உண்டு அதே சமயத்தில் தங்கள் ஓய்வு நேரங்களில் பணம் சேர்த்து, உபகரணங்கள் சேர்த்து இந்த நாட்டுக்கு அனுப்பும் பெரிய மனம் படைத்தவர்களும் உண்டு.

வெளி நாட்டில் உள்ள தமிழ் மக்களுடன் நாங்கள் எப்படி நடக்கவேண்டுமென்று யோசித்தால் அவர்கள் எங்கள் நாளாந்த வாழ்க்கையை பகிர்ந்து கொள்ள முடியாமல் இருந்தாலும் அவர்கள் எங்களுக்கு வேறு விதத்தில் உதவி செய்யலாம். எங்கள் நிலையை உலகிற்கு எடுத்துக் காட்டலாம். பொருள் உதவி செய்யலாம், விடுமுறையில் வரும்பொழுது தாங்கள் கற்ற கலையை, அடைந்த அனுபவத்தை எங்கள் இளைஞருக்குப் போதிக்கலாம். விடுமுறையில் வருபவர்கள் குடும்பத்தினரோடு முழு நேரத்தை செலவிடாமல் தங்கள் அனுபவத்தை இரண்டு, மூன்று வாரமாயினும் எங்கள் இளைஞர்களுக்கு கற்றுக் கொடுக்கலாம். இதற்குஒருசிறுஸ்தாபனத்தை உருவாக்கி யார் யார் எந்தக் காலங்களில் ஊருக்கு வருவார்கள் என அறிந்து ஒரு அட்டவணையைத் தயாரிக்கலாம். எனக்குத் தெரிந்த ஒரு ஸ்தாபனம் லண்டனில் உள்ளது. அவர்களுடன் தொடர்பு கொண்டால் அவர்கள் விடுமுறையில் வருபவர்களின் விபரங்களை யாழ் அலுவலகத்திற்குக் கொடுப்பார்கள், எதிர்காலத்தில் யோசிக்க வேண்டிய விடயங்களில் இதுவும் ஒன்று என்று கருதுகிறேன்.

இன்றைய இருள் நிறைந்த காலகட்டத்தில் எல்லாம் போய் விட்டதென்று மனதை விடாமல் எங்கள் எங்கள் கருமங்களைச் சிறிதோ பெரிதோ செய்து கொண்டு இருக்க வேண்டும். கிருஷ்ண பரமாத்மா கீதையில் கூறுகிருர் ''நானே எல்லாவற்றிற்கும் கர்த்தா ஆயினும் நானும் வேலை செய்து கொண்டேயிருக்கிறேன்'' இது எதனைக் காட்டுகிறது? யார் யாராயிருந்தாலும் எந்த சூழ்நிலையாயிருந்தாலும் தங்கள் தங்கள் கடமைகளை இயலக்கூடியளவில் செய்ய வேண்டுமென்பதையே.

இதனல்தான் லண்டனில் பல மாதங்கள் தங்காமல் தாயகம் திரும்பினேன். ★

## அமெரிக்காவிலும் அரசவைக் கவிஞர்

அரசவைக் கவிஞர் பதவி அமெரிக்காவிலும் உண்டு.

புதிய அரசவைக் கவிஞராக ஹாவார்ட் நெம்ரோவ் நியமிக்கப்பட்டிருக்கிருர்.

எதிர்வரும் செப்டம்பரில் இவர் பதவி ஏற்கிருர்.

கடந்த மூன்று ஆண்டுகளில் அரசவைக் கவிஞராக நியமிக்கப்பட்டிருக்கும் மூன்ருவது கவிஞர் இவர்.

இந்தப் பதவிக் காலம் ஓராண்டு ஆகும்.

அவருக்கு இலங்கைப் பணத்தில் பத்து லட்சம் ரூபா ஊதியமாக வழங்கப்படும்.

கவிஞர் நெம்ரோவ் வாஷிங்டன் பல்கலைக் கழகத்தில சுமார் 20 ஆண்டுகள் பேராசிரியராகப் பணியாற்றி வருகிருர். ★


# டியூரோல்®

டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.




'செறி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®

ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®

தினமும் டியூரோல்® அருந்துங்கள். அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.

சில்லறை விலை ரூ. 37/50 200 மி. லீ. Pfizer சில்லறை விலை ரூ.39/90 200 மி. லீ.

®ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.


## ஒரு குமாஸ்தா ஓவர்டைம் செய்கிருர்!

கடுகுக் கதை

பரமசாமிக்கு விரக்தியினுல் சலிப்பு ஏற்பட்டது. எத்தனை தடவைகள் கச்சேரிப்படி ஏறி இறங்கியிருப்பார். ஒரு முறை கூட மகாலிங்கத்தைச் சந்திக்க முடியவில்லை.

பரமசாமி ரிடையர் ஆகி ஆறுமாதங்களாகின்றது. பென்சன் இன்னும் கிடைக்கவில்லை. அது விடயமாகச் சில விபரங்கள் கச்சேரியில் பெற வேண்டும். அவருக்கு நன்கு தெரிந்த மகாலிங்கம் அங்கு வேலை செய்கிருர். அவரிடம் சொல்லியிருந்தார். பலன் கிடைக்கவில்லை. நேரில் சந்திக்கப் பலமுறை கச்சேரிக்குப் போயும் சந்திக்க முடியவில்லை. இறுதியில் மகாலிங்கத்தை வீட்டில் போய் சந்திக்கத் தீர்மானித்தார்.

மகாலிங்கத்தின் வீட்டிற்குப் பரமசாமி காலை எட்டு மணிக்குப் போனபொழுது, மகாலிங்கம் கச்சேரிக்குப் புறப்படத் தயாராக இருந்தார்.

பரமசாமியைக் கண்டவுடன் 'வாங்கோ, வாங்கோ' என்று சொல்லி வரவேற்ருர்.

'தம்பி என்ரை பென்சன் விஷயமாக ஒருக்கா பகப்படுத்தலாமென்று வந்தனுன்' பரமசாமி ஆரம்பித்தார்.

'தேவையில்லை. நான் மறக்கமாட்டன்' செய்து தாறேன்.

'நேற்று ஒன்பதரைக்கு வந்தனுன். நீங் சீட்டிலை இல்லை' பரமசாமி சொன்னர்.

'ஒன்பதரைக்கா? இருக்கமாட்டேன். பிள்ளையை நேர்சரிக்கு விட்டுவிட்டு வர ஒன்பதேமுக்காலாகும்'

'அப்ப இன்டைக்குப் பத்து மணிக்கு வந்தால் சந்திக்கலாமா' பரமசாமி கேட்டார்.

'பத்தா? நோ. நான் கான்டீனில் இருப்பேன் எப்படியும் உங்கடை அலுவலை செய்து தர்றேன்' பரமசாமிவிடவில்லை 'பத்தரைக்கு வரட்டா'

'பத்தரைக்கு கிளப்மீட்டிங்'

'அப்போ சரியா பதினென்றுக்கு வாறேன்' விடாப்பிடியா கேட்டார் பரமசாமி.

'நோ! பதினென்றுக்கு பாங்கிலை அலுவல் இருக்கு. நான் உங்கடை அலுவலைக் கவனிக்கிறேன்'

'தம்பி பன்னிரண்டுமணிக்கு வர்றேனே'

'பன்னிரண்டுக்கு லஞ்சுக்குப் போயிடுவேன்.

டோன்ட் வொறி நான் செய்து தர்றேன்' பரமசாமி விடுவதாயில்லை. 'சாப்பாட்டுக்குப் பிறகு எப்ப வருவீங்' என்று கேட்டார்.

'இரண்டு மணிக்கு'

'அப்பே இரண்டு மணிக்கு வர்றேன்'

'இரண்டு மணிக்கா? வேணும், ரெலெக்சில் பேசணும் நான் நிற்கமாட்டேன்'

'அப்ப மூணுமணிக்கு வர்றேன்' தன் அலுவலை எப்படியும் செய்து முடிக்கவேண்டும் என்ற ஆவலில் பரமசாமி விடாப்பிடியாக நின்ருர்.

'மூணுமணி டீ ரைம். கன்டீனில் இருப்பேன். நீங் வர வேணும், நன் கவனிக்கிறேன்'

'இல்லைத்தம்பி வந்தா அலுவலை முடிச்சுடலாம். மூணரைக்குவர்றேன். வேணும் மூணரைக்குக் கிளப் மீற்றிங்' என்ருர் மகாலிங்கம்.

பரமசாமி சோர்ந்துபோனர். 'அப்பதம்பி நாலேகாலுக்குப் பிறகு வீட்டைவந்து பார்க்கிறேன்.

மகாலிங்கம் சிரித்தார். நாலே காலுக்குப்பின் நான் ஓவர்டைம் வேர்க் பண்ணணும். வீட்டில் நிற்கமாட்டேன்.

'ஓவர்டைமா?'

பரமசாமி மெல்ல எழுந்து நடையைக்கட்டினர். ★

- பாலரஞ்சன் -

## மா மரங்களைக் கவாத்து செய்தல்

நல்ல ஆரோக்கியத்துடன் கூடிய சுமார் 25 வயதுக்கு மேற்பட்ட மா மரங்களைச் சரியாகக் காய்க்காமல் இருப்பின் அவற்றைக் வாத்து செய்து காய்ப்புத்திறனை அதிகரிக்கலாம். மரங்கள் மிகவும் அடர்த்தியாக வளர்ந்திருப்பின் அவற்றின் நெருக்கத்தைக் குறைக்க, மரங்களில் குறுக்காகவும், உட்பக்கம் நோக்கியும் வளர்ந்துள்ள ஒரு சிலகிளைகளை வெட்டி நீக்கிவிட வேண்டும். கிளைகள் தண்டிலிருந்து பிரியும் இடத்தில் ஒழுங்காக ஒட்ட வெட்டியோ அல்லது அறுத்தோ நீக்க வேண்டும். மொட்டையாக அடிக்கிளைகள் நீட்டிக்கொண்டிருக்கக் கூடாது. மரத்தின் மொத்த அடர்த்தியில் சுமார் 15 சதம் இவ்வாறு கிளைகளை நீங்குவது மூலம் குறைக்க வேண்டும். இது தவிர, மரக்கிளைகளின் நுனிக்கொப்புகளில் நான்கிற்கு மேற்பட்ட பக்கக்கிளைகள் இருக்கும். இவற்றில் ஒன்று அல்லது இரண்டு தவிர மிகுதியுள்ளவற்றையும் நீக்கி விடவேண்டும். மரத்திலுள்ள எல்லாக்கிளைகளின் நுனிக் கொப்புகளின் பக்கக்கிளைகளை இவ்வாறு நீக்குவது இயலாது. ஆகவே, இயன்றவரை, மரத்தின் எல்லாப்பகுதிகளிலும், மரத்தின் மொத்த இலைப்பரப்பில் சுமார் 5 சத விகிதம் பக்கக் கிளை நீக்குவதற்கு முயற்சிக்க வேண்டும்.

மேற்கூறிய இரு கவாத்து முறைகளையும் மரம் பூ பிடிக்க சுமார் 4 மாதங்களுக்கு முன்பு அதாவது ஆவணியில் (ஆகஸ்ட் – செப்டம்பர்) செய்ய வேண்டும்.

தொகுப்பு: க. கனகராசா

## தமிழ்த்தென்றல் தலையங்கம் எழுதினுல் பத்திரிகை வெளிவரச் சுணங்கும் மர்மம் என்ன?

'நவசக்தி' ஆசிரியராக தமிழ்த்தென்றல் வி. கலியாணசுந்தரமுதலியார் (வி. க.) இருந்தார்'

துணை ஆசிரியராக திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி) பணியாற்றினர்....

அப்போது ஒருநாள் அச்சுக் கோர்க்கும் தலைமை ஊழியர் கல்கியிடம் 'இன்று யார் தலையங்கம் எழுதப்போகிறீர்கள்' என்று கேட்டார்.

கல்கி, ஏனப்பா, நீ அதைக் கேட்கிருய்? எப்பவும்போல ஐயா (வி. க.) தான் எழுதுவார். நான் உபதலையங்கம் எழுதுவேன்' —என்ருர் கல்கி.

'அப்படியானுல் இன்று நமது பத்திரிகை வெளிவராது! '—என்று அந்த போர்மன் சொல்லிவிட்டார்.


ஏன் என்று போர்மனைக் கல்கி கேட்டார்.

'ஐயா (வி. க.) ஆச்சரியக் குறியாகப் போட்டுத் தள்ளிவிடுவார். இங்கு டைப் இல்லை. ஆகையால் ஆச்சரியக்குறி டைப் ஐந்து பெட்டிகளும் கேள்விக்குறி டைப் இரண்டு பெட்டிகளும் உடனே டைப் பவுண்டரியில் இருந்து வரவழைத்தால்தான் பத்திரிகை வரும்!'

—என்ருரே போர்மன். ★

## சொற்சிலம்பம்

போட்டி இல. 85



சொற்சிலம்பம் இல: 85
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................

——— இங்கே வெட்டுக ———

முடிவு திகதி: 24-8-1988

### இடமிருந்து வலம்

1. கழிவிரக்கம், 5. வறுமை, 7. நூறு, 9. இரை, 10. அதிகம், 11. அவச்செயலைக் குறிக்கும், 13. இந்தியாவின் புகழ்பெற்ற நகரங்களில் ஒன்று. பருப்பின் பெயராலும் பசப்படுவது, 15. தைத்த துணி, 18. சிறு தாவரம் வயலில் மாற்றுச் செய்கைக்காகப் பயிரிடுவர். 19 விதவையருக்கு உகந்த பலகாரம், 21. உள்ளீடற்ற நெல், 22. மேல்நாட்டு குடிவகை, 23. இராமன் ஜானகியைக் கண்டது இங்குதான்.

### மேலிருந்து கீழ்

1. பின் ஐந்தாவது நாள், 2. ஏழரை நாழிகை கொண்ட காலம். இரவையும் குறிக்கும், 3, செம்பு. 4. கல், 6. குற்றத்துக்கு வழங்கப்படுவது, 8. தகுதி 11. நிறம் 12. நெருப்பில்லாமல் வருமா?, 14, அறிகுறி, 16. மேலிருந்துகீழ் 6- முடிந்ததும் கிடைப்பது. 17. இலங்கைத் தேசிய கீதத்தின் முதற்சொல், 20. பெருக்கல் அடையாளம், 21. தலைவன்.

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினுல் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | 100 ரூபா |
| இரண்டாம் பரிசு: | 50 ரூபா |
| மூன்ரும் பரிசு: | 25 ரூபா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26 ஆண்டுகளாக சிறையில் வாடுகின்ற 70 வயது விடுதலைப் போராளி மண்டேலா!

இன்று உலகம் முழுவதும் பரபரப்பாக உச்சரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பெயர் நெல்சன் மண்டேலா.

கடந்த 26 ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் தென் ஆப்பிரிக்க கறுப்பர்கள் இனத் தலைவர் கடந்த 18-ந் தேதியன்று மண்டேலாவின் 70-வது பிறந்த நாள் உலகமெங்கும் கொண்டாடப்பட்டது. ஆனால், தங்களது சொந்த நாட்டில் கூட மக்கள் குதூகலமாக இல்லாத அளவுக்கு அடக்கு முறைகளைக் கையாண்டு ஊர்வலமோ, மற்ற விழாக்களோ நடத்தாமல் பார்த்துக் கொண்டது இனவெறி பிடித்த தென் ஆபிரிக்காவின் வெள்ளையர் ஆட்சி.

டாக்டர் நெல்சன் மண்டேலா, அண்மையில் தனது 70 ஆவது பிறந்த தினத்தைச் சிறையில் கொண்டாடினார்.

தென் ஆபிரிக்க அரசின் நிறவேற்றுமையை எதிர்த்துக் கடந்த 26 ஆண்டுகளாகச் சிறையில் வாடும் டாக்டர் மண்டேலா, சுவாசப்பை நோயினால் பீடிக்கப்பட்டு தற்போது அரச மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

அவரின் வாழ்வு, விடுதலைப் போராட்டம் பற்றி இக்கட்டுரை விவரிக்கின்றது.

நெல்சன் மண்டேலா யார்? அவர் எதற்காக வெள்ளையர்களை எதிர்த்துப் போராடினார்?

நெல்சன் ரோலிலாஹலா மண்டேலா, இதுதான் அவரது முழுப்பெயர். ஆபிரிக்க பழங்குடி மக்கள் நிறைந்த

**- ஈ. நவநீதன் -**

டிரான்ஸ்கெய் பகுதியில் கியூனு என்னும் இடத்தில் 1918ஆம் ஆண்டு ஜூலைமாதம் 18-ந் தேதி ஒரு சாதாரண குடிசையில் பிறந்தவர்தான் மண்டேலா. இவரது தந்தை ஷோசா ஆபிரிக்கப் பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவர்.

படித்துக் கொண்டிருக்கும் போதே அவருக்கு ஆடு, மாடுகளை மேய்க்கும் வேலையும் கொடுக்கப்பட்டது.

பின் உயர்நிலைப் பள்ளிக் கூடப் படிப்பை முடித்தபின் 1941-ம் ஆண்டு ஜோகன்ஸ்பர்க் நகருக்குச் சென்றார்: அங்குள்ள தங்கச் சுரங்கம் ஒன்றில் அவருக்குக் காவலாளி வேலை கிடைத்தது. அந்த வேலையில் இருந்து கொண்டே மற்ற நேரங்களில் அவர் சட்டப்படிப்பு படித்து வந்தார்.

அதன் பின் அவருக்கு ஈவிலின் நொமோதம் சங்காவுக்கும் திருமணம் நடைபெற்றது.

**மண்டேலா**

ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் கட்சியில் தீவிரமாக



மண்டேலா - வின்னி திருமணம் 1958 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆம் திகதி நடந்தது. இந்தத் தம்பதிகள் 4 ஆண்டுகள் மட்டுமே சேர்ந்து இல்லறச் சிறையில் வாழ்ந்தார்கள். அதன் பின்னர் மண்டேலா அரசுச் சிறையில் வாழ்ந்து வருகின்றார். வின்னி சிறைக்கு வெளியே போர்க்கொடியை உயர்த்திப் போராடுகிறார்.

ஈடுபட்டுக் கொண்டிருந்தார். இது ஈவிலினுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. இதனால் மண்டேலாவை விட்டு அவர் விலகிக் கொண்டார்.

மண்டேலாவின் எண்ணமெல்லாம் விடுதலை உணர்வையே தேடிக் கொண்டிருந்தது.

இது ஆளும் அரசின் கோபத்தை மேலும் கிளறி விட்டது. அவரை ராஜதுரோகக் குற்றம் சாட்டி 5 ஆண்டுகள் கோர்ட்டுக்கு அலைக்கழித்தது.

அப்போதுதான் சமூக நல சேவகியான நோம்சாமோ வின்னி மாண்டி கிலேலாவை மண்டேலா சந்தித்தார். இருவருக்குமிடையே மலர்ந்த காதல் 1958-ம் ஆண்டு மண்டேலாவின் 2-வது திருமணத்தில் முடிந்தது.

வின்னி விட்வாட்டர்ஸ்ரண்ட் பல்கலைக் கழகத்தில் பொருளாதார அறிவியலில் பட்டம் பெற்றவர். மண்டேலா- வின்னி தம்பதிக்கு ஜென்னி, ஜின்கி என்னும் 2 மகள்கள் உள்ளனர். வின்னி மண்டேலாவுக்கு இப்போது 54 வயதாகிறது. அவரும் மண்டேலாவின் நெருங்கிய நண்பர் ஒலிவர் டேம்போவும் தான் போராட்டத்தை முன்னின்று நடத்தி வருகிறார்கள்.

மண்டேலா 1958-ம் ஆண்டு குற்றம் நிரூபிக்கப்படாததால், விடுதலை செய்யப்பட்டார். ஆனாலும் அவரை தென் ஆப்பிரிக்க அரசு விட்டு விடவில்லை. மீண்டும், 1961-ம் ஆண்டு ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு மறைமுகமாக சதி செய்தார் என்று கூறி அவரைக் கைது செய்யப் புதிய பிடிவாரண்டைப்போட்டது!

ஆனால் இந்த முறை மண்டேலா சுதாரித்துக் கொண்டார். பொலீசுக்கு டிமிக்கி கொடுக்க பல்வேறு மாறுவேடங்களை அணிந்து மக்களைச் சந்தித்து விடுதலைப் போரைத் தொடர்ந்தார்.

தென் ஆபிரிக்க அரசு மண்டேலாவை வலைவீசித் தேடிக் கொண்டிருந்த நேரம். 1961-ம் ஆண்டு எத்தியோப்பியாவின் தலைநகர் அடிஸ் அபாபாவில் ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த மாநாட்டில் திடீரென்று தோன்றிப் பேசி, மண்டேலா அனைவரையும் திகைப்பில் ஆழ்த்தினார்.

அதன் பிறகு தாய்நாடு திரும்பிய மண்டேலாவைப் பஸ்போர்ட் இல்லாமல் வெளிநாடு சென்றதாகக்கூறி, அரசு கைது செய்தது. 1962-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் அவருக்கு 5 ஆண்டுகள் ஜெயில் தண்டனை விதிக்கப்பட்டது. இதற்கிடையே மண்டேலா, அரசைக் கவிழ்க்கச் சதித்கிட்டம் தீட்டியதாக 1964-ம் ஆண்டு ஜூன் மாதம் 12-ந் தேதி மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டார்.

அன்று சிறையில் 2-வது முறையாகத் தொடர்ந்து அடைக்கப்பட்ட மண்டேலா, அதன்பிறகு இன்று வரை அவர் விடுவிக்கப்படவே இல்லை.

இப்போது தென்ஆபிரிக்க அரசின் அதிபராக இருக்கும் போத்தாவும் சரி: முன்பு அதிபராக இருந்த வெர்ன்வவுர்டாக இருந்தாலும்சரி. கறுப்பர் இனத்தவர்மீது அடக்கு முறைகளை ஏவிவிட்டே வந்திருக்கிறது. இதுவும் மண்டேலா சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் ஆண்டுகள் தொடர்கதையாகப் போய்க் கொண்டேயிருப்பதும், கறுப்பர்களிடையே போராட்டம் வலுப்பெறுவதற்குக் முக்கிய காரணமாகும்.

இன்று மண்டேலாவை விடுதலை செய்தாலும் ஆபத்து, செய்யாவிட்டாலும் ஆபத்து என்ற நிலையில்; போத்தா அரசு சிக்கித் தவிக்கிறது. கடந்த 26ஆண்டுகளாக சிறையில் இருக்கும் மண்டேலாவை உலக நாடுகள் எல்லாமே ஆதரித்து வருகின்றன. இது போத்தாவின் நிறவெறி பிடித்த வெள்ளை அரசுக்குக் கவலை அளிப்பதாக இருக்கிறது.

இந்தநிலையில் மண்டேலாவின் மனைவியும் தங்களது இன மக்களை விழித்தெழுவதற்கு எல்லாவிதமான பிரசாரங்களையும் முடுக்கிவிட்டு வருகிறார். இதனால் ஆத்திரமடைந்த அரசு, வின்னி தங்கியிருக்கும் வீட்டை சுற்றி வளைத்து குண்டுவீசியும், துப்பாக்கிச்சூடு நடத்தியும் கூட பார்த்துவிட்டது. போத்தா அரசின் இந்தச் செய்கையால் வின்னி மண்டேலாவுக்கு செல்வாக்குப் பெருகியதே தவிர, யாரும் பயந்து போராட்டத்தைக் கைவிட்டுவிட்டு ஓடிவிடவில்லை. இதுவும் போராட்டம் இன்று கொளுந்துவிட்டு எரிவதற்கு முக்கியகாரணமாகும்.

அரசும் மண்டேலாவை விடுதலை செய்ய எத்தனையோ முறை முன்வந்தது. ஆனால், மண்டேலா பிடிவாதமாக இருந்து விட்டார். முதலில் உங்கள் இராணுவம், பொலீசின் பயங்கரவாதத்தை நிறுத்தி விட்டு வாருங்கள்... பிறகு பேசுவோம் என்று உறுதியாகக் கூறிவிட்டார்.

இப்போது போல்ஸ்மோர் சிறையில் இருக்கும் அவர், காலையில் 4½ மணிக்கே எழுந்து விடுகிறார். 2 மணி நேரம் கடுமையாக உடற்பயிற்சி செய்கிறார். அதில், சைக்கிள் ஓட்டும் பயிற்சியும் உண்டு. தனது 70-ஆவது வயதிலும் அவர் மிகவும் சுறுசுறுப்போடு இருக்கிறார்.

ஜெயிலில் மண்டேலாவுக்கு சில பத்திரிகைகள் மட்டுமே படிக்கக் கொடுக்கப்படுகிறது. அதுவும் பெரும்பாலும் தணிக்கை செய்யப்பட்டு கொடுக்கப்படும். அதேபோல் உள்ளூர் வானொலியை மட்டுமே அவர் கேட்பதற்கு அனுமதிக்கப்பட்டு இருக்கிறது.

கடந்த ஆண்டு மண்டேலாவின் 69ஆவது பிறந்த தினம் அவர் ஜெயிலில் இருக்கும் வெள்ளிவிழா ஆண்டாகக் கொண்டாடப்பட்டது. அப்போது அவருக்கு பிறந்தநாள் கேக் வெட்டக்கூட அனுமதி அளிக்கப்படவில்லை. அதேபோல் அவர் குடும்பத்துடன் போட்டோ எடுத்துக்கொள்ளவும் மறுக்கப்பட்டது.

இன்று எல்லா நாடுகளுமே மண்டேலாவின் விடுதலைக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வருகின்றன. மேலும் பல நாடுகள் தென் ஆபிரிக்கா மீது பொருளாதாரத் தடை விதித்து விட்டன.

ஆனாலும், அதிபர் போத்தா பிடிவாதமாக இருக்கிறார். பிடிவாதம் தளருமா? மண்டேலா விடுதலை யாவாரா? உலகம் இவற்றுக்கான பதிலை எதிர்பார்த்திருக்கிறது. ★

# பண்ருட்டியைத் தாக்கி கருணாநிதி கடிதம்!

கருணாநிதி சேலை கட்டினால் எப்படி இருப்பார்?

ஜெயலலிதா போல் என்று பண்ருட்டி இராமச்சந்திரன் கூறப்போய், கருணாநிதியின் கோபத்தைக் கிளறிவிட்டிருக்கிறார்.

பண்ருட்டி உட்பட நான்கு பேரை ஜெயலலிதா தனது அணியில் இருந்து வெளியேற்றி விட்டார் அல்லவா!

இது குறித்து பண்ருட்டி ஓர் அறிக்கையை விடுத்தார்:

'கணக்குக் கேட்டதால் எங்களைக் கட்சியை விட்டு நீக்கியதன் மூலம், தானொரு சேலை கட்டிய கருணாநிதி என்பதை ஜெயலலிதா புலப்படுத்தி இருக்கிறார்'— என்று பண்ருட்டி தனது அறிக்கையில் தெரிவித்திருந்தார்.



ஜெயலலிதா

ஜெயலலிதா பற்றி என்ன கேள்வி கேட்டாலும் 'நோ கமண்ட்' என்று சொல்லி வரும் கருணாநிதிக்கு 'பண்ருட்டி'யின் உவமை 'பலாப் பழமாக' அமையவில்லை.

'முரசொலி'யில் பண்ருட்டியைக் கடுமையாகச் சாடி எழுதும் அளவுக்கு கருணாநிதிக்கு ஆத்திரம் ஏற்பட்டு விட்டது.

'தெருநாய்' என்று வர்ணித்து கருணாநிதி 'தனது பத்திரிகை'யில் கடிதம் எழுதியிருக்கிறார்.

கடிதத்தில் கருணாநிதி எழுதியிருப்பதாவது;

எங்கேயோ யாரோ அடிக்க 'அடிபட்ட அது' என்மீது விழுந்து பிராண்டிப் பார்க்கிறது [illegible] அடுத்த தலைமையை [illegible] என்று தூற்ற 'அது'க்கு உரிமை உண்டு.

அதற்காக அந்தத் தலைமையைத் தாக்க 'அது' பொறுக்கிய வாசகம் 'சேலை கட்டிய கருணாநிதி'

கோவணம் கட்டத் தெரியாத சிறுவனுக்குக் கூடப்புரியும் அப்போது எம். ஜி. ஆர். கேட்ட கணக்கு என்ன

**தமிழகத்திலிருந்து தி. மேனன்**

என்பதும் இப்போது இவர்கள் கேட்ட கணக்கு என்ன என்பதும்!

எம். ஜி. ஆர். கேட்டது கட்சிக் கணக்கை அல்ல; தி. மு. க. செயலாளர்களின் சொத்துக் கணக்கை!

யாரையோ தாக்குவதற்கு என்னை இழுப்பானேன்? இன்றைக்கு இப்படி அர்ச்சனை.

அன்றைக்கு ஒரு பத்திரிகையில் 'அது' என்ன சொன்னது?

★ எம். ஜி. ஆருக்கும் அவருக்கும் இடையே பாலமாக இருந்தேன். இவர் கடிதம் கொடுப்பார். அதைக் கொண்டுபோய் எம். ஜி. ஆரிடம் கொடுப்பேன். எம். ஜி. ஆரின் உத்தரவுப்படி எம். ஜி. ஆரும் அவரும் டெலிபோனில் பேசுவதை ஒட்டுக் கேட்டு ரசிப்பேன்'

அந்த இவர் 'அதன்' வாலைப் பிடித்து வெளியே துரத்தி விட்டார். துரத்தியவரின் வீட்டின் முன்னால் நின்று குரைப்பதுதானே!

சில நேரங்களில் தெருநாய்களுக்குப் பைத்தியம் பிடிப்பதும் உண்டு. சேலை, வேட்டி என்று குரைத்துக்கொண்டிருந்தால் சிறுவர்கள் கல் எடுத்து எறிவார்கள். அதற்குள் முனிசிப்பில் வண்டி வந்துவிட்டால் ஒரு வகையில் நல்லது.

உடன் பிறப்பே, இன்றைய கடிதம் வழக்கத்துக்கு மாறாக கடுமையாக அமைந்து விட்டது. நோய் அப்படி. அதனால் சிகிச்சை முறையும் கொஞ்சம் கடுமை'—

இப்படி கருணாநிதி எழுதியிருக்கிறார். ★

## வீட்டுக்கு ஒரு அகத்தி மரம்

அகத்திக்கீரையில் 65 விதமான சக்திகள் அடங்கியிருக்கின்றன. மலச்சிக்கல், பித்தம், அதிகமாக உள்ளவர்கள் அகத்திக் கீரையை வாரம் ஒரு முறை சாப்பிடவேண்டும். வெய்யிலில் அலையும் வேலை உடையவர்களும், காப்பி, டீ அதிகம் சாப்பிடுகிறவர்களும் அகத்திக்கீரையை உணவில் அடிக்கடி சேர்த்துக்கொள்ள வேண்டும்.

தொகுப்பு:- க. கனகராசா

## பொது அறிவுப்போட்டி இல. 11

1. நீரில் நீந்தத் தெரியாத மிருகம் எது? ... ... ... யானை / ஒட்டகச்சிவிங்கி
2. நாட்கணக்கில் பறக்கும் பறவை எது? ... ... பச்சைக்கிளி / வெட்டுக்கிளி
3. ஆண்/பெண் ஒன்றாக உள்ள ஐந்து எது? ... ... ... ... மண்புழு / ஓணான்
4. குயிற்பாட்டுப் பாடிய கவிஞர் யார்? ... ... ... கண்ணதாசன் / பாரதியார்
5. 'செக்ஸ்' சாமியார் என்று பெயரெடுத்தவர் யார்? ... ... ... ... ... சுப்பிரமணியசுவாமி / ரஜ்னீஸ் சுவாமி
6. முக்கனிகளில் ஒன்று எது? ... ... ... ... ... ... ... பலாப்பழம் / அன்னுசி
7. பயணம் செய்பவனுக்குத் துணை எது? ... ... கற்றகல்வி / தேடிய பணம்
8. ஒளவையார் கூறிய அரியது எது? ... ... தெய்வப்பிறவி / மானிடப்பிறவி
9. ஒலிம்பிக் போட்டி இம்முறை எங்கு நடைபெறுகிறது? ... ... சோல் / ஏதென்ஸ்
10. 'பைங்கிளி' பட்டம் எடுத்த நடிகை யார்? ... ... நதியா / சரோஜாதேவி
11. தலையில் சூடிக்கொள்வது எது? ... ... ... ... ... ... ... பூ / கிரீடம்
12. 'பிரமிட்' உள்ள நாடு எது? ... ... ... ... ... ... இஸ்ரவேல் / எகிப்து

பெயர்:- ..................

விலாசம்:- ........................

................

பொது அறிவுப்போட்டி இல: 11
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

———————— இங்கே வெட்டுக ————————

**நிபந்தனைகள்:**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ளமுடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 31. 8. 88 புதன்கிழமைக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**முதலாம் பரிசு: 100 ரூபா**
**இரண்டாம் பரிசு: 50 ரூபா**
**மூன்றும் பரிசு: 25 ரூபா**




## ஆண்டவா! ஏனோ சொல்வாய்!

1. ஆண்டவா எம்இறைவா
அகிலத்தில் உந்தன்பெயர்
மேன்மையா யெங்கும்நின்று
மாண்புற்றுத் திகழ்கின்றது
எத்தனை மேன்மைஆஹா
எண்ணத்தில் வடிக்கஒண்ணு
அத்தனை மேன்மைமேன்மை
அற்புத மேன்மையல்லோ
உத்தம ஆண்டவனே
உந்தனின் மகத்துவமும்
விண்ணக மோட்சத்திலே
விளங்கிடச் செய்துவைத்தாய்.

2. உன்னுடை பெயரை அந்த
உன்னத நாமந்தன்னை
நல்முறை யாய்ப்புகழ்ந்து
நேர்த்தியாய் உச்சரிக்க
உலகினில் சிறுவர்க்கு நீ
உண்மையாய்ப் பூரணமாய்
உளத்தினில் படியும் வண்ணம்
கற்றுமே கொடுத்தாயல்லோ
உந்தனின் பகைவர்களும்
பழிகாரக் கூட்டங்களும்
உந்தனின் இச்செயலால்
உளத்திலே கலக்கங்கொண்டு
முற்றுமாய் வெட்கிநாணி
மௌனத்திலே ஆழ்ந்திட்டார்கள்.

3. இட்டமாய் வானத்தைநான்
இரவினில் நோக்கிஅங்கு
உன்னுடை கைவிரலின்
உன்னதச் செயலைக்காண்பேன்
உன்னுடை ஆக்கங்களாய்
உருவாகி உள்ளஒளித்
தாரகைக் கூட்டத்தையும்
தாரகைக் கூட்டத்தோடு
வான்தரை மீதுஅங்கு
வான்வீதி தனில்உலாவும்
வெண்மதி நிலவினையும்
வடிவாகக் காணுகின்றேன்.

4. இவ்அதி சயங்கள்செய்யும்
இறையவா மண்உலகின்
மனிதனோ எம்மாத்திரம்
மிக மிக அற்பமல்லோ
புவியிலோ அவனுக்காக
பரனே நீ ஏன்கவலைப்
படுகிறாய் என்பதுதான்
புரியாத புதிர்எனக்கு!
அழுகிறாய் அவனுக்காக
ஆண்டவா ஏனோசொல்வாய்!

5. உன்னுடை தரத்தைவிட
குறைவாக மானிடனை
விண்இறை நீபடைத்தாய்
இருந்தாலும் அவன்தலையில்
மகிமையின் மணிமுடியும்
மேன்மையின் மணிமுடியும்
பெருமையில் சூட்டிவைத்தாய்
பாரினில் மதிக்கவைத்தாய்.

வேதாகம சங்கீதம் 08; கவிதை வடிவம்;
நவாலியூர் சி. என். செல்லத்துரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ பகி சேட்ஸ் ★ ஸ்கேட் &பிளவ்ஸ்
★ புறக்ஸ் ★ பேபி சூட்ஸ்
★ லேடீஸ் பகி பிளவ்ஸ்
அனைத்திற்கும் யாழ்நகரில்
புதிய ஓர் சங்கமம்
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

சஞ்சீவி சஞ்சிகை
சனிக்கிழமை 20-08-1988

நவநாகரிகத்திற்கேற்ப
★ பிறிடைம் ★ பாட்லி
★ றிமோட் கொன்ரோல்
★ அக்கினி நட்சத்திரம்
மற்றும் எல்லா வகையான
பிளவ்ஸ் பீஸ் வகைகளுக்கும் யாழ்நகரில்
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.

# வடக்கு - தெற்கு கொரியாக்கள் மத்தியில் நிலவும் பதற்ற நிலை தணியும் அறிகுறிகள்

## கொரிய இணைப்புக்கு ஆதரவான சக்திகளின் கை தென்கொரியாவில் ஓங்குகிறது

ஆப்கானிஸ்தான், கம்பூச்சியா, ஈராக் - ஈரான், அங்கோலாப் பிரச்சினைகளில் சமீபத்தில் ஏற்பட்ட திடீர்த் திருப்பங்களின் சாயல் உலகில் மற்றொரு நெருக்கடிப் பிரதேசமாக இருந்து வரும் கொரியாவிலும் தற்போது தென்பட ஆரம்பித்துள்ளது.

இருகொரியாக்களும் உடனடியாக இணையும் வாய்ப்பு இல்லாவிட்டாலும் கடந்த 35 வருட காலமாக நிலவி வரும் பதற்றநிலை தணியும் சாத்தியங்கள் தென்படுகின்றன.

இரு கொரியாக்களையும் இணைக்கும் சக்திகளின் கை தென்கொரியாவில் ஓங்கி வருவதும்—

வடகொரியாவுடன் சமரசம் ஒன்றுக்கு வருவதற்கு தென்கொரிய ஜனாதிபதி றோ தி வூ (Roh Tae Woo) முயற்சிப்பதும் கொரிய அரசியலில் சமீபத்தில் ஏற்பட்டு வரும் திடீர் மாற்றங்கள் ஆகும்.

### எல்லையை நோக்கி அணிவகுப்பு

இதற்குச் சிரம் வைத்தாற் போல் இவ்வாரம் தென்கொரியப் பல்கலைக்கழக மாணவர்கள் பெரும் ஆர்ப்பாட்டங்களையும் அணிவகுப்புகளையும் நடத்தினர்.

வடகொரிய மாணவர்களுடன்பேச்சுவார்த்தைநடத்தப் போவதாகக் கூறிக்கொண்டு இருகொரியாக்களையும் பிரிக்கும் யுத்த சூன்யப் பகுதிக்கு அவர்கள் அணிவகுத்துச் செல்ல முயன்றபோது தென்கொரியப் பாதுகாப்புப் படையினர் அவர்களைத் தடுத்து நிறுத்தினர்.

கம்யூனிஸ்ட்டுகளின் ஆதிக்கத்தின் கீழ் உள்ள வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையில் உள்ள எல்லையில் கொரிய யுத்தத்தின் பின்பு கம்பிவேலிகள் அமைக்கப்பட்டு யுத்த சூன்யப் பிரதேசம் ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின்னர் முழு உலகையும் மீண்டும் ஒரு யுத்தத்துக்குள் தள்ளக்கூடிய பேராபத்தை உருவாக்கியது கொரிய யுத்தம்.

இந்த யுத்தம் முடிவடைந்து 35 வருடங்கள் சென்ற போதிலும் இரு நாடுகளும் இன்னும் பதற்றநிலையிலேயே இருந்து வருகின்றன.

வடகொரியாவின் எந்த ஒரு ஆக்கிரமிப்பையும் தடுத்து நிறுத்தும் நோக்கத்துடன் அமெரிக்கா யுத்த சூன்யப் பகுதியில் தனது 43 ஆயிரம் துருப்புக்களை நிறுத்தி வைத்திருக்கிறது. அமெரிக்க-தென்கொரிய ஒப்பந்தம் இதற்கு வழி வகுக்கிறது.

### வியட்நாம் போல் சாத்தியம் அல்ல

கொரியா ஒரே நாடு. இரு கொரியாக்களும் மீண்டும் ஒன்றுபட வேண்டும் என்பது வடகொரியாவின் அசைக்க முடியாத கொள்கை.

ஆனால் வியட்நாம் போன்று இதனை யுத்தம் மூலம் இணைப்பது சாத்தியம் இல்லை.

வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையில் பல மைல் தூர யுத்த சூன்யப் பிரதேசம் இருப்பதும் தென்கொரிய எல்லையில் அமெரிக்கப் படைகள் நிலை கொண்டிருப்பதுமே இதற்குக் காரணம்.



தென்கொரியாவுக்கும் வட கொரியாவுக்கும் இடையில் உள்ள சூன்யப் பிரதேசத்தில் அமைப்பட்டுள்ள அதி பாதுகாப்பான முள்கம்பி அரணுக்குப் பின்னால் அமெரிக்கப் படையினர் உஷார் நிலையில் இருந்து வரும் காட்சி.

யுத்தம் மூண்டாலும் அது உலக யுத்தமாக மாறிவிடும்.

வியட்நாமில் உள்ளது போன்று அடர்ந்த காடுகள் வடகொரிய — தென்கொரிய எல்லையில் இல்லை, பத்துவருட காலத்தில் சுமார் 10 லட்சம் மக்களைப் பலி கொண்ட பின்பு 1975 ஆம் ஆண்டு வியட்நாம் யுத்தம் முடிவடைந்தது; இன்று வியட்நாம் ஒரே நாடாக இருந்து வருகிறது.

நேரடி யுத்தம் மூலம் இணைப்பு சாத்தியப்படாததினால்தான் தென்கொரியாவில் உள்ள கொரிய இணைப்புக்கு ஆதரவான அரச எதிர்ப்புச் சக்திகளுக்கு வடகொரியா மறைமுகமாக ஆதரவு வழங்கி வருகிறது.

இந்த சக்திகளின் எழுச்சியே சமீபத்திய தென் கொரியத் தேர்தல்களில் எதிரொலித்தது.

தென் கொரியத் தேசிய அசெம்பிளிக்கு நடைபெற்ற தேர்தல்களில் ஜனாதிபதி றோ தி வூவின் ஆளும் ஜனநாயக நீதிக்கட்சி (Democratic Justic Party) தென் கொரிய நடாளுமன்றமான தேசிய அசெம்பிளியில் தனித்துப்பெரும்பான்மை ஸ்தானங்களைப் பெறத் தவறி இருந்தது.

அசெம்பிளியின் மொத்த 299 ஸ்தானங்களில் 125ஸ்தானங்களையே இது கைப்பற்றியது கொரிய இணைப்பை வற்புறுத்தும் எதிர்க்கட்சிகள் கணிசமான ஆதரவைப் பெற்றிருந்தன.

### 6 அம்சயோசனை

கொரிய இணைப்பை வற்புறுத்தும் புதிய அரசியல் சூழ்நிலை தென்கொரியாவில் உருவாகி வருவதை அடுத்து ஜனாதிபதி றோ தி வூ 6 அம்ச சமரசயோசனை ஒன்றைக் கடந்த மாதம் வெளியிட்டிருந்தார்.

★ குடும்பங்கள் இரு கொரியாக்களிலும் பிரிந்து இருக்கும் பட்சத்தில் அங்கத்தவர்களைப் பரிமாற்றிக் கொள்வது.

உலக உலா
ஏ.ரி. சீலன்

★ இரு கொரியாக்களுக்கும் இடையில் பகிரங்க வர்த்தகத்தை ஏற்படுத்துவது.

★ தபால்களைப் பரிமாறிக் கொள்வது.

இந்த 6 அம்சயோசனைகளில் மேற்கூறப்பட்டவை பிரதானமாகக் கருதப்பட்டன.

இந்த யோசனைகளை வடகொரிய ஜனாதிபதி கிம் இல் சங் (Kim il Sung) நிராகரித்திருந்தார்.

பதிலாக மாற்று யோசனை ஒன்றை அவர் வெளியிட்டார்.

★ தென் கொரியாவின் தேசிய அசெம்பிளியின் 299 அங்கத்தவர்களும் வட கொரியாவின் சுப்பிரீம் மக்கள் அசெம்பிளியின் 655 அங்கத்தவர்களும் ஒன்று கூடி விவாதம் நடத்தி அனுக்கிரமிப்பு ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடவேண்டும்.

★ தென் கொரியாவில் உள்ள அமெரிக்கப் படை வாபஸ் பெறப்படவேண்டும்.

இவையே வட கொரியா தெரிவித்த மாற்று யோசனைகள் ஆகும். அத்துடன் செப்டம்பர் 17 ஆம் திகதி தென் கொரிய தலைநகரான சோலில் நடைபெறும் சர்வதேச ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் வடகொரியாவும் கலந்து கொள்ளும் என்று வட கொரியா திடீரென்று அறிவித்தது.

இரு நாடுகளின் முழு அசெம்பிளி உறுப்பினர்களும் இணைந்து விவாதம் நடத்தி ஒப்பந்தம் ஒன்றுக்கு வரும் வட கொரியாவின் யோசனையைத் தென் கொரியா உடனடியாக நிராகரிக்காது விட்டாலும் அது சாத்தியமற்றது என்றே கருதுகிறது.

இரு தரப்பிலும் இருந்து தலா 15 உறுப்பினர்கள் எல்லையில் உள்ள யுத்த நிறுத்தக் கிராமமான பன்கன் ஜொம்மில் சந்தித்து பூர்வாங்கப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பான திட்டம் ஒன்றை தென் கொரியா தற்போது வகுத்து வருகிறது. ஆனால் இதனை வட கொரியா ஏற்குமோ தெரியாது.

தற்போது தென் கொரியா ஒலிம்பிக் போட்டிகளில் முழுக் கவனம் செலுத்தி வருவதால் உடனடி திருப்பம் எதுவும் சாத்தியமாகாது என்றே கருதப்படுகிறது.

ஒலிம்பிக் போட்டி அக்டோபரில் முடிவடைந்த பின்பே எதுவும் சாத்தியப்படலாம். ★

# மென்பந்து கிரிக்கெட் விளையாட்டு தனிசபை அமைக்கப்பட வேண்டும்

கிரிக்கெட் ஆட்டங்கள் போன்று மென்பந்து கிரிக்கெட்போட்டிகள் இங்கு பிரபலம் ஆகவில்லை.

மூலை முடுக்குகளிலெல்லாம் மென்பந்து கிரிக்கெட் ஆட்டங்கள் நடைபெறுகின்றன; அதற்கென்று ஒரு விதிமுறை இல்லை; ஒழுங்கும்இல்லை.

எந்த ஒரு விளையாட்டையும் விதிகளுக்கமைய - ஒழுங்காக ஆடப் பழகவேண்டும்.

பல இடங்களிலும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள், நொக்கவுட் போட்டிகள் நடத்தப்பட்டுவருகின்றன.

ஆனால் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொருவகையான விதிகள்.

இதனால் மென்பந்துக் கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் பெரிதும் சிரமப்படுகிறார்கள்.

இவற்றைக் கருத்திற் கொண்டு மென்பந்து கிரிக்கெட் முன்னோடிகள் 'மென்பந்து கிரிக்கெட் சபை'ஒன்றை அமைக்கவேண்டும்.

அந்தச்சபை மென்பந்து கிரிக்கெட் ஆட்டத்திற்கான விதிகளை வரையறுத்து ஆட்டத்திற்குத் தேவையான ஒழுங்குமுறைகளை வகைப்படுத்தவேண்டும். அத்துடன் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் மத்தியஸ்தர்களே மென்பந்து கிரிக்கெட் போட்டிகளுக்கும் மத்தியஸ்தம் வகிப்பது வரவேற்கத்தக்கது.

இப்படியான ஒரு கட்டமைப்பு உருவாக்கப்படும் போது—

மென்பந்து கிரிக்கெட்சபையில், ஒவ்வொரு மென்பந்து கிரிக்கெட் அணிகளும் தம்மைப் பதிவுசெய்துகொள்ளும் என்பதில் ஐயமில்லை.

இப்படி ஒரு ஒழுங்குமுறையான அணிகளிடையே போட்டிகள் நடத்தப்படும் பட்சத்தில் வீரர்களின்திறமை வளர்வது சாத்தியமாகும்.

இதேவேளை வடமராட்சிப் பகுதியில் மென்பந்து கிரிக்கெட்டுக்கென ஒருசபை அமைப்பதற்கு சில முன்னாள் வீரர்கள் முயன்றுவருவதாகத் தெரியவருகிறது.

அவர்களின் இந்த முயற்சி பாராட்டுக்குரியதே.

முயற்சியைத் தொடக்கியவர்கள் இடைநடுவில் அதைக் கைவிடாது செய்து முடிக்க வேண்டும். அதற்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்குவது அவசியமாகிறது.

இப்படியான நடவடிக்கை மூலம் கிரிக்கெட் ஆட்டங்களை ஆடமுடியாத வீரர்களின் குறையை மென்பந்து கிரிக்கெட்மூலம் தீர்த்துக்கொள்ளலாம்.

இது பெரும்பாலான மென்பந்தாட்ட வீரர்களின் ஆவலாகும். ★

- விவியன் -

### பந்தும் குருவியும் மியூசியத்தில்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் கப்டன் இம்ரான் கானின் மாமனார் 78 வயதில் அண்மையில் காலமானார்.

இதில் என்ன முக்கியத்வம் உண்டு என்று நீங்கள் கேட்கலாம்.

மாமனாரின் பெயர் ஜெஹாங்கிர் - பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு ஒரு காலத்தில் கப்டனாக இருந்தவர்.

இவர் மிகச் சிறந்த வேகப்பந்து வீச்சாளராக விளங்கினார்.

1932 இல் இங்கிலாந்து லோர்ட்ஸ் மைதானத்தில் விளையாடியபோது. இவர் வீசிய பந்து பட்டு அங்கு நின்ற ஒரு சிட்டுக்குருவி துடித்துச் செத்தது.

இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்ததற்கான நினைவாக அந்தப் பறவையையும். பந்தையும் லண்டனில் உள்ள மியூசியத்தில் பிரிட்டிஷ்காரர்கள் இன்னும் பாதுகாத்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ★

# சோல் ஒலிம்பிக் போட்டி; சில செய்திகள்

செப்டம்பர் 17இல் ஆரம்பமாகும் சோல் ஒலிம்பிக் ஹொக்கிப் போட்டியில் 12 நாடுகள் கலந்து கொள்கின்றன.

முன்னாள் இந்தியச் சாம்பியன் ஆன இந்தியா 'பி' பிரிவில் இடம் பெற்றுள்ளது.

முதல் போட்டியிலேயே இந்தியா ஆடுகிறது. அது ரஷ்ய அணியோடு மோதுகிறது.

இந்த இரண்டு அணிகளும் மோதும் முதல் போட்டி செப்டம்பர் 18 ஆம் திகதி நடக்கின்றது.

ஆட்டம் இலங்கை நேரப்படி பகல் ஒரு மணிக்கு நடைபெறுகிறது. ★

வெளிநாடுகளில் இருந்து கார்கள் இறக்குமதி செய்வதற்கு தென்கொரிய அரசு தடைவிதித்துள்ளது

சோல் ஒலிம்பிக் போட்டி சம்பந்தமான பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஒன்றாக இது அமைகிறது.

இறக்குமதி செய்யப்படும் கார்களின் என்ஜின் அல்லது சிலிண்டரில் வெடிகுண்டுகளைப் பயங்கரவாதிகள் மறைத்து வைத்து அனுப்பி நாசவேலையில் ஈடுபடலாம் என்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ★

சோல் ஒலிம்பிக் போட்டியின் அங்குரார்ப்பண விழாவைப் பார்க்க டிக்கட்டுக்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

ஒரு டிக்கட் 50 ஆயிரம் ரூபா வரை 'கறுப்புச் சந்தை' யில் ரசிகர்கள் வாங்கி வருகிறார்கள்.

தொடக்கவிழா நிகழ்ச்சியை ஒளிபரப்பும் பணியில் 229 டெலிவிஷன் கமெராக்களுடன் 10 ஆயிரம் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஈடுபடவிருக்கிறார்கள். ★

### இம்ரான்கான் பிரச்சினை

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி கப்டன் இம்ரான்கான் 'ஆல் ரவுண்ட்வியூ' என்கிற

விளையாட்டுத் துறை

தலைப்பில் ஒரு புத்தகம் எழுதினார்.

அதில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நிர்வாகிகளைத் தாக்கி இருந்தார்.

இதையொட்டி இம்ரான் கானைத் தாக்கி முன்னாள் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை செயலாளர் நசீம் ஒரு பத்திரிகையில் எழுதி இருக்கிறார்.

'1985 ஆவது ஆண்டு பெஷாவர் நகரில் மேற்கு இந்தியதீவு — பாகிஸ்தான் அணிகள் இடையே ஒரு நாள் சர்வதேச போட்டி நடந்தது. அப்போது இம்ரான்கான் தமது ஹோட்டல் அறையில் இளம் பெண்ணோடு இருந்தார்' — என்று நஸீம் எழுதி இருக்கிறார். ★

# முக்கோணக் கிரிக்கெட் போட்டி

## இந்திய அணியின் கப்டன் கபில்தேவ்

முக்கோணக் கிரிக்கெட் போட்டியை இந்தியாவில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

லண்டனில் நடந்த சர்வதேசக் கிரிக்கெட் குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்தியா, இங்கிலாந்து, நியூசிலாந்து ஆகிய 3 அணிகள் இப்போட்டியில் மோதும்.

டிசம்பர் மாதம் இப்போட்டி இந்தியாவில் ஆரம்பமாகிறது.

இறுதிப் போட்டியைக் கிறிஸ்மஸ் பண்டிகைக்கு இரண்டு தினங்கள் முன் நடத்த வேண்டும் என்று நியூசிலாந்து கிரிக்கெட் சபை வேண்டுகோள் விடுத்தது.

இந்த வேண்டுகோள் ஏற்கப்பட்டு டிசம்பர் 22 ஆம் திகதி கல்கத்தாவில் இறுதிப் போட்டியை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

இதில் பங்குபற்றிய இந்திய அணிக்குக் கப்டனாக கபில் தேவ் கலந்து கொள்ளலாம் என்று கருதப்படுகிறது. ★



புரோட்டீன் நிறைந்த
புரோட்டீனெக்ஸ்®
பக்கெட் ஒன்றை
இன்றே வாங்குங்கள்!




Grant BJK&E PFL 1158
புரோட்டீனெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்-பொருட்களும் அடங்கியது.
புரோட்டீனெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும்
சக்தியை மீட்டுத் தருகிறது.
சில்லறை விலை
ரூபா 68/55
125 கிறும்
Pfizer
® ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org